Sangathamil

# சங்கத்தமிழ்

யாதும் ஊரே யாவரும் கேளிர்

குரல் – 64 | சர்வதேச மின் செய்தித்தாள் | ஜனவரி 01 2024





## தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்































விளம்பரத் தொடர்புக்கு அழையுங்கள்: 437.345.4203



# தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

உலக நாடுகள் தமது சொந்தப் பொருளாதாரக் கேந்திர நலன்களை முன்னெடுக்கின்ற போதும் மனித உரிமைகளுக்கும் ஜனநாயக விழுமியங்களுக்கும் மதிப்புக்கொடுக்கத் தவறுவதில்லை. இந்தப் பிரபஞ்சமும்சரி, மனித வாழ்வியக்கமும் சரி, உலக உறவுகளும் சரி தர்மத்தின் சக்கரத்திலேயே இன்னும் சுழல்கின்றன. இதனால்தான், விடுதலைக்காகப் போராடிய கிழக்குத்தீமோர், மொன்ரி நீக்ரோ போன்ற தேசங்கள் சர்வதேசத்தின் ஆதவோடும் அனுசரணையோடும் புதிய தேசங்களாக அடிமை விலங்கை உடைத்தெறிந்து கொண்டு விடுதலை பெற்றன. கொசோவோ போன்ற தேசங்களின் விடுதலைக்காகவும் சர்வதேசம் தொடர்ந்தும் தீவிரமாகச் செயற்பட்டுவருகிறது.






## சங்கத்தமிழ்

### தொடர்புகளுக்கு

**தொலைபேசி**

437 345 4203

**மின்னஞ்சல்** (Email)

sangathamilcanada@gmail.com

**இணையத்தளம்** (Website)

www.sangathamil.ca

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீடடிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சி யும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# கேணல் கிட்டு

## சதாசிவம் கிருஸ்ணகுமார்
## வல்வெட்டித்துறை



கேணல் கிட்டுவும் அவருடன் வந்த ஒன்பது தோழர்களும் தீயோடு தீயாகி வங்கக் கடலில் சங்கமித்த அந்தச் சம்பவம் சரித்திரம் மறக்காத ஒரு சாவு மட்டுமல்ல, அது எங்கள் நெஞ் சங்களை நீங்க மறுக்கும் நெடும் அலையாகிஇ நினைவெங் கும் நிலைபெற்று விட்டதொன்று. கேணல் கிட்டு தேசியத் தலைவரால் அதிகம் நேசிக்கப்பட்டவர். அவரின் அன்பை அனுபவித்தவர். தலைவரின் இலட்சியத்திற்கு தோள் கொடுத்து அவரின் மனதோடு ஒன்றித்து வாழ்ந்தவர்

அதனால்தான், தமிழீழத் தேசியத் தலைவர் “கிட்டுவை ஆழ மாக நேசித்தேன், தம்பியாக, தளபதியாக, எனது சுமைகளைத் தாங்கும் உற்ற தோழனாக நான் அவனை நேசித்தேன். இது சாதாரண மனித பாசத் திற்கு அப்பாலானது. ஒரே இலட்சியப்பற் றுணர்வில் ஒன்றித்து, போராட்ட வாழ்வில் நாம் பகிர்ந்து கொண்ட அனுபவத்தில் ஒருவரையொருவர் ஆழமாக இனங் கண்ட புரிந்துணர்வில் வளர்த்த நேயம் அது” என கேணல் கிட்டுவிற்கும் தமக்கும் இடையே இருந்த பாசப் பிணைப்பினை வெளிப்படுத்துகிறார். கிட்டு எந்தளவிற்கு தலைவரின் மனதில் இடம்பிடித்தாரோ அதேயளவு தமிழீழ மக்களின் மனங்களிலும் நிறைந்திருக்கின்றார். எந்தக் காலத்திலும் மறக்கமுடியாத அவரின் நினைவுகளோடு இன்று தமிழீழம் நிமிர்ந்து நிற்கிறது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலத்திலிருந்து ஆழப்பதிக்கப்பட்ட கிட்டுவின் வரலாற்றுத் தடங்கள் அழிக்க முடியாத பெரும் பதிவாக பரிணமித்து, தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

1979ல் ஆரம்ப காலப்பகுதி விடுதலைப் போராட்டத்திற்கு அடித் தளமிடப்பட்ட காலம், சதாசிவம் கிருஸ்ணகுமார் என்னும் பதி னெட்டு வயது நிறைந்த இளைஞன் தன்னை விடுதலைப் போராளியாக மாற்றியதன் மூலம் வெங்கிட்டு எனப் பெயர் மாற்றம் பெற்று, பின் கிட்டு என தோழர்களால் செல்லமாக அழைக்கப்பட்டார். கிட்டுவும், இன்னும் சில தோழர்களும் தலைவரிடமே போரியலை நேரில் கற்றார்கள். கிட்டுவின் துடிப் பும், வேகமும் அங்கிருந்தவர்களிடையே அவரை வேறுபடுத் திக் காட்டியது. எதையும் அறிந்துகொள்ள வேண்டுமென்ற வேகமும் எந்த விடயத்தையும் அறிந்துகொள்ளும் ஆற்றலும் கிட்டுவிற்கு இயல்பாகவே இருந்ததால் தலைவரின் எண் ணங்களை, சிந்தனைகளை, மக்கள் மீது அவர் கொண்டிருந்த எல்லை கடந்த பாசத்தை, தலைவரின் அருகில் இருந்த கிட்டு அறிந்துகொள்கிறார். அளவு கடந்த திறமையுடன் வேகமும் விவேகமும் நிறைந்த அவரது செயற்பாடுகள் அவர் மீதான தனி நம்பிக்கை வளரக் காரணமாகின்றன. தன் மீது தலைவர் வைத்திருக்கும் நம்பிக்கையை நிரூபிக்கும் காலம் கனிந்து வரும் வரை கிட்டு காத்திருக்கிறார்.

1983 மார்ச் 04 இல் அற்புதன் தலைமையில் உமையாள்புரம் தாக்குதலுக்காக விடுதலைப் புலிகளின் அணி ஒன்று செல்கிறது. அதில் கிட்டுவும் ஒருவர், தாக்குதலுக்கான களம் தீர்மானிக்கப் படுகிறது. வீதியில் நிலக் கண்ணிவெடிகளை பொருத்திவிட்டு எதிரியின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். கண்ணிவெடிகளை கையாளும் போதியளவு செயற்திறன் போராளிகளுக்கு இல்லாத காலம் அது. இராணுவ வாகனங்கள் இலக்காக அண்மிக்கும் நேரத்தில், துரதிஸ்ட வசமாக வாகனங் களைக் கண்டு மிரண்டு ஓடி வந்த ஆட்டுக்குட்டியின் கால்கள் பட்டு கண்ணிவெடிகள் வெடிக்க போராளிகள் நிலை குலைந்து போகிறார்கள். துப்பாக்கி ரவைகளைக் கக்கியவாறு இரு இராணுவ கவச வாகனங்கள் போராளிகளை நெருங்கிவர, பின்வாங்கிச் செல்வதைத்தவிர வேறு வழி அவர்களுக்குத் தெரியவில்லை. ஆனால், கிட்டு மட்டும் எதிரியை எதிர்கொள் ளும் சாதகமற்ற களநிலையைக் கருத்திற்கொள்ளாது துணிந்து நின்று தான் வைத்திருந்த ஜீத்திறி (யு-3) துப்பாக்கியால் இராணுவ கவசவாகனத்தை நோக்கிச் சுடுகிறார். இலக்குத் தவறவில்லை. சாரதி காயப்பட வாகனம் செயலற்றுப் போகிறது. தலைவரின் நம்பிக்கையை மெய்ப்பித்த மகிழ்ச்சியோடு கிட்டு களம் விட்டு அகன்றார். அவரின் முதல் களமே தனி மனித சாதனையாக ஆரம்பமாகிறது.

குரநகர் இராணுவ முகாம் தாக்குதலுக்கு முன்
02.03.1984



1983 ஏப்ரல் 07இல் விடுதலைப் புலிகளின் தாக்குதல் அணியில் கிட்டு இரண்டாவது பொறுப்பாளராக நிலையுயர்த்தப்பட்டார். இதன்பின் சிறீலங்கா அரசால் திணிக்கப்பட்ட உள்ளூராட்சித் தேர்தலை பகிஸ்கரிக்கும் பொருட்டு கந்தர்மடம் வாக்குச்சாவடி யில் இராணுவம் மீது நடாத்தப்பட்ட தாக்குதல, ஜுலை 23ல் இராணுவ வாகனங்கள் மீது நடாத்தப்பட்ட திருநெல்வேலிக் கண்ணி வெடித்தாக்குதல் என்பனவற்றிலும் கலந்து கொள் கின்றார். இவவாண்டின் இறுதிக் காலத்தில் இந்திய மண்ணில் பயிற்சிக்கெனச் சென்ற இயக்கத்தின் முதற்குழுவின் இரண் டாவது பொறுப்பாளராக கிட்டு நியமிக்கப் படுகின்றார்.




பயிற்சியை முடித்து தமிழீழம் வந்த கிட்டு 1984 மார்ச் 02இல் நடைபெற்ற குருநகர் இராணுவமுகாம் தாக்குதல் உட்பட்ட பல்வேறு தாக்குதல்களில் முக்கிய பங்கு வகித்து நெறிப்படுத் துகின்றார். இதேநேரம் யாழ். மாவட்டத் தளபதியாக இருந்த கப்டன் பண்டிதர் 1985 ஜனவரி 09இல் எதிரியுடனான மோத லில் வீரச்சாவடைய அவரின் இடத்திற்கு கிட்டு தலைவரால் நியமிக்கப்படுகின்றார். யாழ். மாவட்டத் தளபதி ஆனவுடன் யாழ். பொலிஸ் நிலையத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்று நடாத்தி, அங்கிருந்த பெருந்தொகையான ஆயுதங்களைக் கைப்பற்றினார்.

யாழ். மாவட்டத்தில் கிட்டுவின் வெற்றிகரத் தாக்குதல்கள் தொடர்ந்தன. எதிரிப்படை யாழ். மண்ணில் அவனுடைய முகாமுக்குள்ளேயே முடக்கப்படுகிறது. யாழ். கோட்டையை ஆக்கிரமித்திருந்த சிறீலங்கா இராணுவம் கிட்டு என்ற பெயரைக் கேட்டாலே கதிகலங்கிப் போகும் நிலை உருவானது. மக்கள் மத்தியில் கிட்டு என்ற மூன்றெழுத்துப் பெயர் மந்திரமாக உச்சரிக்கப்படுகிறது. யாழ். மண்ணில் எதிரிப்படையை மட்டும் அவர் வெற்றிகொள்ளவில்லை. மாறாகஇ மக்களின் மனங் களையும் அவர் வெற்றிகொண்டார். மக்கள் பிரச்சினையைத் தீர்ப்பதில் அவர் அதிக அக்கறை செலுத்தினார். தொழில் நிலையங்கள், நூலகங்கள், மலிவுவிலைக் கடைகள், பூங் காக்கள் என்பவற்றை நிறுவி மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தினார். இவவாறாகக் கிட்டுவின் சமூகப்பணிகள் விரி வடைய, அவர் தமிழீழத் தேசியத் தலைவரின் சிந்தனைகளைப் பிரதிபலிக்கும் ஒரு ஒப்பற்ற போராளியாக மக்களால் உணரப் பட்டார்.

தமிழீழ மக்கள் மனங்களில் மாத்திரமல்ல, எல்லைகடந்து வாழும் தமிழ் உறவுகள் அனைவருமே கிட்டுவின் வீரசா தனைகளை அறிந்து பெருமிதம் அடைந்தார்கள். விடுதலைப்




புலிகளால் மன்னாரில் வைத்துச் சிறைப்பிடிக்கப்பட்ட இரு சிங்களச் சிப்பாய்களின் விடுவிப்பு தொடர்பாக 1986 நவம்பர் 10இல் சிங்கள இராணுவத் தளபதியான கேணல் ஆனந்த வீரசேகரா, கப்டன் கொத்தலாவை ஆகியோரை தனது இடத்திற்கு அழைத்துச் சந்தித்ததன் மூலம் கிட்டு என்ற பெயர் சிங்கள மக்கள் மத்தியிலும் பிரபல்யம் அடைந்தது.

1987 மார்ச் இறுதியில் தேசத்துரோகி ஒருவனின் கைக்குண்டுத் தாக்குதலினால் தனது இடதுகாலை இழந்த கிட்டு தனது மன உறுதியால் முன்னைய வேகத்துடனும், திடகாத்திரத்துடனும் விடுதலைப் போருக்கு வலுச்சேர்ப்பவராக வளர்ந்து வந்தார். இந்திய இலங்கை ஒப்பந்த காலத்தில் தனது சிகிச்சைக்காக இந்தியா சென்ற கிட்டு ஒப்பந்தம் முறிவடைந்த நிலையில், இந்திய அரசினால் திணிக்கப்பட்ட போரின் உண்மை நிலைப்பாட்டை வெளிக் கொணர பெரிதும் பாடுபட்டார். இந்திய அரசியல் தலைவர்கள், பத்திரிகையாளர்களர், கலைஞர்கள், பேராசிரியர்கள் எனப் பலரையும் சந்தித்து, எமது நிலைப்பாடு தொடர்பாக எடுத்துரைத்தார். எமது தியாக வரலாறுகளை பல வெளியீடுகள் மூலம் இந்திய மக்களின் பார்வைக்குக் கொண்டு வந்தார். இவவாறான நிலையில் கிட்டுவை இந்திய அரசு வீட்டுக்காவலிலும், சென்னை மத்திய சிறையிலும் கைதியாக அடைத்து வைத்திருந்தது. சிறைக்குள் இருந்தபடியே அவர் தமிழகத்திலிருந்து வெளிவரும் தேவி இதழுக்கு போராட்டம் தொடர்பான நீண்ட தொடர் கட்டுரையை எழுதினார். சிறையிலிருக்கும் தன்னை விடுவிக்கும்படி கிட்டு நடாத்திய அகிம்சைப் போருக்கு அஞ்சிய இந்திய அரசு அவரை தமிழீழத்தில் விடுதலை செய்தது. விடுதலை பெற்ற கிட்டு வன்னிக் காட்டில் தலைவரைச் சந்தித்து இந்திய இராணுவத்திற்கு எதிரான போருக்கு இறுதிவரை முகங் கொடுத்தார்.

இந்திய இராணுவம் மெல்ல மெல்ல தோல்விமுகம் காணும் நிலை உருவானது. அமெரிக்காவிற்கு வியட்நாமும், ரஸ்யாவிற்கு ஆப்கானிஸ்தானும் புகட்டிய பாடத்தை தமிழீழம் இந்தியாவிற்குப் புகட்டியது. இந்நிலையில் இலங்கை அரசு இந்தியாவை நிராகரித்து புலிகளுடன் பேச முன்வந்தது. 1989இல் சிறீலங்கா அரசுடன் பேசுவதற்கு கொழும்பு சென்ற குழுவில் அங்கம் வகித்த கிட்டு விடுதலைப் புலிகளின் வெளிநாட்டுப் பிரிவுப் பொறுப்பாளராக அங்கிருந்தபடியே லண்டனுக்குப் பயணமானார்.

கிட்டு லண்டனில் வாழ்ந்த காலத்தில் புலம்பெயர்ந்து வாழ்ந்த தமிழரிடையே போராட்ட உணர்வையும், நம்பிக்கையையும் ஊட்டினார். 'களத்தில், எரிமலை' எனப் பல்வேறு சஞ்சிகைகள் மூலம் ஈழத்தில் நடக்கும் நிகழ்வுகளை மக்களுக்கு எடுத்துச் சென்றார். விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு, விடுதலைப் புலிகளின் கலைபண்பாட்டுக் கழகம், எனப் பல்வேறு அமைப்புக்களையும் வெளிநாட்டில் அமைத்துச் செயற்பட்டார். விடுதலை உணர்வையும், தாய் மண்ணின் பற்றுறுதியையும் தாயக மண்ணை விட்டு புலம்பெயர்ந்த மக்கள் மறந்து போகா வண்ணம் தனது செயற்பாட்டை விரிவுபடுத்தினார். எனினும் கிட்டு எங்குதான் வாழ்ந்தாலும் எப்பணியைச் செய்தாலும் அவர் மனம் தமிழீழ மண்ணையே சுற்றிவந்தது. அவர் தலைவரை, தாயகத்தை, தமிழீழ மக்களை ஆழமாக நேசித்தார். தமிழீழத்தில் எப்போது தனது கால் மீண்டும் பதியும் என ஏக்கத்தோடு காத்திருந்தார்.

கிட்டு எதிர்பார்த்திருந்தது போல தமிழீழத்திற்குச் செல்லும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியது. குவேக்கஸ் சமாதானக் குழுவின் யோசனைகளுடன் ஐரோப்பிய நாடொன்றிலிருந்து சர்வதேச கடற்பரப்பினூடாக எம்.வி அகத் என்ற கப்பலில் கிட்டுவும் அவரது தோழர்களும் பயணமானார்கள். யாரும் சென்று வரக்கூடிய சர்வதேச கடற்பரப்பில் இந்தியா தனது சதிவலையைப் பின்னியது. இந்தியக் கடற்படை சர்வதேச கடல் எல்லையில் கிட்டுவின் கப்பலை மறித்து வலுக்கட்டாயமாக தனது எல்லைக்குள் இழுத்துச் சென்றது. சமாதான முயற்சிகள் பற்றி இந்திய அரசிடம் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவை பயனற்றுப் போயின. குமரப்பா, புலேந்திரன், திலீபன், ஜொனி என எமது தளபதிகளின் தொடர் இழப்புக்குக் காரணமான இந்தியா தனது பொறிக்குள் மூத்த தளபதி கிட்டுவையும் சிக்கவைத்தது. உயிரிலும் பெரிது தன்மானம் என நினைக்கும் தலைவனின் வழியில் வளர்ந்த கிட்டுவும் ஒன்பது தோழர்களும் அன்று ஆட்சியிலிருந்த இந்திய அரசிடம் பணிந்து போகாது, தமிழீழத்தை, தலைவனை நினைத்தவாறே தீயில் கலந்து கடலில் சங்கமித்துப் போனார்கள்.

**கேணல் கிட்டுவின் இறுதி அஞ்சலி நிகழ்வில் தமிழீழத் தேசியத் தலைவர்**

கிட்டுவின் இழப்பு தலைவனின் ஆத்மாவை மாத்திரமல்ல, தமிழினத்தின் ஆத்மாவையே பிழிந்த ஒரு சோக நிகழ்வு. மக்களால் மனதாரப் போற்றப்பட்ட அந்தப்பெரு வீரனை இனி எங்கு காண்போம் எனத் துடித்தனர் மக்கள். பல இழப்புக்களைக் கடந்து வாழக்கற்றுக்கொண்ட மக்களிற்கு கிட்டுவின் இழப்பு ஜீரணிக்கமுடியாத தொன்றாகவே இருந்தது. எனினும் தோல்விகளையும், இழப்புக்களையும் தனக்கான வெற்றியின் பாடமாக்கிக்கொள்ளும் தலைவர், கிட்டுவின் இழப் பிற்கு புதிய பரிமாணத்தைக் கொடுக்கின் றார். "கிட்டு நீ சாகவில்லை, ஒரு புதிய மூச் சாக பிறந்திருக்கிறாய்" எனக்கூறி தனக் குள் ஒரு வீரசபதம் எடுத்துக்கொள்கிறார்.

இன்றைய உலகில், தமிழினத்தின் விடுதலைப் போராட்டம் எவராலும் நிராகரிக்க முடியாத பெரும் வடிவம் எடுத்ததில் கிட்டுவின் பங்கு இன்றியமையாதது. உலகெங்கும் சிதறிவாழ்ந்த தமிழ் மக்களை ஒருங்கிணைத்து, தமிழீழ விடுதலையை நோக்கி அவர்களை அணிதிரட்டுவதில் கிட்டு வெற்றி கண்டார் என்றே சொல்லவேண்டும். அந்தநிலை இன்று இன்னும் விரிவடைந்து மக்கள் – புலிகள் என்ற வேறுபாட்டை இல்லாதொழித்துவிட்டது. சர்வதேச சமூகம் விடுதலைப் போராட்டங்களையும், பயங்கரவாதத்துடன் இணைத்து தனது பிற்போக்குத் தனமான செயலை நியாயப்படுத்திவரும் வேளைகளில்கூட, உலகெங்கும் பரந்துநிற்கும் தமிழ் மக்கள் அந்த நெருக்கடிக்கு முகம் கொடுத்து தொடர்ந்தும் எழுச்சி கொள்கிறார்களென்றால் அது கிட்டுவால் அன்று விதைக்கப்பட்ட விடுதலை குறித்த கருத்துருவாக்கமும் விழிப்புணர்வுமே அடிப்படைக் காரணமாகின்றன.

கெரில்லா அமைப்பாக இயங்கிய அந்த நாடகளில், சிறியரக ஆயுதங்களைக்கொண்டு பெரும் சாதனைகளை நிலைநாட்டிய அந்த ஒப்பற்ற வீரனின் பெயரிலே, இன்று தமிழீழ தாயகத்தில் உருவாக்கப்பட்டுள்ள கனரக ஆயுதங்களைக் கொண்ட மிகப் பெரிய படையணி தனது சாதனைகளால் உலகத்தை வியக்கவைக்கின்றது. போரியல் நுணுக்கமும் போரிடும் திறனும் கொண்ட கேணல் கிட்டு பீரங்கிப் படையணி எண்ணிலடங்கா சமர்க்களங்களில் ஈட்டிய பெரும் வெற்றிகள் மூலம், தனது சாதனைத் தடங்களை தொடர்ந்தும் பதித்துக்கொண்டிருக்கின்றது. நவீன போரியற்கலையில் தமிழனின் தேசியப்படை முன்னேறிச் செல்வதற்கு கிட்டுவின் கனவும் ஒரு காரணம்.

ஊடகங்களில் தமிழரின் உண்மையான முகம் வெளியில் தெரியவேண்டும் என்பதில் கிட்டு அதிக அக்கறை காட்டினார். தமிழினத்தின் நியாயப் போராட்டங்களை பயங்கரவாதப்படுத்தி உலகெங்கும் பொய்யுரைக்கும் சிறீலங்கா அரச ஊடகங்களையும் அவற்றைச் சார்ந்துநிற்கும் சர்வதேச ஊடகங்களையும் கடந்து, உண்மையான செய்திகள் உலகெங்கும் தெரிவிக்கப்படவேண்டும் என்பதே அவர் கொண்டிருந்த எண்ணமாகும். இவை இன்று நிறைவேறிக்கொண்டிருக்கின்றன. தமிழீழத்திலும் உலகெங்கிலும் வாழும் தமிழ் மக்கள் தங்களுடைய விடுதலைப் போராட்டத்தின் உண்மை முகத் தோற்றத்தை உணரக்கூடிய விதத்தில் தமிழ் ஊடகத்துறை பெற்றிருக்கும் அபரிமிதமான வளர்ச்சிக்கு கிட்டுவின் எண்ணங்களின் தாக்கமும் ஒரு காரணம்.

சிறுவர் நலன்பேணும் திட்டங்கள், கல்வி, அபிவிருத்தி, பொருண்மிய மேம்பாடு, சமூக மேம்பாடு என மக்கள் நலன் பேணும் திட்டங்களில் அவர் காட்டிய அதீத அக்கறையின் பயனாக இன்னும் எம்மண்ணில் இச்செயற்பாடுகள் பெரும் வளர்ச்சி பெற்ற நிலையில் முன்னெடுக்கப்படுகின்றன. இவற்றுக்கு மேலாக, ஒன்றுபட்ட தமிழினத்தின் எழுச்சியை இவர் கனவாகக் கொண்டிருந்தார். எதிரியின் இறுகிய பிடிக்குள்ளும் நிமிர்ந்து நின்று தமிழ் மக்கள் வெளிப்படுத்தும் உணர்வெழுச்சி கிட்டுவின் கனவிற்கு கட்டியம் கூறிநிற்கின்றது.

எங்கும் எதிலும் எல்லாவற்றிலும் கிட்டு என்றும் வாழ்ந்துகொண்டிருக்கிறார். தமிழினத்தின் ஆன்மாவில் அழிக்க முடியாததோர் இடம் அவருக்கு என்றுமுண்டு. எல்லையற்ற திறமைகளாலும் மக்கள் மேல் அவர் வைத்திருந்த உண்மையான பாசத்தினாலும் தமிழினத்தில் நீங்காத நினைவுகளை அவர் பதித்துச் சென்றிருக்கின்றார். இறுதிமூச்சுவரை தமிழினத்தின் தன்மானம் காத்து தமிழினத் தலைவனுக்குப் பெருமையைச் சேர்த்த அந்த ஒப்பற்ற வீரனை எந்நாளும் எவராலும் மறக்கமுடியாது. "கிட்டு ஒரு தனிமனித சரித்திரம், நீண்ட ஓய்வில்லாத புயலாக வீசும் எமது விடுதலை வரலாற்றின் ஒரு காலத்தின் பதிவு" எனக்கூறும் தமிழீழத் தேசியத் தலைவரின் எண்ணங்களோடு ஒன்றிணைந்து கேணல் கிட்டுவை நெஞ்சிலேற்றுவோம். அவர் நினைவு தினத்தில் உறுதியெடுத்துக்கொள்வோம்

**நடுகடலில் படுகொலை**

"கிட்டு பயணம் செய்து எம்.வி. யகதா என்னும் கப்பல் ஹோண்டுராஸ் நாட்டிலுள்ள சான் - லோரன்சோ என்னும் துறைமுகத்தில் பதிவு செய்யப்பட்டதாகும். இந்தக் கப்பலின் மேற்புறத்தில் அதன் பெயரும் அஃது எந்த நாட்டிற்கு உரியது என்பது; தெளிவாக எழுதப்பட்டிருந்தன. இந்தியக் கடற்படைக் கப்பல்கள் 14.1.93 அன்று இரவு 10.30 மணிக்கு அதன் அருகில் நெருங்கிய பொழுது "இக்கப்பலின் பெயரைப் பார்க்க முடியவில்லை அதன் மீது எந்த நாட்டுக் கொடியும் பறக்கவில்லை" என்று குற்றம் சாட்டுவது அர்த்தமற்றது. ஏனென்றால் எந்த நாட்டுக்கொடியும் கதிரவன் மறைந்த பின்பு பறக்கவிடுவது வழக்கமல்ல. ஏன் இந்தியாவின் கொடி பறக்கவில்லை.

7.1.93 அன்று இந்தோனேசியாவின் மலாக்கா - சந்தியிலுள்ள பியூஃபர் - கலா தீவில் தளபதி கிட்டுவும் மற்றும் 9 விடுதலைப் புலிகளும் இந்தக் கப்பலில் ஏறினார்கள். இந்தக் கப்பலில் ஆயுதங்கள் எதுவும் இருக்கவில்லை. தமிழீழப் பகுதிக்குக் கொண்டு செல்வதற்காகப் பெட்ரோல், டீசல், மருந்துகள் போன்றவை மட்டுமே இருந்தன. இவற்றுடன் ஆயுதங்களோ, வெடிமருந்துகளோ எடுத்து வருவது அபாயகரமானது. எனவே அவற்றைக் கொண்டு வரவில்லை.

13.1.93 அன்று இந்தியாவில் இருந்து 440 மைல்களுக்கு இப்பாலும், இலங்கையின் தென் முனையிலிருந்து 290 மைல்களுக்கு அப்பாலும், நிலநேர்கோட்டிற்கு வடக்கில் 6 பாகையிலும் நிலக்கோட்டிற்கு கிழக்கே 8 பாகையிலும் இந்தக் கப்பல் சென்று கொண்டிருந்த பொழுது கப்பல் நிறுத்தப்பட்டு கடலைகளின் இயற்கையோட்டத்தில் மெதுவாக ஊர்ந்து கொண்டிருந்தது. சனவரி 16-ஆம் நாள் அவர்கள் யாழ்ப்பாணத்தை அடையவேண்டியிருந்ததால் அங்கிருந்து வரும் சமிஞ்கைக்காகக் காத்திருந்தார்கள். அதே இரவு 10.30 மணியளவில் இந்தியக் கடற்படை கப்பல் ஒன்று விடுதலைப் புலிகளின் கப்பலை அணுகியது. இரவு நேரம் ஆதலால் இந்தியக் கப்பலை விடுதலைப் புலிகளால் அடையாளம் காண முடியவில்லை. இந்திய கடற்படைக் கப்பலிலிருந்து வானொலி மூல




மாக் கப்பலின் கப்டன் ஜெயச்சந்திரனுடன் தொடர்பு கொள்ளப்பட்டது. "திரிகோணமலையை நோக்கி இந்தக் கப்பல் செல்கிறதா" என்று கேட்டபொழுது "ஆம்" என்று பதில் கொடுக்கப்பட்டது. பொதுவாக ஒரு கப்பலை நோக்கி இது போன்ற கேள்விகள் கேட்கப்படுவதில்லை. இடுத்த கேள்வியாக "நீங்கள் இலங்கைத் தமிழர்களா"? என்று கேட்கப்பட்டது. அதற்கும் "ஆம்" என்று பதில் கொடுக்கப்பட்டது. மேலும் "யகர்தா" கப்பலில் பயணிகள் யாரும் இருக்கின்றார்களா என்பதை பார்த்து அறிய இந்தியக் கடற்படைக் கப்பலின் கப்டன் விரும்புவதாகவும் கூறப்பட்டது. இதற்கு பின்னர் ஜெயச்சந்திரன் "கேள்விகளுக்கு மேல் கேள்விகள் கேட்கும் நீங்கள் யார்?" என்று வினாவினார். தாங்கள் "சர்வதேசக் காவல் பணிபுரிவதாக" இந்தியக் கடற்படைக் கப்பலின் கப்டன் பதில் கூறினார். "யகதா கப்பலின் பயணிகள் யாரும் இருக்கிறார்களா?" என்பதை அறிந்து கொள்வதில் மாத்திரமே அவர்கள் தீவிரம் காட்டினார்கள். அதன் பின்பு தங்கள் கப்பலை நெருங்கக்கூடாது என்று ஜெயச்சந்திரன் இந்தியக் கடற்படைக் கப்பலை எச்சரித்தார்.

சிங்களக் கடற்படைக் கப்பல்தான் தங்களை வழிமறிக்கிறது என்று ஜெயச்சந்திரனும் மற்றவர்களும் நினைத்தார்கள். எனவே அதை தாக்குவதற்கு ஆயத்தம் ஆனார்கள். இதற்குப் பின்னர்தான் இந்திய கடற்படைக் கப்பலின் கப்டன் தாங்கள் யார் என்ற உண்மையைத் தெரிவித்தார்.

ஐ.என்.எஸ்.38 விவேகா என்னும் இந்தியக் கடற்படைக் கப்பல் தான் தங்களை மறிக்கிறது என்ற விவரம் தெரியவந்தது. இந்த உண்மை தெரியவந்ததும் அந்தக் கப்பலை தாக்கவேண்டாம் என்று தளபதி கிட்டு ஜெயச்சந்திரனுக்கு ஆணையிட்டார். ஏற்கனவே இந்தியாவிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் உள்ள உறவு சீராக இல்லாததாலும் விடுதலைப் புலிகள் இந்தியாவுடன் பகையுணர்ச்சி கொண்டிருக்கின்றார்கள் என்ற பொய்ச் செய்திகள் பரப்பப்பட்டு வரும் சூழ்நிலையிலும் இந்தியக் கடற்படைக் கப்பலை நாம் தாக்கினால் அது மேலும் வேண்டாத விளைவுகளை ஏற்படுத்தும் எனவே, நமது உயிரை இழக்க நேர்ந்தாலும் பரவாயில்லை இந்தியக் கப்பலைத் தாக்க வேண்டாம் என்று தளபதி கிட்டு திட்டவட்டமாகச் கூறினார்.

அதன் பின்பு இந்தியக் கடற்படைக்கப்பலின் காப்டனுடன் வானொலி மூலம் பேசுவதற்கு கிட்டு விரும்பினார்.

இந்திய கப்டன் கிட்டுவை யார் என் விசாரித்தார். அதற்கு கிட்டு பதில் அளிக்கும்போது "தன்னை இப்பொழுது மாறன் என்று அழைக்கலாம்" பின்பு தன்னுடைய உண்மையான அடையாளத்தை தெரிவிக்கிறேன்" என்று பதில் கூறினார். எங்களுடைய கப்பலை எதற்காக மறிக்கிறீர்கள் என்று கேட்டபொழுது அதற்குப் பதில் அளித்த இந்தியக் கப்பலின் கப்டன் "அது பற்றி எனக்குத் தெரியாது, உங்களுடைய கப்பலை கடற்கரைக்குக் கொண்டுவரும்படி ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு செய்யத் தவறினால் உங்கள் கப்பலைத் தாக்க நேரிடும்" என்று எச்சரித்தார்.

தங்களுடைய கப்பலில் பெட்ரோல், டீசல் ஆகியவை சேமித்து வைக்கப்பட்டு இருப்பதால் சண்டை மூண்டால் பெரும் சேதம் ஏற்படும் என்பதால் இந்தியக் கடற்படைக் கப்பலைத் தொடர்ந்து செல்லக் கிட்டு முடிவு செய்தார்.

சனவரி 14-ஆம் நாள் காலை 6 மணிக்கு மற்றொரு இந்தியக் கடற்படைக் கப்பல் கிட்டுவின் கப்பலுக்கு அருகே வந்தது. ஐ.என்.எஸ். பாப்பா 44 கிருபாணி என்னும் கப்பல் ஒருபுறமும், ஐ.என்.எஸ் 38 விவேகா மறுபுறமும் கிட்டுவின் கப்பலுக்குத் காவலாக இந்தியக் கடற்கரையை நோக்கி வழிநடத்திச் சென்றன. எம்.வி.யகதா கப்பலில் தளபதி கிட்டு பயணம் செய்கிறார் என்பதை நன்கு தெரிந்துகொண்டு, அவரை யாழ்ப்பாணம் செல்லவிடாமல் தடுத்து உயிரோடு சிறைபிடித்துச் செல்லவே இந்தியக் கடற்படைக்கப்பல்கள் வந்திருக்கின்றன என்ற உண்மை தெளிவாகியது. இருந்தாலும் கிட்டு இந்தியக் கடற்படைக் கப்டனுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தினார். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களைச் சந்தித்து சமாதான் திட்டம் ஒன்றைப் பற்றி விவாதிக்கவே தான் யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டு இருப்பதாகச் கிட்டு கூறினார். ஆனால் இந்தியக் காப்டனோ அவர்களைச் சென்னையை நோக்கி வருமாறு வற்புறுத்தினார். சென்னை அழைத்துவரவேண்டிய அவசியம் என்ன? என்று கேட்டபொழுது அவர் அதற்கு மழுப்பலான பதில் கூறினார். அது பற்றி தனக்கு எதுவும் தெரியாதென்றும், கிட்டு சென்னை வந்த பின்பு உயர் அதிகாரிகள் அவரைச் சந்தித்து மேலும் பேசுவார்கள் என்றும் கூறினார்.

இந்தப் பேச்சுக்களிடையே பயணட் தொடர்ந்தது. சென்னை அருகேயுள்ள எண்ணூரிலிருந்து கிழக்கே 16ஆவது மைலுக்கு யகாதா கப்பல் வந்த பொழுது அதை நிறுத்தி நங்கூரம் பாய்ச்சும் படி கிட்டு ஆணையிட்டார். அதற்குமேலும் பயணம் செய்தால் இந்தியாவின் கடல் எல்லைக்குள் நுழைவதற்கு கிட்டு திட்டவட்டமாக மறுத்துவிட்டார். இந்த நிலைமையில் மற்றொரு இந்தியக் கடற்படைக் கப்பலான ஐ.என்.எஸ் சாவித்திரி விரைந்து வந்து கிட்டுவின் கப்பலை முற்றுகையிட்ட கப்பல்களுடன் சேர்ந்துகொண்டது. உடனடியாகச் சரண் அடையும்படி கிட்டுவுக்கு ஆணையிடப்பட்டது. அதற்குக் கிட்டு மறுத்துவிட்டார். தன்னுடன் பேச்சுவார்த்தை நடத்த விரும்பினால் இந்திய உளவுத் துறை தலைவர்களையோ சென்னையில் உள்ள அரசியல் தலைவர்களையோ அழைத்து வரும்படி கிட்டு கேட்டுக்கொண்டார். அதை ஏற்பதற்கு இந்திய கடற்படை தளபதி மறுத்து விட்டார்.

16-ஆம் நாள் காலை 6 மணி வரை அவகாசம் தருவதாகவும் அதற்குள் கிட்டுவும் மற்றவர்களும் சரணடைய வேண்டும் என்றும் இல்லையென்னறால் அதிரடிப்படை அவர்களைத் தாக்கிச் சிறைபிடிக்கும் என்றும் எச்சரித்தார். சரியாக காலை 6 மணிக்கு இரண்டு உலங்குவானூர்திகளும் மூன்று போர் விமானங்களும் கிட்டுவின் கப்பலைச் சுற்றி வட்டமிட்டன. கப்பலின் மேல் தளத்தில் தளபதி கிட்டு நின்ற வண்ணம் எதையும் சந்திக்கத் தயாரானார்.

சிறிது நேரத்தில் கிட்டுவின் கப்பலை நோக்கி இந்திய கடற்படைக் கப்பல்கள் பீரங்கிகளால் சுட்டன. கப்பலின் கேப்டன் ஜெயசந்திரனையும் மற்றும் மாலுமிகளையும் கடலில் குதித்துத் தப்புமாறு கிட்டு ஆணையிட்டார். தன்னுடனிருந்த விடுதலைப் புலிகளை நச்சுக்குப்பிகளைத் தயாராக வைத்துக் கொள்ளும் படியும் உத்தரவிட்டார். ஆனால் மாலுமிகள் கிட்டுவை ஆபத்தில் சிக்கவைத்துவிட்டுத் தாங்கள் மட்டும் தப்பிச்செல்ல விரும்பவில்லை. "தேவையில்லாமல் அவர்கள் தங்கள் உயிர்களை தியாகம் செய்ய வேண்டியதில்லை" என்று கூறிய கிட்டு அவர்களை ஒவ்வொருவராக பிடித்துக் கடலில் தள்ளினார். கடலில் அவர்கள் குதிக்கும்பொழுது தங்கள் கப்பல் பற்றி எரிவதையும் எரிந்து கொண்டிருக்கும் தீச்சுவாலைக்கு நடுவே தளபதி கிட்டுவும் மற்ற விடுதலைப் புலிகளும் கம்பீரமாக நிற்பதையும் பார்த்தனர்.

16.1.93 அன்று அதிகாலை 6.30 மணிக்கு இந்த நிகழ்ச்சி நடந்தது. இந்தியக் கடற்படை கப்பல்கள் பீரங்கி குண்டுகளால் தாக்கியதால் கிட்டுவின் கப்பல் தீப் பிடித்து எரிந்தது. கடலில்








குதித்த கப்பலின் மாலுமிகளை இந்தியக் கடற்படைக் கப்பல் காப்பாற்றிச் சிறைபிடித்தது. அவர்களில் சிவலிங்க கேசவன், கிருஷ்ணமூர்த்தி ஆகிய இருவருக்கும் படுகாயம் எற்பட்டது. கைது செய்யப்பட்டவர்களை நியாயமாக சென்னைக்கு கொண்டு வந்திருக்கவேண்டும். ஏனென்றால் சென்னைக்கு அருகே கிட்டுவின் கப்பலைச் சுற்றி வளைத்தாக இந்தியக் கடற் படை குற்றம் சாட்டி இருந்தது. அதற்கு மாறாகவும் சட்டத்திற்குப் புறம்பாகவும் கைது செய்யப்பட்டவர்களை விசாகப்பட்டினத் திற்குக் கொண்டு சென்றார்கள். சென்னைக்கு கொண்டு வந் தால் தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் கொதிப்புணர்வும் கிளர்ச் சியும் வெடிக்கலாம் என்று அவர்கள் அஞ்சியதே இதற்குக் காரணமாகும்.

கிட்டு தன்னுடைய கப்பலில் ஏறிற பொழுது "தலைவர் பிரபாகரன் அவர்களிடம் கொடுப்பதற்காக பல முக்கியமான ஆவணங்களை ஒரு கைப்பெட்டியில் கிட்டு வைத்திருந்தார். மேலும் இரண்டு அல்லது மூன்று பெட்டிகளில் 15 இலட்சம் அமெரிக்க டாலர்களையும் வைத்து இருப்பதாகக் கிட்டு என்னிடம் கூறியிருந்தார்" எனக் கப்பலின் கப்டன் ஜெயச்சந்திரன் தெரிவித்தார்.

மேற்கு ஜரோப்பிய நாடுகள் தயாரித்து அளித்த சமாதானத் திட்டத்துடன் தமது தலைவரைச் சந்தித்துப் பேசுவதற்காகவே யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற தளபதி கிட்டுவை இந்தியக் கடற்படை வழிமறித்துப் படுகொலை செய்தது.

"கிட்டு ஒரு தனிமனித சரித்திரம். நீண்ட ஓய்வில்லாத புயலாக வீசும் எமது விடுதலை வரலாற்றின் ஒரு காலத்தின் பதிவு"

கேணல் கிட்டுவும் அவருடன் வந்த ஒன்பது தோழர்களும்

கேணல் கிட்டு – சதாசிவம் கிருஷ்ணகுமார், வல்வெட்டித்துறை

லெப். கேணல் குட்டிசிறி – இராசையா சிறிகணேசன், சுதுமைலை வடக்கு, மானிப்பாய்.

கடற்புலி கப்டன் ஜீவா – நடராசா மார்க்ஜெராஜ், கொய்யத்தோட்ட ஒழுங்கை, பாசையூர், யாழ்ப்பாணம்

கடற்புலி கப்டன் குணசீலன் (குணராஜ்) – சேகரன்குருஸ் மைக்கல் ஜீவா, 2-ம் குறுக்குத்தெரு, உதயபுரம், மணியம்தோட்டம்

கடற்புலி கப்டன் றொசான் – இரத்தினசிங்கம் அருணராசா, அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்

கடற்புலி கப்டன் நாயகன் – சிவலிங்கம் கேசவன், பொலிகண்டி, வல்வெட்டித்துறை

கடற்புலி லெப். தூயவன் – மகாலிங்கம் ஜெயலிங்கம், கண்டிவீதி, யாழ்ப்பாணம்

கடற்புலி லெப். நல்லவன் – சிலஞானசுந்தரம் ரமேஸ், மணியந்தோட்டம், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்

கடற்புலி லெப். அமுதன் – அலோசியஸ் ஜான்சன், 2-ம் குறுக்குத்தெரு, நாவாந்துறைவடக்கு, யாழ்ப்பாணம்

மேஜர். வேலன் மலரவன் – சுந்தரலிங்கம் சுந்தரவேல், வியாபாரிமூலை, பருத்தித்துறை

தகவல்: காவியநாயகன் கிட்டு, நடுக்கடலில் படுகொலை – பழ நெடுமாறன்






# யாழ்ப்பாணத்தில் தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் 17ம் ஆண்டு நினைவேந்தல் !

டிசம்பர் 15, 2023








# பூநகரி பொன்னாவெளி மக்கள் சுண்ணக்கல் அகழ்வு மற்றும் சீமெந்து தொழிற்சாலைக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம்!

டிசம்பர் 15, 2023

அரசியல்வாதிகள் கைவிட்டுள்ள நிலையில் பூநகரி பொன்னாவெளி சுண்ணக்கல் அகழ்வு மற்றும் சீமெந்து தொழிற்சாலைக்கு எதிர்ப்பு தெரிவித்து அரச அதிகாரிகளை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

சுண்ணக்கல் அகழ்வு நடவடிக்கைக்கான அனுமதியை வழங்குவது தொடர்பில் கனிய வளத்திணைக்கள அதிகாரிகள் ஏனைய அரச அலுவலக அதிகாரிகள் சகிதம் ஆய்வுகளை முன்னெடுக்க வருகை தந்திருந்தனர்.

இந்நிலையில் வருகை தந்திருந்த அரச அதிகாரிகளை முற்றுகையிட்ட ஊர் மக்கள் அங்கு முன்னெடுக்கப்படும் அகழ்வுபணிகளிற்கான முன்னேற்பாடுகளை தடுத்து நிறுத்திய பின்னரே தமது போராட்டத்தை விலக்கிக்கொண்டனர்.

ஆண்கள் பெண்கள் என நூற்றுக்கணக்கிலான பொன்னாவெளி, வேரவில், வலைப்பாடு உள்ளிட்ட ஐந்து கிராம மக்கள் போராட்டத்தில் குவிந்திருந்தனர்.

எமது பூர்வீக நிலங்களை உவர்நிலங்களாக மாற்றி, வாழ்வாதார செயற்பாடுகளை அடியோடு அழிக்கின்ற அரசாங்கத்தின் மிலேச்சத்தனமான நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து இன்றைய நாள் வலைப்பாடு, வேரவில் மற்றும் கிராஞ்சி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடடோம். தமிழர் தாயக பகுதியெங்கும் காணப்படும் வளங்களை தாரைவார்த்து கொடுக்கும் அரசாங்கத்தின் காட்டுமிராண்டி தனமான செயற்பாட்டுக்கு அனைத்து தமிழ் உறவுகளையும் இணைந்து கொள்ளவேண்டுமெனவும் கோரிக்கைவிடுத்திருந்தனர்.





# சிங்கள குடியேற்றவாசிகளால் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தடுத்து நிறுத்தம்!

டிசம்பர் 15, 2023

சிங்கள குடியேற்றவாசிகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மாதவனை கால்நடை மேச்சல் தரவைக்கு சென்ற தமிழ் தேசிய முன்னணியின் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினருக்கு எதிராக அக்கிராம மக்கள் குழுவொன்று வளமண்டி பாலத்தை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இன்று வெள்ளிக்கிழமை (15) காலை வந்திருந்த நாடாளுமன்ற உறுப்பினரை பயணிக்க அனுமதிக்கவில்லை. சுமார் ஒன்றரை மணி நேரம் வளமண்டி பாலத்திற்கு அருகில் வாகனத்துக்கு உள்ளேயே இருந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம கிராம மக்களின் கூச்சல்களுக்கு மத்தியில் திரும்பிச் சென்றார்.

அம்பிட்டிய சுமனரதன தேரர் மற்றும் பொல்கஹ அரவ பிரதேசத் தைச் சேர்ந்த தேரர் உட்பட பெருந்தொகையான கிராம மக்கள் போராட்டத்தில் ஈடுபடடனர்.



# மட்டக்களப்பு மாதவனை மயிலத்தமடு பகுதிக்கு சென்ற கஜேந்திரகுமார், கஜேந்திரனுக்கு சிங்கள ஆக்கிரமிப்பு குயேற்றவாசிகளால் எதிர்ப்பு தெரிவிப்பு!

டிசம்பர் 15, 2023






மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள மாதவனை மயிலத்தமடு மேய்ச்சல் தரை தொடர்பாக கால்நடை பண்ணையாளர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் தொடர்பாக நேரில் சென்று பார்த்து அறிவதற்காக இன்று வெள்ளிக்கிழமை (15) காலை பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் களப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

அங்கு சென்றவர்களை, அம்பிட்டிய தேரர் தலைமையிலான பெரும்பான்மை இனத்தவர்களான சிங்களவர்கள் வழிமறித்து தடுத்துள்ளனர்.

அத்தோடு, தமிழ், சிங்கள மக்களின் இன நல்லுறவை சீர் கெடுக்கும் விதமாக பாராளுமன்ற உறுப்பினர்கள் வடக்கில் இருந்து வருகை தந்துள்ளதாக எதிர்ப்பாளர்கள் தெரிவித்து, கூச்சலிட்டு, தகாத வார்த்தைகளை பிரயோகித்து கலகத்தில் ஈடுபட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவரையும் திருப்பி அனுப்பியுள்ளனர்.

# யாழ். கீரிமலை ஜனாதிபதி மாளிகை காணியை அளவீடு செய்ய எதிர்ப்பு காணி உரிமையாளர்கள் போராட்டம்!

டிசம்பர் 15, 2023



யாழ்ப்பாணம் கீரிமலை பகுதியில் காணி அள வீட்டுக்கு சென்ற நில அளவைத் திணைக்களத்தினருக்கு எதிராக காணி உரிமையாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் - கீரிமலை ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள பகுதியை, நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கும் நோக்கில் வெள்ளிக்கிழமை (15) அளவீடு செய்யப்படவுள் ளதாக அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து ஒன்றுகூடிய காணி உரிமையாளர்கள் நில அளவை திணைக்களத்தினரின் வாகனத்தை மறித்து கோசங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர். அதனையடுத்து அளவீட்டு பணிகள் கைவிடப்பட்டுள்ளது.

தெல்லிப்பளை பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள நகுலேஸ்வரம் (ஜே/226), காங்கேசன்துறை (ஜே/233) கிராம சேவகர் பிரிவுகளில் 29 ஏக்கர் நிலம் அளவீடு செய்ய தீர்மானிக்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து ஒன்றுகூடிய காணி உரிமையாளர்கள் நில அளவை திணைக்களத்தினரின் வாகனத்தை மறித்து கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# 695 குடும்பங்கள் கனமழை காரணமாக முல்லைத்தீவில் பாதிப்பு!

டிசம்பர் 15, 2023



முல்லைத்தீவில், கன மழை காரணமாக, 695 குடும்பங்களை சேர்ந்த 2 ஆயிரத்து 117 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில், தொடர்ச்சியாக பெய்து வருகின்ற கனமழை காரணமாக, மாவட்டத்தில் உள்ள அனைத்து குளங்களும், முற்றுமுழுதாக நிறைந்து வான் பாய்கின்ற நிலைமை காணப்படுகிறது.

திடீரென வந்த வெள்ளம் காரணமாக, ஒட்டுசுட்டான் பிரதேசத்தின் புளியங்குளம், பண்டாரவன்னி உள்ளிட்ட பகுதிகளில், மக்களின் வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதனால், பலர் வெள்ளத்தில் சிக்கியுள்ளதுடன், அவர்களை மீட்கும் பணிகள் இடம்பெற்று வருகிறது.

குளங்களுக்கான நீர்வரத்து மிக வேகமாக காணப்படுகின்ற நிலையில், பல்வேறு குளங்களும் உடைப்பெடுக்கும் அபாயத்தையும் எதிர்நோக்கியுள்ளதாகவும், வான்பாய்கின்ற வேளை, மக்கள் குடியிருப்புகளுக்குள் வெள்ளம் செல்வதற்கான வாய்ப்புகள் இருப்பதனால், மக்கள் மிக அவதானமாக இருக்க வேண்டும் என, முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

இன்று காலை வெளியான தகவலின் அடிப்படையில், மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில், அம்பாள்புரம், கரும்புள்ளியான், ஒட்டறுத்தகுளம், நட்டாங்கண்டல், பாண்டியன்குளம், செல்வபுரம், பாலிநகர், சிராட்டிகுளம், சிவபுரம், மூன்றுமுறிப்பு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில், 261 குடும்பங்களை சேர்ந்த 870 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில், மாங்குளம், பனிக்கன்குளம், பண்டாரவன்னி, இந்துபுரம், தட்டையர்மலை, புளியங்குளம், தச்சடம்பன் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில், 127 குடும்பங்களை சேர்ந்த 423 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கள்ளப்பாடு, சிலாவத்தை, செல்வபுரம், வற்றாப்பளை, தண்ணிமுறிப்பு, முள்ளியவளை தெற்கு, கள்ளப்பாடு வடக்கு, கள்ளப்பாடு தெற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில், 44 குடும்பங்களை சேர்ந்த 136 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

துணுக்காய் பிரதேச செயலக பிரிவில், அணிஞ்சியன்குளம், உயிலங்குளம், தென்னியங்குளம், கோட்டைகட்டிய குளம், ஆலங்குளம், தேராங்கண்டல், கல்விளான், மல்லாவி, யோகபுரம் கிழக்கு, புகழேந்திநகர், பாரதிநகர், யோகபுரம் மேற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில், 86 குடும்பங்களை சேர்ந்த 267 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில், புதுக்குடியிருப்பு மேற்கு, தேவிபுரம் கிராம அலுவலர் பிரிவுகளில், 177 குடும்பங்களை சேர்ந்த 415 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதனடிப்படையில், முல்லைத்தீவு மாவட்டத்தில், 695 குடும்பங்களை சேர்ந்த 2 ஆயிரத்து 117 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக, அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மாங்குளம் கிராம அலுவலர் பிரிவில் 4 குடும்பங்களை சேர்ந்த 17 பேரும், புளியங்குளம் கிராம அலுவலர் பிரிவில், 5 குடும்பங்களை சேர்ந்த 21 பேரும், பண்டாரவன்னி கிராம அலுவலர் பிரிவில், 19 குடும்பங்களை சேர்ந்த 55 பேரும் என, 28 குடும்பங்களை சேர்ந்த 93 பேர், பாதுகாப்பான இடங்களில்

# அருவி ஆறு இனிவரும் காலங்களில் தமிழீழத்தில் பாயுமா?

டிசம்பர் 16, 2023

மன்னாரினை வந்தடையும் அருவியாறு மல்வத்து ஓயாவென பெயர் மாற்றப்பட்டு அனுராதபுரம் தந்திரிமலை பகுதியில் மறித்து புதிய பெரிய நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு வருகின்றது. இதற்குப்பெயர் மல்வத்து ஓயா நீர்த்தேக்கம் என பெயரும் இடப்பட்டுள்ளது.

கடம்பநதி, அருவியாறு என்பன மல்வத்து நதியின் பழைய பெயர்கள். ஹபரணைக்கு அருகே மகாவம்ச காலத்தில் "அரிட்ட பர்வதம்" என்று அறியப்பட்ட ரிதிகலையில் தோன்றி, அனுராத புரத்தை அடுத்து ஓடி, பசவக்குளம், கட்டுக்கரைக் குளம் முதலியவற்றுக்கு நீராதாராமாகப் பாய்ந்து மன்னார் அரிப்பு பகுதியில் கடலில் கலக்கிறது மல்வத்து நதி.









மன்னார் மடுவுக்கு அருகே பறையனாலங்குளத்தில் தேக்கம் அணை மூலம் "யோத எல" கால்வாயாகப் பிரிக்கப்படும் அருவி யாற்றின் கிளை ஒன்று, யோத வெவ என்றும் இராட்சதவாவி என்றும் அழைக்கப்படும் கட்டுக்கரைக்குளத்தை நிரப்பி மறைகிறது.

யோத எல கால்வாயும் கட்டுக்கரைக் குளமும் இலங்கை வரலாற்றில் மகத்தான பொறியியலாளனாகப் போற்றப்படும் தாதுசேனனால் (பொ.பி 455-473) கட்டப்பட்டவை. அவன் அமைத்த தேக்கம் அணைக்கட்டை இலங்கையின் கல்லணை எனலாம்.

ஆனால் அருவியாற்றின் உண்மையான கழிமுகம் இன்றைய அரிப்பு அல்ல; மாந்தை தான். எப்படி மாவலி கங்கையின் கழி முகமான கொட்டியாரக் குடாவில் இன்றைய திருக்கோண மலைத் துறைமுகம் அமைந்ததோ, அதே போல, அருவியாற் றின் கழிமுகமான மாந்தையில் அமைந்த துறைமுகம் தான் மாதோட்டம். மாந்தை பத்தாம் நூற்றாண்டுக்கு முன் வரை கிரேக்கரும் யவனரும் சீனருடன் பண்டமாற்று செய்த, ஆசியா வின் இடைத்தங்கல் துறைமுகமாக விளங்கியதற்கு ஆதா ரங்கள் உள்ளன. ஏதோ காரணத்தால் அருவியாறு திசைமாறி ஓடத் துவங்கியதாலும், கடல் நீரோட்ட மாறுபாட்டால் மண்மூடிப் போனதாலும் மாந்தைத்துறைமுகம் தூர்ந்து போயிருக்கிறது. அப்படி ஓடிய பழைய அருவியாற்றின் எச்சம் தான் இன்றுள்ள திருக்கேதீச்சரப் பாலாவி.

பாலாவியை சம்பந்தரும் சுந்தரரும் பாடுவதால் (7 - 9ஆம் நூற்.) தாதுசேனனுக்கும் சம்பந்தருக்கும் இடைப்பட்ட காலத் தில் அருவியாறு திசைமாறியிருக்கலாம். அல்லது இந்த திசை மாற்றத்திற்கு செயற்கையான யோத எல வாய்க்காலும் ஒரு காரணமாக இருந்திருக்கக் கூடும். கட்டுக்கரைக் குளத்தி லிருந்து பாலாவி நோக்கி வருகின்ற தூர்ந்து போன நீர்வரத்து பாதை இன்றும் இருப்பதாகச் சொல்கிறார்கள்.

நம் ஆய்வாளர்கள், வரலாற்றை எழுதும் போது இந்தப் புவி யியல் மாற்றங்களை கருத்தில் கொள்வதே இல்லை. சில உதாரணங்கள் சொல்லலாம்.

இன்றைக்கு திருக்கோணமலை மாவட்டத்தின் எல்லையில் வெருகல் கங்கையின் வடக்குக் கரையிலுள்ளது வெருகல் சித் திரவேலாயுதர் கோவில். ஆனால் பதினாறாம் நூற்றாண்டில் தம்பலகமத்து வீரக்கோன் முதலியாரால் "வெருகல் சித்திர வேலாயுதர் காதல்" எனும் நூல் பாடப்பட்ட போது, அவர் "தென்வெருகல்" என்று பாடுகிறார்.

ஏனென்றால் அப்போது கோவில் வெருகலாற்றின் தென்கரை யில் இருந்தது. அதனால் மட்டக்களப்புத் தேசத்தவரும் அக் கோவிலுக்கு உரிமைகொண்டாடினர். வெருகல் கோவில் மதிலை மட்டக்களப்பூரவர் கட்டியதாகக் குறிப்பிடும் கல்வெட்டை இன்றும் காணலாம். வெருகல் சித்திரவேலர் காதல் நூலில் அது "தென்வெருகல்" என்று குறிப்பிடப்படுவதைப் புரிந்துகொள் வதற்கு வெருகலாறு இன்று திசைமாறி தெற்காக ஓடுவது நமக்குத் தெரிந்திருக்கவேண்டும்.

இலங்கை போன்ற தீவு நாடுகளில் புவியியல் அமைப்புக்கள் மிகப்பெரும் தாக்கத்தைச் செலுத்தியிருக்கின்றன. கீழைத் தமிழரின் தலைநகரான பழைய மட்டக்களப்பு நகர் வாவியின் தென்னந்தத்தில் சம்மாந்துறைக்கருகே இருந்தது. போர்த்துக் கேயர் புலியந்தீவில் கோட்டை கட்டி புதிய மட்டுநகரை உருவாக்கினார்கள் (ஏனெனில் கடலூடே வணிகப்படகுகள் நுழைந்த வாவியின் கழிமுகம் புலியந்தீவுக்கருகே பாலமீன் மடுவில் இருந்தது), அவர்களை அடுத்து வந்த ஒல்லாந்தர் ஏன் அவசரமாக கோட்டைக்கல்லாற்றில் கோட்டை கட்டினார்கள் (பாலமீன்மடு கழிமுகம் மண்மூடிக்கொண்டிருந்தது, வாவியின் மையத்திலிருந்த கோட்டைக்கல்லாறு மூலம் கடல்வழி வணிகப்படகுகளையும் போக்குவரத்தையும் இலகுவாகக் கண் காணிக்கலாம்), பின் ஏன் அதையும் விடுத்து கரச்சைக் காரை தீவில் தங்கள் கிழக்கிலங்கைத் தலைமையகத்தை மாற்ற




முனைந்தார்கள் (அது சம்மாந்துறை - பழைய மட்டக்களப்பு நகருக்கருகே வணிகக்கப்பல்களை கண்காணிக்க வசதியாக இருந்தது), தெற்கே 15ஆம் நூற்றாண்டு வரை இயங்கிக் கொண்டிருந்த கண்டபாணத்துறையும் (திருக்கோவில்), அப்புறத்தோட்டமும் (அறுகங்குடா) ஏன் காலனித்துவ ஆட்சியில் துறைமுகம் என்ற நிலையை இழந்தன (அவை மாறுபட்ட கடல்நீரோட்டங்களால் மண்மூடிக் கொண்டிருந்தன), தென் னிலங்கையில் சீன - பாரசீக - தமிழக நானாதேசி வணிகர்கள் கூடிக்குலாவிய மாத்துறையும் (மாத்தற) கல்துறையும் (களுத் துறை) பாணந்துறையும் மங்கி மறைய காலியும் கொழும்பும் எப்படி திடுதிப்பென ஐரோப்பியர் கால துறைமுகங்களாக வளர்ச் சியடைந்தன (அதே கடல்நீரோட்ட மாறுபாடு) என்பதெல்லாம் சிந்திக்க சிந்திக்க வரலாற்றின் மறைந்த பக்கங்களைத் தேடித்தருகின்ற அற்புதமான தடயங்கள்.

இந்தக் கடல்நீரோட்ட வரலாற்றை ஆராய்ந்து பார்க்காமல் கடலரிப்புக்கு கூடிய சாத்தியமுள்ள ஒலுவில் போன்ற இட மொன்றில் புதிதாக துறைமுகம் அமைத்ததால் அதை அண்டிய சுமார் 50 கிமீ நீளமான கடற்கரைப் பரப்பு கடந்த பத்தாண் டுகளில் காவுகொள்ளப்பட்டு விட்டது. இன்றும் ஒரு சாதாரண கடற்றொழில் மீனவரிடம் கடல்நீரோட்டம், கழிமுக மடைமாற்றங்கள் பற்றிய போதுமான பரம்பரை அறிவு இருப் பதை நாம் காணமுடியும். அவர்கள் நமக்கு பாமரர்கள்.

அருகில் அமர்ந்திருந்த நண்பனிடம் "அருவியாற்றின் பழைய கழிமுகம் மாந்தை." என்பதை சொல்லிக்கொண்டிருக்கும் போதே ஒளிபரப்பான ஆவணப்படத்திலும் அதைச் சொன் னார்கள். மாதோட்டத் துறைமுகமே அருவியாற்றின் ஊடாக அனுராதபுர அரசுக்கான குடியேற்றவாசிகளையும் வணிகப் பாதையையும் அனுமதித்தது. மாந்தையில் இருந்து அனுராத புரம் வரை நீண்டு பள்ளிகொண்டிருக்கும் அருவியாறு உரு வாக்கிய தொல்நாகரிகத்தின் வாரிசுகளே இன்றைய இலங் கைக் குடிமக்கள்.

அருவியாறும் தேக்கமும் கட்டுக்கரைக்குளமும் சொல்லவரும் வரலாறு வேறொன்று. கட்டுக்கரைக்குளப் பகுதியில் அண்மை யில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகள் அங்கிருந்த புராதனக் குடியிருப்பொன்றை சுட்டிக்காட்டியிருக்கின்றன. ஆனால் அந்தப் பகுதி அரசால் பாதுகாக்கப்பட்ட வனமாக பிரகடனப் படுத்தப்பட்டிருக்கிறது.

# தரவையில் மாவீரர் நினைவேந்தலில் ஈடுபட்டவர்கள் பிணையில் விடுவிப்பு!

டிசம்பர் 19, 2023

மட்டக்களப்பு தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் தினமான நவம்பர் 27ஆம் திகதியன்று இடம்பெற்ற நினைவேந்தலில் கலந்துகொண்டபோது கைதுசெய்யப்பட்ட நான்கு பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

23 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான 2 சரீர பிணையில், வாழைச்சேனை மாவட்ட நீதவான் நீதிமன்றினால் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் ஜனவரி மாதம் உயர்தரப்பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவன் உட்பட நான்கு பேர் பிணையில் செவ்வாய்க் கிழமை (19) விடுக்கப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட நால் வருக்கு எதிராக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சிறீலங்கா காவல்துறையினரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் அவர்களது விடுதலை தொடர்பில் ஆரம்பம் முதல் இறுதி வரை மட்டக்களப்பு மாவட்ட சிவில் அமைப் புக்கள் நடவடிக்கையில் ஈடுபட்டன.

வழக்கு ஜனவரி 1ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள திகதி குறிப்பிடப்பட்டுள்ளது.



இதனிடையே இலங்கை ஜனாதிபதி எதிர்வரும் 21ம் திகதி தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்திக்கவுள்ள நிலை யில் கைதுகள் தொடர்பில் பேசவுள்ளதாக தமிழ் தரப்புக்களி லிருந்து அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் காற்றாலையும், கனிய மண் அகழ்வும் தீவை சீர்குலைக்கும்!

## மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி. எஸ். சிவகரன்

டிசம்பர் 20, 2023

மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு தொடர்பாக மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் புதன்கிழமை (20) சிறீலங்கா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில்,

மன்னார் மாவட்டத்தின் தீவுப்பகுதி என்பது சாதாரண தரைத்தோற்றத்தில் இருந்து மிகவும் குறைவான தாழ் நிலப் பிரதேசம் ஆகும். வலிமை குறைந்த கன தியற்ற நொதிய முள்ள தீவு என்பதால் தான் மூன்று மாடிக்கு மேல் கட்டிடம் அமைப்பதற்கு மன்னார் தீவு பகுதியில் அனுமதி வழங்குவதில்லை. ஐம்பது ஆண்டுகளில் நலிவுறும் தீவுகளில் மன்னாரும் ஒன்று என ஏலவே யுனெஸ்கோ நிறுவனம் முன்னெச்சரிக்கை விடுத்திருந்தது.

அவற்றை எல்லாம் கருத்தில் கொள்ளாமல் காற்றாலை அமைப்பதும் கனிய மண் அகழ்வதும் என்பது மேலும் தீவு பிரதேசத்தை பலவீனமான நிலைக்கு இட்டுச் செல்லும்.

உலகம் முழுவதும் மனிதர்களின் இயற்கைக்கு எதிரான செயற்பாட்டால் புவி வெப்பமயமாதல் அதிகரிப்பால் காலநிலை மாற்றம் ஏற்படுகிறது.

இதனால் பேரிடர் மூலம் கடல் நீர் மட்டம் உயரலாம். அதனால் பல தீவுகள் காணாமல் போகலாம் என்றும் அறிவியலாளர்களால் எச்சரிக்கப் பட்டுள்ளமையும் கவனிக்கத்தக்கது. துபாய் காலநிலை மாநாட்டில் தாங்களும் பங்கேற்றியிருந்தது குறிப்பிடத்தக்கது.

நில அதிர்வு, சுனாமியோ, பெரு வெள்ளமோ ஏற்பட்டால் தற்காத்துக் கொள்ளக்கூடிய நிலையில் வலிமையிளக்கவைக்கும் வேலைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

காற்றாலையும் கனிய மண் அகழ்வும் ஆழமாக துளையிட்டு நிலத்தடியை அதன் இயற்கை தரைத்தோற்ற இருப்பியல் ஒழுங்கமைப்பை சீர்குலைக்கும் வேலையே நடைபெறுகிறது.

இங்கு மிக நீண்ட காலமாக வசித்து வரும் மக்களுக்கு பெரும் வாழ்வியல் கேடாக மாறும். இயற்கையை அழித்து இயல்பை மாற்றி பணம் தேட முயல்வது தற்கொலைக்குச் சமமானது ஆகும். இங்கு வாழும் மக்களைப் பற்றிய எந்த விதமான நோக்கு நிலையும் இல்லாமல் ஆதாயம் தேட நினைப்பது அரசியல் இழுக்காகும்.

எனவே காலப்போக்கில் மன்னார் தீவு பகுதியில் இருந்து மனிதர்களை அப்புறப்படுத்தும் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலாகவே நாம் இதனை நோக்க வேண்டியுள்ளது.

வருமானத்தை மட்டும் நோக்காகக் கொண்டு பல்தேசிய கம்பனிகளுக்கு மன்னார் வளத்தை கூறு போட்டு பெரு வணிகர்களிடம் கை அளித்திருப்பது நாட்டிற்கே பெரும் ஆபத்தை ஏற்படுத்துவதுடன் பூகோள ரீதியாக இந்த நாட்டின் மீது பிராந்திய வல்லரசுகளின் கழுகுப் பார்வைக்குள் அகப்பட்டிருப்பதாலும் வரலாற்று முக்கியத்துவ துறைமுக கட்டமைப்பைக் கொண்டது மான இத்தீவு எதிர்காலத்தில் நாட்டின் ஏகபோகத்துவத்திற்கே பெரும் பாதிப்பை



ஏற்படுத்தலாம்.

இந்த யதார்த்தங்கள் தங்களுக்குப் புரியாமல் அல்ல. ஆகவே கனியவள அகழ்வை முழுமையாக நிறுத்துவதுடன் புதிதாக அமைக்க இருக்கும். காற்றாலையை மன்னார் தீவுக்கு வெளியில் எவருக்கும் பாதிப்பு இல்லாத இடத்தில் நிறுவலாம். எனவே பொதுமக்களின் உணர்வுபூர்வமான தத்துவார்த்த அடிப்படை இருப்பியல் கோட்பாட்டுச் சித்தாந்தத்தை அறிவியல், சமூகவியல் ரீதியாகவும் ஏற்றுக் கொள்வீர்கள் என்று நம்புகின்றோம். இல்லையேல் பொதுமக்கள் தமது ஜனநாயக வழி எதிர்ப்பை இடைவிடாது வெளிப்படுத்துவார்கள்.

மக்களிடமுள்ள நீதி பூர்வமான வாழ்வியல் உரிமை சமூக சம நீதி கோட்பாட்டை ஏற்றுணர்ந்து கொள்வீர்கள் என்றும் எமது நியாயமான வேண்டுகையை நிராகரிக்க மாட்டிர்கள் என நம்புகின்றோம். என குறித்த கடித்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.அதன் பிரதி இந்திய உயர்ஸ்தானிகருக்கும் அனுப்பி

# முல்லைத்தீவு மாவட்டத்தில் கனமழையால் 6 ஆயிரம் பேர் பாதிப்பு

டிசம்பர் 20, 2023



முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வருகின்ற கனமழை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 2,113 குடும்பங்களை சேர்ந்த 6,268 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் 176 குடும்பங்களை சேர்ந்த 524 பேர் இடைத்தங்கல் முகாம்களின் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினால் வெளியிடப்பட்ட தகவல் அடிப்படையில் இன்று புதன்கிழமை (20) காலை 9.30 மணி வரையான தகவல் அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவிலே அம்பாள்புரம், கரும்புள்ளியான், ஒட்டறுத்தகுளம், நட்டாங்கண்டல், பாண்டியன்குளம், செல்வபுரம், பாலிநகர், சிராட்டிகுளம், சிவபுரம், மூன்றுமுறிப்பு, பூவரசங்குளம், விநாயகபுரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த 333 குடும்பங்களை சேர்ந்த 1,076 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் மாங்குளம், பனிக்கன்குளம், இந்துபுரம், தட்டையர்மலை, புளியங்குளம், தச்சடம்பன், கூழாமுறிப்பு, கனகரத்தினபுரம், காதலியார்சமணங்குளம், பழம்பாசி, தண்டுவான், ஒட்டுசுட்டான், பேராறு, மணவாளன்பட்டமுறிப்பு, கணேசபுரம், முத்துவிநாயகபுரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த 592 குடும்பங்களை சேர்ந்த 1,748 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கள்ளப்பாடு, சிலாவத்தை, செல்வபுரம், வற்றாப்பளை, தண்ணிமுறிப்பு, முள்ளியவளை தெற்கு, கள்ளப்பாடு வடக்கு, கள்ளப்பாடு தெற்கு, கொக்கிளாய் வடக்கு கொக்குத்தொடுவாய் வடக்கு, செம்மலை, தண்ணீரூற்று, கணுக்கேணி மேற்கு, அளம்பில் வடக்கு, மாமூலை, அம்பலவன் பொக்கணை, வண்ணாங்குளம், குமாரபுரம், முள்ளியவளை தெற்கு, முள்ளியவளை மேற்கு, அளம்பில் தெற்கு, உப்புமாவெளி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த 450 குடும்பங்களை சேர்ந்த 1,366 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் அணிஞ்சியன்குளம், உயிலங்குளம், தென்னியங்குளம், கோட்டைகட்டிய குளம், ஆலங்குளம், தேராங்கண்டல், கல்விளான், மல்லாவி, யோகபுரம் கிழக்கு, புகழேந்திநகர், பாரதிநகர், யோகபுரம் மேற்கு, அம்பலப்பெருமாள்குளம், அமைதிபுரம், புத்துவெட்டுவான், பழையமுறிகண்டி, ஐயன்கன்குளம், துணுக்காய், யோகபுரம் மத்தி, திருநகர் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த 251 குடும்பங்களை சேர்ந்த 765 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் புதக்குடியிருப்பு மேற்கு, தேவிபுரம், மாணிக்கபுரம், உடையார்கட்டு வடக்கு, உடையார்கட்டு தெற்கு மற்றும் வள்ளிபுனம் மன்னாகண்டல் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த 472 குடும்பங்களை சேர்ந்த 1,277 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதேபோன்று வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவில் 15 குடும்பங்களை சேர்ந்த 36 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அந்தவகையிலே மொத்தமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 2113 குடும்பங்களை சேர்ந்த 6268 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் 7 இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்தனர். அனர்த்த நிலைமை ஓரளவு குறைந்து வருகின்ற நிலையில் தற்போது 2 இடைத்தங்கல் முகாம்களில் 176 குடும்பங்களை சேர்ந்த 524 பேர் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு பிரதேச செயலாளர்கள், பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவ பிரிவு ஊழியர்கள், பிரதேச சபை ஊழியர்கள், சுகாதார ஊழியர்கள், கிராம அலுவலர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டவர்கள் மக்களுக்கான சமைத்த உணவு மற்றும் அத்தியாவசிய தேவைகளை ஏற்பாடு செய்து வழங்கி வருகின்றனர்.



# கடந்த சில நாட்களாக பெய்த மழை காரணமாக யாழில் 2 ஆயிரம் குடும்பங்கள் பாதிப்பு!

டிசம்பர் 22, 2023

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் மழை காரணமாக, நேற்றைய தினம் வியாழக்கிழமை மாலை வரையில், 2033 குடும்பங்களைச் சேர்ந்த 6738 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 40 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்தார்.

ஆதிகபட்சமாக, சங்கானை பிரதேச செயலக பிரிவில் 783 குடும்பங்களைச் சேர்ந்த 2683 பேரும், கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் 320 குடும்பங்களைச் சேர்ந்த 974 பேரும், ஊர்காவற்துறை பிரதேச செயலாளர் பிரிவில் 310 குடும்பங்களை சேர்ந்த 940 பேரும், பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில் 212 குடும்பங்களைச் சேர்ந்த 712 பேரும், தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவில் 117 குடும்பங்களை சேர்ந்த 439 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவித்தார்.

# இந்திய உயர்ஸ்தானிகர் திரு. சந்தோஷ் ஜாவிடம் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் வேண்டுகோள்!

டிசம்பர் 22, 2023

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் தமிழர்களுக்கான ஏற்றுக்கொள்ளத்தக்க இறுதித்தீர்வு இன்னமும் வழங்கப்படவில்லை என்ற உண்மையை இந்திய ஆட்சியாளர்களிடம் கொண்டுசென்று, அதனைப் பெற்றுக்கொடுப்பதற்கு அவசியமான அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் திரு. சந்தோஷ் ஜாவிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராக புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் திரு. சந்தோஷ் ஜா வெள்ளிக்கிழமை (22) ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் தனது நற்சான்றுப் பத்திரத்தைக் கையளித்தார்.

அதுமாத்திரமன்றி அங்கு கருத்து வெளியிட்ட அவர் இந்திய - இலங்கை வரலாற்று நட்பை மேலும் பலப்படுத்தவும், வர்த்தக, முதலீட்டு, வலுசக்தி உள்ளட்ட பல்வேறு துறைகளில் நிலவும் நெருங்கிய ஒத்துழைப்பை மேம்படுத்திக்கொள்ளவும் அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமெனவும் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்துக் கருத்துரைத்த தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இந்திய உயர்ஸ்தானிகர் திரு. சந்தோஷ் ஜா அவரது பணிகளை சிறப்பாக முன்னெடுப்பதற்கு வாழ்த்துவதாகக் குறிப்பிட்டார்.

இருப்பினும் கடந்த காலத்தில் தமிழர் பிரச்சினைக்கு நிலையான இறுதித்தீர்வொன்றைக் கண்டடைவதை முன்னிறுத்தியே இருநாடுகளுக்கும் இடையில் இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது எனவும், அதில் இந்தியாவின் நலன்களும் தங்கியிருந்ததாகவும் தெரிவித்த அவர், இருப்பினும் அவ்வொப்பந்தத்தின் பிரகாரம் தமிழர்களுக்கான தீர்வு இன்னமும் வழங்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டினார்.

எனவே இந்த உண்மையை புதிய உயர்ஸ்தானிகர் திரு. சந்தோஷ் ஜா இந்திய ஆட்சியாளர்களிடம் கொண்டுசெல்ல வேண்டும் எனவும், அதனூடாக ஆகக்குறைந்தது தமிழர் பிரச்சினைக்கு அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியவகையிலான தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு அழுத்தம் பிரயோகிக்க வேண்டும் எனவும் கஜேந்திரகுமார் மேலும் வலியுறுத்தினார்.



# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டம் ஆரம்பித்து 2500 ஆவது நாள்!

# இமாலயத்துரோகிகள் மீது அழுகிய முட்டைகள் வீச்சு!

டிசம்பர் 25, 2023

புலம்பெயர் தேசங்களில் அடைக்கலம் புகுந்திருந்துவிட்டு தற்போது தென்னிலங்கை ஆட்சியாளர்களது கூலிப்பட்டாளமாக களமிறங்கும் தரப்புக்கள் மீது உள்ளூர் மக்களது சீற்றம் வலுக்க தொடங்கியுள்ளது.







இந்நிலையில் உலகத் தமிழர் பேரவையின் உறுப்பினர்களின் புகைப்படம் தாங்கிய பதாகையின் மீது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் அழுகிய முட்டைகளை வீசி தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தியுள்ளனர்.

அண்மையில் இலங்கைக்கு வருகை தந்துள்ள உலக தமிழர் பேரவையினர் கொழும்பை மையப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை முதலில் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

இந்நிலையில் வவுனியாவில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டம் ஆரம்பித்து 2500 ஆவது நாளான இன்று(25) உலகத் தமிழர் பேரவையினருக்கு எதிராக போராட்டம் நடைபெற்றுள்ளது.

உலகத் தமிழர் பேரவையினரின் செயற்பாடு தமிழ் மக்களுக்கு விரோதமானது எனவும் அவர்கள் இமாலய துரோகிகள் எனவும் தெரிவித்திருந்ததோடு தமிழ் மக்களுடைய அபிலாசைகளையும் இறைமையும் பாதுகாப்பதற்கு பொதுவாக்கெடுப்பு ஒன்றே உரிய தீர்வு என தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் உலகத் தமிழர் பேரவை உறுப்பினர்களின் புகைப்படம் மீது அழுகிய முட்டைகளை வீசி தமது எதிர்ப்பினையும் வெளிப்படுத்தியுள்ளனர்.








# மட்டு மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரை போராட்டம் 100வது நாளாகவும் தொடர்கிறது!

டிசம்பர் 23, 2023

மட்டு மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரையை மீட்டு தருமாறு கோரி பண்ணையாளர்களால் முன்னெடுக்கப்படும் போராட்டம் இன்று நூறாவது நாளாகவும் தொடர்கின்றது.

இதனை முன்னிட்டு சித்தாண்டி முரகன் ஆலய வளாகத்தி இருந்து போராட்டம் இடம்பெறும் பகுதி வரை இன்றைய நாள் பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பண்ணையாளர்கள் உள்ளிட்ட பலர் இந்த எதிர்ப்பு பேரணியில் பங்கேற்றுள்ளனர்.

இதன்போது மட்டக்களப்பு மாதவனை பகுதியில் முன்னெடுக்கப் பட்டுவரும் சட்டவிரோத குடியேற்ற நடவடிக்கைகளை உட னடியாக நிறுத்தி அவற்றில் கால்நடை வளர்ப்புக்கு வழங்க வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டது

மேலும், மாதவனை பகுதியில் மேற்கொள்ளப்படும் அத்துமீறிய குடியேற்றங்கள், கால்நடைகள் மீது மேற்கொள்ளப்படும் தாக் குதல்கள், காவல்துறையினரின் செயற்பாடுகள் மற்றும் தமது கோரிக்கைகளை உள்ளடக்கிய வகையில் மகஜர் தயாரிக்கப் பட்டு அங்கு கடமையிலுள்ள காவல்துறையினருக்கு வழங்கப் பட்டது.

போராட்டத்தின் போது ஏராளமான காவல்துறையினர் குவிக் கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதுடன் அமைதியான முறை யில் போராட்டம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அண்மைக் காலங்களாக மயிலத்தமடு, மாதவனை பகுதியில் பெரும்பான்மையின அத்துமீறிய குடியேற்றவாசிகளினால் பல்வேறு அட்டூழியங்கள் அரங்கேற்றப்பட்டு வருகின்றன.

தமிழர்களின் பூர்வீக பகுதிகளான மயிலத்தமடு, மாதவனை பகுதிகளில் மாடுகளை மேய்ச்சலுக்கு விடும் தமிழ் பண்ணை யாளர்கள் சில சிங்கள இனத்தவர்களால் அச்சுறுத்தபடு கின்றனர்.

அதேவேளை, பொறி வைத்து பிடித்து கால்நடைகளை வெட்டும் செயற்பாட்டிலும் அத்து மீறிய குடியேற்றவாசிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் மேய்ச்சலில் ஈடுபடும் மாடுகளை துப்பாக்கியால் சுட்டு கொலைசெய்யும் அட்டூழியங்களும் அரங்கேறி வருகின்றன.

இவ்வாறான சூழலிலேயே, மாதவனை மயிலத்தமடு பண்ணையாளர்கள் தங்களது மேய்ச்சல் தரைகளை தங்க ளுக்கு மீட்டுத் தரக் கோரி கடந்த செப்டம்பர் 15 ஆம் திகதி சுழற்சி முறையிலான போராட்டத்தில் குதித்தனர்.

பண்ணையாளர்கள் கொட்டும் மழையிலும், தங்களது வாழ்விடங்களையும் கால்நடைகளை இழந்தும் இந்த அறவழிப் போராட்டத்தை 100 நாட்களாக முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது .
































# ஆழிப்பேரலையில் காவு கொல்லப்பட்டவர்களின் 19ஆம் ஆண்டு நினைவேந்தல் – யாழ் வடமராட்சி!

டிசம்பர் 26, 2023

ஆழிப்பேரலையில் காவு கொல்லப்பட்டவர்களின் 19 ஆம் ஆண்டு நினைவேந்தல் உணர்வுபூர்வமாக யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கில் இடம்பெற்றது.

உடுத்துறை சுனாமிப் பொது நினைவாலயத்தில் உடுத்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் நினைவேந்தல் இடம்பெற்றது.

சுனாமியால் உயிரிழந்தவர்களுக்காக அமைக்கப்பட்ட தூபிக்கு மாலை அணிவிக்கப்பட்டு 9.25 மணிக்கு பொதுச்சுடர் ஏற்றப்பட்டது. தொடர்ந்து உயிரிழந்தவர்களின் புகைப்படங்களுக்கு மாலையிட்டு சுடர்கள் ஏற்றி உணவுகளை படைத்து உறவினர்கள் வணக்கம் செலுத்தினர்.

இதன்போது பெருமளவான பொதுமக்கள், மதகுருமார்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள் என பலரும் கலந்துகொண்டதுடன் உறவினர்கள் உயிரிழந்தவர்களை நினைத்து கண்ணீர் மல்கினர்.

கடந்த 2004 டிசம்பர் 26ம் திகதி ஏற்பட்ட சுனாமி ஆழிப்பேரலை பேரனர்த்தம் காரணமாக பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் உயிரிழந்ததுடன் பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களும் அழிந்தமை குறிப்பிடத்தக்கது.















# மயிலத்தமடுவில் கால்நடைகளை கொல்லும் அத்துமீறிய சிங்கள குடியேற்றவாசிகள்!

டிசம்பர் 27, 2023

மட்டக்களப்பு மயிலத்தமடுவில் பண்ணையாளர்களை சுடுவதற்கு துப்பாக்கியுடன் அத்துமீறிய சிங்கள குடியேற்ற வாசிகள் தொடர்பில் தகவல்கள் வெளிவந்துள்ளது.

இன்று 27ஆம் திகதி தற்போது கிடைத்துள்ள தகவலின் பிரகாரம் மயிலத்தமடுமாதவனையில் ஆறு பண்ணையாளர்களின் மூன்று பசுக்கள் சூட்டு காயத்துடனும் இரண்டு பசுக்கள் வெட்டு காயத்துடனும் வந்து சேர்ந்துள்ளது.

இதனிடையே  இரண்டு பசுக்கன்றுகளை பிடித்து கால்களை கூட்டி கட்டி மோட்டார் சைக்கிளில் ஏற்றும்போது பண்ணையாளர்கள் சென்று அவர்களிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

முன்னதாக குறித்த பண்ணையாளர்களின் வாடிகளை நோக்கி அத்துமீறிய குடியேற்ற வாசிகள் துப்பாக்கியுடன் சென்றுள்ளதாக தெரியவந்துள்ளது.





# மாவீரர் நாள் நிகழ்வுகளை நினைவேந்தியது தொடர்பில் தந்தை, மகனின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது!

டிசம்பர் 27, 2023

மட்டக்களப்பில் மாவீரர் தின நிகழ்வுகளை நினைவேந்தியமை தொடர்பில், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப் பட்ட, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மாவட்ட அமைப் பாளர் மற்றும் அவரது மகனின் விளக்கமறியல் நீடிக்கப்பட் டுள்ளது.

இன்றைய நாள் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதிபதி முன்பாக ஒருவர் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் அவர் களின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

சுகவீனம் காரணமாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப் படாத நிலையில் அவரது மகன் நீதிமன்றில் ஆஜர்படுத்தப் பட்டார்.

அதன்போதே எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதனிடையே தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரது படம் மற்றும் சின்னம் பொறித்த ரிசேர்ட் அணிந்து மாவீரர் நாளில் பங்கெடுத்த குற்றச்சாட்டில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தினால் இன்று புதன்கிழமை (27) பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த நவம்பர் மாதம் 27ஆம் திகதி கொடிகாமத்தில் இடம் பெற்ற மாவீரர் நாள் நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சின்னம் மற்றும் தலைவரது புகைப்படம் தாங்கிய ரிசேர்ட்டை அணிந்து கொண்டு மாவீரர் தினத்தில் பங்கு பற்றிய நிலையில் அன்றைய தினமே இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.



# புரட்சிக் கலைஞர் விஜயகாந் அவர்களுக்கு தமிழீழப் பரப்பு எங்கும் கண்ணீர் வணக்க நிகழ்வு!










# ஈழத் தமிழர்களை ஆழமாக நேசித்த விஜயகாந் அவர்களது மறைவு ஈழத்தமிழ் மக்களுக்குப் பேரிழப்பு!

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பாராளுமன்ற உறுப்பினர் – தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

டிசம்பர் 29, 2023

தமிழ் திரைத்துறையில் 40 ஆண்டுகளாக முன்னணி நட்சத்திரமாக திகழ்ந்தவரும், தமிழக தேசிய முற்போக்கு திராவிட கழகத் தலைவரும் முன்னைநாள் தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான பெருமதிப்பிற்குரிய விஜயகாந் அவர்கள் - சுகயீனம் காரணமாக மறைந்த செய்தி உலகத் தமிழர்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஈழத்தமிழர்களின் உரிமைப் போராட்டத்தின் மீதும், தேசியத் தலைமை மீதும் மிகுந்த அன்பும் - மரியாதையும் - பற்றும் கொண்டு, தனது இறுதிக்காலம் வரை விஜயகாந் அவர்கள் வாழ்ந்திருந்தார். ஈழத்தமிழர்கள் மட்டுமன்றி உலகத்தமிழர் களின் மனங்களிலும் உயரிய மரியாதைக் குரியவராக விஜயகாந் நிறைந்திருந் தார்.




அவரது மறைவானது பெரும் சோகத்தை ஏற் படுத்தியிருக்கும் இவ் வேளையிலே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யினராகிய நாமும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரி வித்துக்கொள்வதோடு - அவரது இழப்பிலும் அவரது குடும்பத்தின் துயரிலும் பங்கெடுத்துக் கொள்வதோடு - எமது ஆழமான வருத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,
பாராளுமன்ற உறுப்பினர்,
தலைவர்

செ.கஜேந்திரன்,
பாராளுமன்ற உறுப்பினர்,
பொதுச் செயலாளர்
29.12.2023 - தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

# தேசியத் தலைவர் அவர்களின் தந்தை திருவேங்கடம் வேலுப்பிள்ளை அவர்களின் 14ம் ஆண்டு நினைவு

ஜனவரி 06, 2023

2009ம் ஆண்டு வைகாசி மாதம் முல்லைத்தீவு மாவட்டம் வட்டுவாகல் பகுதியில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் சிறைப்படுத்தப்பட்டு பல மாத காலங்கள் சொல்லொணா துயர் களுக்கு மத்தியிலும் முகாமை விட்டு செல்ல அனுமதிக் காமலும், உரிய சிகிச்சைகள் அளிக்க மறுத்து 06.01.2010 அன்று சாவினைத் தழுவிக்கொண்ட தமிழீழத் தேசியத் தலை வர் மேதகு பிரபாகரன் அவர்களின் தந்தை திருவேங்கடம் வேலுப்பிள்ளை அவர்களின் 13ம் ஆண்டு நினைவு வணக்க நாள் இன்றாகும்.

மாதந்தை திருவேங்கடம் வேலுப்பிள்ளை அவர்கள் தனது 86 வது வயதில் பனாகொடவில் இருக்கும் இராணுவ முகாமில் தனது இறுதி மூச்சை எம் மண்ணுக்காக விட்டுச்சென்றார் .

ஈழத்தமிழர்களின் ஒரே தேசியத்தலைவர் மேதகு பிரபாகரன் வேலுப்பிள்ளை அவர்களை எம் தேசத்தின் விடிவுக்காய் தந்த எங்கள் மாதந்தை திருவேங்கடம் வேலுப்பிள்ளை அவர்களின் பிரிவு எம்மை மிக ஆழ்ந்த சோகத்தில் இட்டுசென்றது.

யுத்தம் முடிவுற்று பல மாதங்கள் ஆகியும் கடும் நோயின் காரணமாக தவித்த போது கூட அவருக்கு சிகிச்சை அளிக்க மறுத்த சிங்கள கொடூர அரசு அவரை அவ் முகாமை விட்டு செல்ல அனுமதிக்காமல் தனது கோர முகத்தை காட்டி நின்றது வார்த்தைக்கு வார்த்தை மனித உரிமையை உச்சரிக்கும் வல்லரசு நாடுகளும் சர்வதேச நாடுகள் அதை கண்டும் காணாமல் மௌனம் சாதித்தது .

உண்மையிலே உலக நாடுகள் சுயநலம் அற்று நேர்த்தியாக செயல்பட்டிருந்தால் மாதந்தை திருவேங்கடம் வேலுப்பிள்ளை அவர்கள் மட்டும் அல்ல எத்தைனையோ உயிர்கள் காப்பாற றப்பட்டு இருந்திருக்கலாம்.





# உண்மை, நல்லிணக்க ஆணைக்குழுவை ஒருபோதும் ஏற்கோம்!

## வடகிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் பொதுச்செயலாளர் லீலாதேவி

டிசம்பர் 31, 2023

பாதிக்கப்பட்ட தரப்பினர் என்ற ரீதியில் தம்முடன் எவ்வித கலந்துரையாடலோ அல்லது தமது ஒப்புதலோ இன்றி உருவாக்கப்படக்கூடிய உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை தாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை எனத் தெரிவித்துள்ள வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் பொதுச்செயலாளர் லீலாதேவி, இவ்விடயத்தில் சுவிட்ஸர்லாந்து, ஜப்பான் மற்றும் தென்னாபிரிக்க இராஜதந்திரிகளின் செயற்பாடுகள் குறித்து ஏமாற்றத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இனங்களுக்கிடையிலான ஐக்கியத்தை உறுதிப்படுத்தி சிறந்ததொரு இலங்கையைக் கட்டியெழுப்புவதை நோக்காகக் கொண்டே உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படவுள்ளதாகவும், இம்முயற்சிக்கு அனைத்து தமிழ்த்தரப்புக்கள் உள்ளடங்கலாக சிறுபான்மையின மக்கள் முழுமையான ஆதரவை வழங்கவேண்டும் எனவும் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ அறைகூவல் விடுத்துள்ளார்.

அதுமாத்திரமன்றி உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கு அமைச்சரவை அனுமதியளித்திருப்பதாகவும், அதற்குரிய சட்டமூல வரைவு எதிர்வரும் ஜனவரி மாதம் வர்த்தமானி ஊடாக வெளியிடப்படும் எனவும் தெரிவித்துள்ள அவர், அச்சட்டமூலம் தொடர்பில் அனைத்துத் தரப்பினரதும் கருத்துக்களைக் கேட்டறிந்து, அவசியமேற்படின் திருத்தங்களை மேற்கொண்டு, அதற்குப் பாராளுமன்றத்தில் அங்கீகாரம் பெறப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு உருவாக்கம் தொடர்பில் குறிப்பாக வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் உள்ளிட்ட பாதிக்கப்பட்ட தரப்பினருடனும், அவர்கள் சார்ந்து இயங்கிவருகின்ற சிவில் சமூக செயற்பாட்டாளர்களுடனும் உரியவாறான கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படவில்லை என பரவலான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுவரும் நிலையிலேயே வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் பொதுச்செயலாளர் லீலாதேவி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.




உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு உருவாக்கம் குறித்தோ அல்லது அதற்குரிய சட்டமூல வரைபு தயாரிப்பு குறித்தோ பாதிக்கப்பட்ட தரப்பினர் என்ற ரீதியில் எம்முடன் எந்தவொரு கலந்துரையாடலும் முன்னெடுக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டார்.

அதேபோன்று தமது தேவைப்பாடுகள் என்னவென்பதை அறியமுற்படாமல், தமது ஒப்புதலின்றி உருவாக்கப்படக்கூடிய உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை தாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை எனத் தெரிவித்த அவர், ஏற்கனவே அரசாங்கத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் மற்றும் இழப்பீட்டுக்கான அலுவலகம் போன்ற கட்டமைப்புக்களின் பயனற்றதன்மை குறித்து சுட்டிக்காட்டினார்.

மேலும் அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர், சுவிட்ஸர்லாந்து தூதுவர் மற்றும் தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் ஆகிய இராஜதந்திரிகளிடம் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான தமது நிலைப்பாட்டைத் தெளிவாக எடுத்துரைத்ததாகவும், அதனை செவிமடுத்த அவர்கள் அதற்கேற்றவாறு நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதியளித்ததாகவும் தெரிவித்த லீலாதேவி, இருப்பினும் தற்போது அதற்கு முற்றிலும் முரணான விதத்தில் இடம்பெற்றுவரும் செயற்பாடுகள் குறித்து கடும் அதிருப்தியையும், ஏமாற்றத்தையும் வெளியிட்டார்.

# அரச இயந்திரம் மீதான எதிர்ப்பை ஜனாதிபதி தேர்தல் பகிஷ்கரிப்பின் மூலமே காண்பிக்கலாம்!

## தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி – கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

டிசம்பர் 31, 2023

எமது அரசியல் முற்றிலும் மாறுபட்டதாகும். இன்றளவிலே ஒட்டுமொத்த அரச இயந்திரமும் தமிழர்களுக்கு எதிரானதாகவே இருக்கின்றது. அவ்வாறிருக்கையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவதானது, அந்த அரச இயந்திரத்தை ஏற்றுக்கொண்டதாகவே அமையும்.

மாறாக இந்த ஒட்டுமொத்த அரச கட்டமைப்பையும் எதிர்க்கின்றோம் என்பதை ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிப்பதன் மூலமே காண்பிக்கமுடியும் என்று தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்மக்கள் சார்பில் மும்மொழிகளிலும் தேர்ச்சியுடைய கஜேந்திரகுமார் பொன்னம்பலம் களமிறங்கினால், தான் அவரை ஆதரிப்பதற்குத் தயாராக இருப்பதாக தமிழ் தேசியக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அதுமாத்திரமன்றி ஜனாதிபதித் தேர்தலை தமிழ்மக்கள் பகிஷ்கரிக்கவேண்டும் என வலியுறுத்துவதனால் ஏற்படக்கூடிய பாதகமான தாக்கங்கள் குறித்தும் அவர் விளக்கமளித்துள்ளார்.



இவ்வாறானதொரு பின்னணியில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை தமிழ்மக்கள் பகிஷ்கரிக்கவேண்டும் என வலியுறுத்துவதால் சி.வி.விக்கினேஸ்வரன் கூறியதைப்போன்ற எதிர்மறையான விளைவுகள் ஏற்படக்கூடுமல்லவா எனவும், 2005 ஆம் ஆண்டு தமிழர்கள் ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரித்தமை அவர்களுக்குப் பாதிப்பாக அமைந்ததாகக் கூறப்படும் கருத்துக்கள் பற்றியும் வினவியபோதே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

இதுபற்றி அவர் மேலும் கூறுகையில்,

2005 ஆம் ஆண்டில் விடுதலைப்புலிகள் மாத்திரமன்றி, கூட்டமைப்பினரும் ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு தமிழ்மக்களை வலியுறுத்தினார்கள்.

இருப்பினும் அப்போது அதற்கு எதிரான நிலைப்பாட்டில் இருந்தவர்கள் ரணில் விக்ரமசிங்க மிகவும் நல்லவர் எனவும், தமிழர்கள் தேர்தலைப் பகிஷ்கரித்தமையினாலேயே மஹிந்த ராஜபக்ஷ வெற்றியீட்டினார் எனவும் கருத்தக்களை வெளியிட்டனர்.

ஆனால் உண்மையில் யுத்தம் முழுமையாக முடிவுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கும் தற்போதைய சூழ்நிலையில், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எவ்வளவு மோசமாக செயற்படுகின்றார் என்று பாருங்கள்.

ஏற்கனவே ஜே.வி.பி (ஜனதா விமுக்தி பெரமுன) எழுச்சியின் போது ரணில் விக்ரமசிங்க எவ்வாறு நடந்துகொண்டார் என்பதும், அதற்கு சிறந்த உதாரணமான 'பட்டலந்த முகாம்' பற்றிய கதைகளும் அனைவருக்கும் தெரியும்.

எனினும் இப்போது அவர் எவ்வாவு மோசமானவர் என்பது மிகத்தெளிவாக வெளிப்பட்டுள்ளது.

ஆகவே 2005 இல் தமிழர்கள் தேர்தலை பகிஷ்கரித்திருக்காவிடின் ரணில் விக்ரமசிங்க வெற்றிபெற்றிருந்தாலும், அதன் பின்னர் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியின்கீழ் இடம்பெற்றதைப் போன்ற மனித உரிமை மீறல்களும், போர்க்குற்றங்களும் நிச்சயமாக இடம்பெற்றிருக்கும்.

ஆனால் அது இப்போது சர்வதேச ரீதியிலும், மேற்குலகநாடுகள் மத்தியிலும் பரவலாகப் பேசப்படுவதைப்போன்று பேசப்பட்டிருக்காது. மேற்குலகம் ரணிலுக்கு ஆதரவாகவே செயற்பட்டிருக்கும். எனவே சமகால கள நிலைவரங்களை அடிப்படையாகக்கொண்டு நோக்குகையில் 2005 இல் தமிழர்கள் ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணித்ததில் எந்தவொரு பிழையும் இல்லை.

இன்றளவிலே தமிழ்மக்கள் சார்ந்த விவகாரங்கள் கணக்கிலெடுக்கப்படாத நிலையே காணப்படுகின்றது. அதற்கு தமிழ் அரசியல்வாதிகளின் செயற்பாடுகளும் காரணமாக அமைந்திருக்கின்றன.

எனவே நாம் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை தனியொரு தேர்தலாகவன்றி, எதிர்காலத்தேர்தல்களை எவ்வாறு அணுகவேண்டும் என்ற ரீதியிலேயே பார்க்கின்றோம்.

இந்தத் தேர்தலில் பொதுவேட்பாளரொருவரைக் களமிறக்கிப் போட்டியிடுவதால், அவர் வெல்லப்போவதோ அல்லது தமிழ் மக்களுக்கு ஏதேனும் நன்மைகள் கிட்டப்போவதோ இல்லை.

எனவே தமிழர் தரப்பில் எவ்வித இழப்புக்களுமின்றி, அதே வேளை மிகவும் வலுவான செய்தியை பெரும்பான்மையின மக்களுக்கும், சிங்கள அரசியல்வாதிகளுக்கும் கூறுவதற்கான மிகச்சிறந்த சந்தர்ப்பமாகவே இந்த ஜனாதிபதித் தேர்தலைக் கருதுகின்றோம்.

அவ்வாறிருக்கையில் தமிழர்கள் சார்பில் பொதுவேட்பாளரொருவரைக் களமிறக்கவேண்டும் என்று கூறுவதெல்லாம், அவர்களுக்கு விருப்பமான ஏதோவோரு தரப்பை (சிங்கள வேட்பாளரை) ஆதரிப்பதற்காக மாத்திரமேயாகும் என்றார்.

அவ்வாறெனில் 'சி.வி.விக்கினேஸ்வரன் கூறுவதுபோல் நீங்கள் பொதுவேட்பாளராகக் களமிறங்குவதற்கு முன்வரலாமல்லவா? அதனூடாக நீங்கள் கூறவதைப்போன்ற சம்பவங்கள் இடம்பெறாதிருப்பதையும் உறுதிப்படுத்தலாம் அல்லவா?' என எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர்,

'எமது அரசியல் முற்றிலும் மாறுபட்டதாகும். இன்றளவிலே ஒட்டுமொத்த அரச இயந்திரமும் தமிழர்களுக்கு எதிரானதாகவே இருக்கின்றது. அவ்வாறிருக்கையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவதானது, அந்த அரச இயந்திரத்தை ஏற்றுக்கொண்டதாகவே அமையும்.

மாறாக இந்த ஒட்டுமொத்த அரச கட்டமைப்பையும் எதிர்க்கின்றோம் என்பதை ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிப்பதன் மூலமே காண்பிக்கமுடியும்.

ஆகவே தமிழ்மக்கள் பழைய கதைகளை நம்பி மீண்டும் மீண்டும் ஏமாறாமல், இவ்விடயத்தில் நன்கு சிந்தித்து தீர்மானமொன்றை மேற்கொள்ளவேண்டும்' என்று வலியுறுத்தினார்.



# கனடிய செய்திகள்

## ஒன்ராரியோ கோச்சரன் நகரில் 10 டொலருக்கு ஒரு துண்டு காணி விற்பனைக்கு!

டிசம்பர் 16, 2023

கனடாவின் ஒன்ராரியோ மாகாணத்தின் சிறிய நகரமொன்றில் ஒரு துண்டு காணி பத்து டொலர்களுக்கு விற்பனை செய்யப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.




ரொரான்ரோவிலிருந்து சற்றே தொலைவில் அமைந்துள்ள கோச் சரான் என்னும் நகரில் இவ்வாறு காணி விற்பனை செய்யப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முற்போக்கு அமைப்புக்களைப் போன்று தமது மாநகராட்சி செயற்படுவதாக கோச்ரானின் மேயர் பீட்டர் பொலிடிஸ் தெரிவித் துள்ளார்.



கோச்ரான், ரொரான்ரோவிலிருந்து சுமார் 7 மணித்தியால பயண தூரத்தில் அமைந்துள்ளது.

பெருந்தொகைக்கு விற்பனை செய்யப்படக்கூடிய காணிகளே இவ்வாறு சிறு தொகையில் விற்பனை செய்யப்பட உள்ள தாகவும் எதிர்வரும் ஆண்டு இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப் படும் எனவும் மேயர் தெரிவித்துள்ளார்.

புதிய வீடுகளை நிர்மானிப்பதற்காக இவ்வாறு குறைந்த விலை யில் காணிகள் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



நகரின் சனத்தொகையை அதிகரிக்கும் வகையில் இவ்வாறு குறைந்த விலையில் காணிகள் வழங்கப்படும் என அவர் குறிப் பிட்டுள்ளார்.

## கன்சவேர்ட்டிவ் கட்சி ஆட்சியமைத்தால் இலங்கையில் இனப்படுகொலைகளில் ஈடுபட்டவர்களிற்கு எதிராக நடவடிக்கை!

### கன்சவேர்ட்டிவ் கட்சி தலைவர் பியர் பொலியர்

டிசம்பர் 17, 2023

கனடாவில் கன்சவேர்ட்டிவ் கட்சி ஆட்சியமைத்தால் சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான சட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக நாங்கள் கனடாவின் வெளி விவகார அமைச்சின் சட்டத்தரணிகளை பயன்படுத்துவோம் என கட்சியின் தலைவர் பியர் பொலியர் தெரிவித்துள்ளார்.

கனடாவின் ஊடகமொன்றிற்கு வழங்கிய பேட்டியில் கனடாவில் கன்சர்வேட்டிவ் கட்சி ஆட்சியமைத்தால் தமிழர்கள் இனப் படுகொலை தொடர்பில் என்ன நிலைப்பாட்டை எடுக்கவுள் ளீர்கள் என்ற கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில்,

1980களில் கனடாவிற்கு பெருமளவு புலம்பெயர்ந்த தமிழர் களை முதலில் வரவேற்றவர் கன்சவேர்ட்டிவ் கட்சியின் அப் போதைய பிரதமர் பிரையன் முல்ரோனி, இலங்கை அரசாங் கத்திற்கு எதிராக முதலில் சர்வதேச தடைகளை விதித்தது கொழும்பில் இடம்பெற்ற பொதுநலவாய உச்சிமாநாட்டில் கலந் துகொள்ளாமல் வெளியேறி மகிந்த ராஜபக்ச அரசாங்கத்தை அவமானப்படுத்தியது பிரதமர் ஹார்ப்பர் அரசாங்கமே.

இலங்கையில் இனப்படுகொலையில் ஈடுபட்ட அரசாங்க உறுப் பினர்களிற்கு எதிராக மக்னிட்ஸ்கி தடைகளை விதிப்பதே தற் பொது என திட்டம், இதன் மூலம் சர்வதேச தடைகள் ஊடாக அவர்களது தனிப்பட்ட நிதிகளை முடக்கலாம்.

சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான சட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக நாங்கள் கனடாவின் வெளிவிவகார அமைச்சின் சட்டத்தரணிகளை பயன்படுத் துவோம்,

இதன் மூலம் இலங்கை அரசாங்கத்தின் உறுப்பினர்களை இனப்படுகொலைக்காக இனங்கண்டு சட்டநடவடிக்கைகளிற்கு உட்படுத்தலாம்.



தமிழர்களிற்கு எதிராக தொடரும் இனப்படுகொலை நடவடிக் கைகளிற்காக இலங்கை அரசாங்கத்தை தொடர்ந்து கண்டிப் போம் தனிமைப்படுத்துவோம் என்றார்.

## கனடாவில் வட்டி வீதங்கள் குறைப்புக்கான சாத்தியம் 2024 இல்லை!

டிசம்பர் 17, 2023

வட்டி வீதங்களை குறைப்பதற்கான சாத்தியங்கள் குறைவு என அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடிய மத்திய வங்கியின் ஆளுனர் ரிப் மெக்கலம் இதனைத் தெரிவித்துள்ளார். வங்கி வட்டி வீதங்களை தற்போதைக்கு குறைக்கும் சாத்தியங்கள் கிடையாது என அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

வட்டி வீதங்களை குறைப்பது தொடர்பில் துரித கதியில் தீர்மானங்கள் எடுக்கப் போவதில்லை அவர் தெரிவித்துள்ளார்.

பணவீக்க நிலைமைகள் குறைவடைந்து செல்லும் நிலையை அவதானிக்க முடிவதாக அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2024ம் ஆண்டில் பணவீக்கம் படிப்படியாக குறை வடையும் சாத்தியங்கள் காணப்படுவதாக அவர் குறிப்பிட் டுள்ளார்.

எனினும் உலகப் பொருளாதாரத்தில் நிலவி வரும் பதற்ற நிலைமைகள் பொருளாதாரம் மற்றும் நிதிச் சந்தைகளில் தாக்கத்தை செலுத்தும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.




குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளிலும், ஐரோப்பாவிலும் நிலவி வரும் போர் பதற்றம் காரணமாக பொருளாதார நிலைமைகள் குறைந்து விட்டதாக கருத முடியாது என தெரிவித்துள்ளார்.

கனடாவில் பணவீக்கத்தை இரண்டு வீதமாக குறைக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த இலக்கினை எட்டும் வரையில் வட்டி வீத குறைப்பிற்கு காத்திருக்க வேண்டிய அவசியமில்லை எனவும் ரிப் மெக்கலம் தெரிவித்துள்ளார்.

# செங்கடலில் கப்பல் பாதுகாப்பு பணியில் இணையும் கனடா!

டிசம்பர் 20, 2023

ஹூதி போராளிகளின் தாக்குதல்களை தடுக்கும் நோக்கில் செங்கடலில் அமெரிக்க தலைமையிலான கூட்டுப் பாதுகாப்பு படையில் கனடாவும் இணைந்து கொண்டுள்ளது.

செங்கடலில் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படை யணியினால் இந்த பாதுகாப்பு பணி முன்னெடுக்கப்பட உள்ளது.

செங்கடலில் பரப்பில் பயணிக்கும் வர்த்தக கப்பல்கள் எதிர் நோக்கும் அச்சுறுத்தல்களை தடுக்கும் நோக்கில் அமெரிக்கா தலைமையிலான நாடுகள் இந்த பாதுகாப்பு படையணியை உருவாக்கியுள்ளன.

யேமனில் இயங்கி வரும் ஹூதி போராளிகள் செங்கடலில் பயணிக்கும் வர்த்தக கப்பல் மீதான தாக்குதல்களை தீவிரப் படுத்தியுள்ளனர்.

ஹூதி போராளிகளின் அச்சுறுத்தல்களை தடுக்கும் நோக்கில் அமெரிக்கா தலைமையிலான சர்வதேச கூட்டுப்படை உருவாக்கி பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் லொயிட் ஒஸ்டின் பாதுகாப்புப் படை குறித்து அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார்.




# கனடாவின் சனத்தொகை வேகமாக அதிகரிப்பு!

டிசம்பர் 20, 2023

கனடிய மொத்த சனத்தொகையில் வேகமான மாற்றம் பதிவாகி யுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த 2023ம் ஆண்டின் மூன்றாம் காலாண்டுப் பகுதியில் கனடாவின் சனத்தொகையானது 430000ஆல் அதிகரித் துள்ளது.

தற்காலிக அடிப்படையிலான வெளிநாட்டுப் பிரஜைகளின் வருகை உயர்வடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்காலிக வெளிநாட்டு பணியாளர்கள் மற்றும் வெளிநாட்டு மாணவர்கள் ஆகியோரின் வருகையின் காரணமாக சனத் தொகையில் வேகமான மாற்றம் பதிவாகியுள்ளது.

சுமார் 66 ஆண்டுகளின் பின்னர் ஒரு காலாண்டில் கனடாவில் பதிவான மிக அதிகளவான சனத்தொகை வளர்ச்சி இந்த ஆண்டின், மூன்றாம் காலாண்டில் பதிவாகியுள்ளது.

கடந்த ஒக்ரோபர் மாதத்தில் நாட்டின் சனத்தொகையானது 40.5 மில்லியன் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் புள்ளிவிபரவியல் திணைக்களம் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளது.

மூனறாம் காலாண்டில் அதிகரித்த மொத்த சனத்தொகையில் 313000 பேர் வெளிநாட்டுப் பிரஜைகள் என்பது குறிப்பிடத் தக்கது.

சனத்தொகை வளர்ச்சி வேகம் வீடுகளுக்கான பற்றாக்குறை உள்ளிட்ட சில பிரச்சினைகளை மேலும் அதிகரிக்கச் செய்யும்




என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# மஹிந்த ராஜபக்ஷவுடன் சந்திப்பு உலகத் தமிழர் பேரவைக்கு கரி ஆனந்தசங்கரி கண்டனம்!

டிசம்பர் 20, 2023

உலகத் தமிழர் பேரவையும், கனேடிய தமிழ் காங்கிரஸூம் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் சந்தித்து கலந்துரையாடியமைக்கு கனேடிய அமைச்சர் கரி ஆனந்தசங்கரி கண்டனம் வெளியிட்டுள்ளார்.



பாரிய மனித உரிமை மீறல்களுக்காக மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் மீது 2023 ஆம் ஆண்டு ஜனவரி கனேடிய அரசு தடைகளை விதித்தமையும் , அமைச்சர் கரி ஆனந்தசங்கரி சுட்டிக்காட்டி யுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போர்க்குற் றங்கள், இனப்படுகொலை என்பவற்றுக்கு பொறுப்புக் கூறலை வலியுறுத்தி பல வருட போராட்டத்திற்கு பின்னரே இந்த தடை விதிக் கப்பட்டதாகவும் கூறியுள்ளார்.

இந்நிலையில் பாதிக்கப்பட்டவர்கள், சமூக அமைப்புகள், இலங்கை தமிழர்களுடன் கலந்தாலோசிக்காது மேற்கொள்ளப்படும் இந்த முயற்சி பாரிய தவறு என்றும் கரி ஆனந்தசங்கரி கண்டனம் வெளியிட் டுள்ளார்.

மேலும் ஈழத்தில் தாய்நாட்டில் உள்ள தமிழ் மக்களின் நலன்களுக்காக செயற்படுவதாக இந்த அமைப்புகள் கூறுவதன் மீதும் இருந்த நம்பிக்கையை, இந்த சம்பவம் இழக்கச் செய்துள்ளதாக கரி



ஆனந்தசங்கரி சுட்டிக்காட்டியுள்ளார்.

# உலகத் தமிழர் பேரவையின் இமாலயப் பிரகடன முயற்சி; ஒன்ராரியோ பிரம்டன் மேயர் கடும் கண்டனம்!

டிசம்பர் 29, 2023

உலகத் தமிழ்பேரவையும் கனேடிய தமிழ் காங்கிரசும் தமிழ் மக்களின் அபிலாசைகளை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் இலங்கையின் யுத்த குற்றவாளிகளை காப்பாற்றும் யோசனை யொன்றை சமர்ப்பித்துள்ளதாக கனடாவின் ஒன்ராரியோ பிரம்டன் மேயர் பட்ரிக் பிரவுன் தெரிவித்துள்ளார்

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,



இலங்கையில் இடம்பெறும் இனப்படுகொலையிலிருந்து தமிழர்கள் தப்பியோடிவந்துள்ளனர்.

2009 இல் இனப்படுகொலை உச்சக்கட்டத்தை அடைந்த காலம் முதல் தமிழ் மக்களிற்கு இழைக்கப்பட்ட மிகவும் கொடூரமான குற்றங்களிற்காக நீதியும் பொறுப்புக்கூறலும் அவசியம் என நான் வலியுறுத்தி வந்துள்ளேன்.

இலங்கையில் நீதி பொறுப்புக்கூறல் இன்றிஅமைதி சமாதானம் சாத்தியமில்லை.

ஐக்கியநாடுகள் மனிதஉரிமை பேரவை ஆதாரங்களை சேகரித் துவருவதுடன் இலங்கையின் யுத்த குற்றவாளிகளிற்கு எதிரான விசாரணைகள் உட்பட சாத்தியமான மூலோபாயங்களை முன்வைக்கவுள்ளது.

கனடாவின் ஒன்ராரியோ பிரம்டன் நகரமும் கனடாவின் அனைத்து நிர்வாகங்களும் தமிழர்கள் இனப்படுகொலைக் குள்ளானார்கள் என்பதை ஏற்றுக்கொண்டுள்ளன.

எனினும் உலகதமிழர் பேரவை கனேடிய தமிழ் காங்கிரசின் ஆலோசனை குழவின் உறுப்பினர் ஒருவருடன் இணைந்து தமிழ் மக்களின் அபிலாசைகளை குறைமதிப்பிற்கு உட் படுத்தும் இலங்கையின் யுத்த குற்றவாளிகளை காப்பாற்றும் யோசனையொன்றை சமர்ப்பித்துள்ளனர்.

இது நீதி பொறுப்புக்கூறல் என்ற இலக்கில் ஒரு அடி பின்னோக் கிய நடவடிக்கையாகும்.

தமிழ் மக்களிற்கு எதிரான மிகமோசமான குற்றங்களிற்காக கனடாவில் தடை செய்யப்பட்டுள்ள யுத்த குற்றவாளியும் முன்




னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்சவுடன் கனேடிய தமிழ் காங்கிரஸ் உறுப்பினர் படமெடுத்துக்கொண்டமை அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றது.

உலகதமிழர் பேரவை கனேடிய தமிழ் காங்கிரசின் இந்த நட வடிக்கைகளை நான் கடுமையான கண்டிக்கின்றேன், கனேடிய தமிழ் அமைப்புகளும் கனடா அரசாங்கமும் தமிழ் மக்களின் நீதி பொறுப்புக்கூறலிற்கு தீர்வை காண்பதில் உரிய தார்மீகநிலைப்பாட்டை தெரிவு செய்யவேண்டும் என எதிர்பார்க் கின்றேன்.

# கனடிய இரத்த வங்கியில் குருதி தட்டுப்பாடு!

டிசம்பர் 26, 2023

கனடிய இரத்த வங்கியில் பற்றாக்குறை நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடுறைக் காலத்தில் மேலதிகமாக இரத்தம் தேவைப் படுவதாக இரத்த வங்கி தெரிவித்துள்ளது.

சுமார் 30000 குருதிக் கொடையாளிகளின் இரத்த தானம் செய்ய வேண்டுமென எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளது.

விபத்துக்கள், புற்று நோய் போன்றவற்றினால் பாதிக்கப்பட் டவர்களுக்கு சிகிச்சை வழங்க இவ்வாறு இரத்த தானம் செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

இந்த விடுமுறைக் காலத்தில் மக்கள் இரத்த தானம் செய்யும் நடவடிக்கைகள் குறைவடைந்திருப்பதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.



# ரொரான்ரோ பெரும்பாகத்தில் புத்தாண்டில் பெற்றோலின் விலை உயரும்!

டிசம்பர் 30, 2023

ஒன்ராரியோ ரொரான்ரோவில் புத்தாண்டில் பெற்றோலின் விலை உயரும் என தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறெனினும், இந்த விலை உயர்வு தற்காலிகமானது என துறைசார் பொருளியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அரசாங்கத்தின் கார்பன் வரி அதிகரிப்பிற்கு நிகராக ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 2.5 முதல் 2.6 சதவீதம் வரையில் உயர்வடையும் என தெரிவிக்கப்படுகின்றது.

ரொரான்ரோ மெட்ரோபொலிட்டன் பல்கலைக்கழகத்தின் சர்வதேச கற்கைக்கான பிரதானி மைக்கல் மான்ஜூரிஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த விலை அதிகரிப்பானது உலக சந்தையில் மசகு எண் ணெய் விலை வீழ்ச்சியின் காரணமாக சமனிலை அடையும் என சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், உலகளாவிய ரீதியில் நிலவி வரும் நிச்சயமற்ற தன்மையினால் விலைகளில் மாற்றம் ஏற்படும் சாத்தியங்களை மறுக்க முடியாது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.








தமிழுக்கு அமுதென்று பேர் அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!
தமிழுக்கு நிலவென்று பேர் – இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்...!

– கவிஞர் பாரதிதாசன் –

*உறவுகள் அனைவருக்கும்*
*இனிய புத்தாண்டு, தமிழர் திருநாள் பொங்கல்*
*நல்வாழ்த்துக்கள். – உலகவணிகம்*

# தமிழக செய்திகள்



## தமிழகத்தின் தென் மாவட்டங்கள் கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கால் பாதிப்பு!

டிசம்பர் 18, 2023

அதிகனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தால் திருநெல்வேலி மாநகரம் திங்கள்கிழமை 2-வது நாளாக தத்தளித்தது. குறிப்பாக, தாமிரபரணி கரையோர பகுதி குடியிருப்புகளை வெள்ளம் சூழ்ந்ததால் மக்கள் பரிதவிப்புக்கு ஆளாயினர். மாநகரில் வீடுகள் இடிந்து விழுந்ததில் ஒருவர் உயிரிழந்தார். பாதிக்கப்பட்ட பல பகுதிகளிலும் மீட்புப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.






திருநெல்வேலி மாவட்டத்துக்கு வானிலை ஆய்வு மையம் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில், மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதி, அணைப் பகுதிகளிலும், மாவட்டத்தின் பிற இடங்களிலும் இன்றும் கனமழை நீடித்தது. மாவட்டத்திலுள்ள பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு அணைகள் நிரம்பியிருப்பதை அடுத்து அணைகளுக்கு வரும் தண்ணீர் தாமிரபரணி ஆற்றில் திறந்துவிடப்பட்டுள்ளது. அணைகளில் இருந்து வரும் தண்ணீர் மற்றும் காட்டாற்று வெள்ளமாய் வந்து சேரும் தண்ணீர் என்று தாமிரபரணியில் 1 லட்சம் கனஅடிக்கு மேல் தண்ணீர் பாய்ந்தோடுவதால் ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு தாழ்வான பகுதிகளில் உள்ள குடியிருப்புகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது.

பாளையங்கோட்டையில் சேவியர் காலனி, என்.ஜி.ஓ. காலனி, மனகாவலம்பிள்ளை நகர் பகுதிகள், திருநெல்வேலி சந்திப்பு மீனாட்சிபுரம், கைலாசபுரம், உடையார்பட்டி, வண்ணார்பேட்டை பகுதிகள் வெள்ளத்தில் தத்தளிக்கின்றன. சீவலப்பேரி அருகேயுள்ள குப்பக்குறிச்சி கிராமத்தில் 100-க்கும் மேற்பட்ட குடியிருப்புகளை தாமிரபரணி மற்றும் சிற்றாறு வெள்ளம் சூழ்ந்தது. அங்குள்ளவர்களை மீட்கும் பணியில் மாவட்ட நிர்வாகம் மற்றும் வருவாய்த் துறையினர் மேற்கொண்டனர்.

தீயணைப்பு மற்றும் மீட்பு படையினர், மத்திய, மாநில பேரிடர் மீட்பு படையினர், காவல் துறையினர் மீட்பு பணிகளில் ஈடுபட்டனர். வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் வீடுகளில் தத்தளித்தவர்களை ரப்பர் படகுகள் மூலம் மீட்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. முக்கூடல் அருகே அரியநாயகிபுரம் பகுதியில் வெள்ளத்தில் சிக்கிய 5 பேரை போலீஸார் மீட்டு பாதுகாப்பான இடத்துக்கு அனுப்பி வைத்தனர். வெள்ள பாதுகாப்பு மற்றும் முக்கிய இடங்களில் பாதுகாப்பு பணிகளில் காவல் துறையினர் 24 மணிநேரமும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மீட்பு பணியில் ஈடுபடுத்த ஹெலிகாப்டர் கொண்டுவரப்பட்டு பாளையங்கோட்டை ஆயுதப்படை மைதானத்தில் வெள்ளோட்டம் பார்க்கப்பட்டிருந்தது. வெள்ளக்கோயில் பகுதியில் வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் இருந்து பலர் ஹெலிகாப்டர் மூலம் மீட்கப்பட்டனர். திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு ஏற்கெனவே 5 தேசிய பேரிடர் மீட்பு படையினர் வந்துள்ள நிலையில் இன்று மேலும் 8 குழுக்களை சேர்ந்தவர்கள் வந்து மீட்பு பணிகளில் ஈடுபட்டனர்.

தாமிரபரணி வெள்ளப்பெருக்கால் திருநெல்வேலி சந்திப்பு பகுதி முழுக்க வெள்ளக்காடானது. மீனாட்சிபுரம், கைலாசபுரம் பகுதியிலுள்ள குடியிருப்புகளை மூழ்கடிக்கும் அளவுக்கு வெள்ளம் பாய்ந்தோடியது. இந்த வீடுகளில் தவித்தவர்கள் மீட்கப்பட்டு பாதுகாப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர். தாமிரபரணியில் கரைபுரளும் வெள்ளம் திருநெல்வேலி வண்ணார்பேட்டை வடக்கு புறவழிச்சாலை ஆற்றுப்பாலத்தை மூழ்கடித்தது. இதனால் அவ்வழியாக போக்குவரத்து தடை செய்யப்பட்டிருந்தது. திருநெல்வேலி கொக்கிரகுளத்திலுள்ள ஆற்றுப் பாலத்தை மூழ்கடிக்கும் அளவுக்கு வெள்ளம் கரைபுரண்டது. இந்த வெள்ளம் ஆற்றையொட்டியுள்ள திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தினுள்ளும் புகுந்தது. ஆட்சியர் அலுவலகத்தில் தாழ்வான பகுதியிலுள்ள பாளையங்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் வெள்ளம் புகுந்ததால் அங்குள்ள ஆவணங்கள் சேதமடைந்தன.

திருநெல்வேலி மாவட்டத்தில் பல்வேறு இடங்களும் துண்டிக்கப்பட்டுள்ளதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. மேலப்பாட்டத்தில் கனமழையால் குளம் நிரம்பிய நிலையில் இன்று அதன் கரைகளில் உடைப்பு ஏற்பட்டு வெள்ளம் சுற்றுவட்டார பகுதி குடியிருப்புகளுக்குள் புகுந்தது. திருநெல்வேலி டவுனிலிருந்து குன்னத்தூர் செல்லும் சாலையில் 4 மின்கம்பங்கள் அருகிலுள்ள கால்வாயில் சாய்ந்தன. இதனால் அப்பகுதியில் மின் தடை செய்யப்பட்டு மீட்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. சீதபற்பநல்லூரை அடுத்த காங்கேயன்குளத்தில் 3 வீடுகள் இடிந்து விழுந்தன. பாளையங்கோட்டை குலவணிகர்புரத்தில் வீடு இடிந்து விழுந்து சிவகுமார் (57) என்பவர் உயிரிழந்தார்.

கங்கைகொண்டான்- தாழையூத்து இடையே ரயில் தண்டவாளத்தில் அரிப்பு ஏற்பட்டுள்ளது. தென்மாவட்டங்கள் வெள்ளக்காடாகியதாலும், பல்வேறு இடங்களில் ரயில் தண்டவாளங்களில் அரிப்பு ஏற்பட்டுள்ளதாலும் சென்னை - குருவாயூர் எக்ஸ்பிரஸ் ரயில், திருச்சி - திருவனந்தபுரம் இன்டர் சிட்டி எக்ஸ்பிரஸ், நாகர்கோவில் - கோவை எக்ஸ்பிரஸ், திருநெல்வேலி - ஈரோடு ரயில்கள் நேற்று ரத்து செய்யப்பட்டிருந்தன. இதுபோல் திருநெல்வேலி - தூத்துக்குடி, திருநெல்வேலி - திருச்செந்தூர், திருநெல்வேலி - செங்கோட்டை வழித்தடங்களில் இயக்கப்படும் ரயில்களும் ரத்து செய்யப்பட்டிருந்தன. சென்னையிலிருந்து திருநெல்வேலி வந்த நெல்லை எக்ஸ்பிரஸ் ரயில் கோவில்பட்டியில் நிறுத்தப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டத்தில் அதிகனமழையால் கிராமப்புற சாலைகள் பலவும் துண்டிக்கப்பட்டுள்ளதாலும், பல்வேறு கிராமங்களை வெள்ளம் சூழ்ந்துள்ளதாலும் கிராமப்புறங்களுக்கான பேருந்து சேவை நிறுத்தப்பட்டுள்ளது. அதேநேரத்தில் பிரதான சாலைகளில் பேருந்து போக்குவரத்து அனுமதிக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி வண்ணார்பேட்டை வடக்கு புறவழிச சாலை தாமிரபரணி ஆற்றுப்பாலத்தை தண்ணீர் மூழ்கடித்துள்ளதால் அவ்வழியாக போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளது. திருநெல்வேலி வேய்ந்தான்குளம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து வண்ணார்பேட்டை வழியாக கோவில்பட்டி, மதுரை உள்ளிட்ட வெளிமாவட்டங்களுக்கு செல்லும் பேருந்துகள் கேடிசி நகர் பாலம் வழியாக திருப்பிவிடப்பட்டுள்ளன.

## செர்த்துக்குவிப்பு வழக்கில் அமைச்சர் பொன்முடிக்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை!

டிசம்பர் 21, 2023

சொத்து குவிப்பு வழக்கில் அமைச்சர் பொன்முடிக்கு 3 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து சென்னை உயாநீதிமன்றம் அறிவித்துள்ளது.

கடந்த 2006-ஆம் ஆண்டு முதல் 2011-ஆம் ஆண்டு வரையிலான தி.மு.க ஆட்சிக் காலத்தில் கனிமவளத்துறை அமைச்சராகவும் பதவி வகித்து வந்தார்.

அப்போது வருமானத்துக்கு அதிகமாக ரூ. 1 கோடியே 75 இலட்சம் (இந்திய ரூபா) சொத்துகள் சோத்ததாக ஊழல் தடுப்புப் பிரிவு சார்பில் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இன்னிலையில் இன்று அமைச்சர் பொன்முடி மற்றும் அவரது மனைவிக்கு 3 ஆண்டுகள் சிறைத்தண்டனையும், தலா ரூ. 50 லட்சம் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது



# உச்சநீதிமன்றம் விடுதலை செய்த பிறகும் நால்வர் சிறையில் தொடர்வது மனிதநேயத்திற்கு எதிரானதாகும்!

பழ. நெடுமாறன்

டிசம்பர் 21, 2023

இராசீவ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு 31 ஆண்டுகளுக்குப் பிறகு உச்சநீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்ட முருகன் சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டிருக்கிறார். அவரும், அவரது மனைவியான நளினியும் தங்களது மகள் வாழும் இலண்டனுக்கு அனுப்பி வைக்குமாறு உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர்.

ஆனால், அவர்களை இலண்டன் அனுப்ப முடியாது என இந்திய அரசு உயர்நீதிமன்றத்தில் பிடிவாதமாகத் தெரிவித்துள்ளதை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

ஏற்கெனவே 26பேருக்கும் தூக்குத் தண்டனை கீழ்நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட போது, அதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் முறையீடு செய்தோம். அதில் 19பேரை உச்சநீதிமன்றம் விடுதலை செய்துவிட்டது. விடுதலையானவர்களில் 9பேர் ஈழத் தமிழர்கள். அவர்களுடைய உறவினர்கள் வாழும் வெளிநாடுகளுக்குத் தங்களை அனுப்ப வேண்டும் என அவர்கள் சார்பில் உயர்நீதிமன்றத்தில் முறையீடு செய்யப்பட்டு, அவர்களை அவ்வாறே அனுப்புமாறு உயர்நீதிமன்றம் ஏற்கெனவே தீர்ப்பளித்துள்ளதை நினைவுபடுத்த விரும்புகிறேன். அதைப்போல இப்போது சிறப்பு முகாமில் உள்ள நால்வரையும் விடுதலை செய்து அவர்கள் விரும்பும் நாடுகளுக்கு அனுப்பி வைக்கவேண்டியது இந்திய அரசின் நீங்காத கடமையாகும்.

31 ஆண்டு காலமாக முருகனும் மற்றும் மூவரும் சிறைக் கொடுமைக்கு ஆளாகியிருக்கிறார்கள். ஆனால், உச்சநீதிமன்றம் விடுதலை செய்த பிறகும்கூட, அவர்கள் இன்னமும் சுதந்திரமாக நடமாட முடியாத சூழல் நீடிப்பது மனிதநேயத்திற்கு முற்றிலும் எதிரானதாகும்.

எனவே இந்த பிரச்சனையில் இந்திய அரசை வலியுறுத்தி சிறப்பு முகாமில் உள்ள நால்வரையும் விடுதலை செய்து, அவர்கள்



விரும்பும் நாடுகளுக்கு அனுப்பி வைக்க உதவுமாறு தமிழக முதலமைச்சரை வேண்டிக்கொள்கிறேன். என பழ. நெடுமாறன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

# 19 ஆம் ஆண்டு சுனாமி நினைவேந்தல்; தமிழகம், புதுச்சேரி கடற்கரைகளில் பொதுமக்கள் வணக்கம் செலுத்தினர்!

டிசம்பர் 26, 2023

தமிழகம் மற்றும் புதுச்சேரி கடலோரப் பகுதிகளில் கடந்த 2004-ம் ஆண்டு டிசம்பர் 26-ம் தேதி சுனாமி பேரலை தாக்கியது. இதனால், தமிழகத்தின் சென்னை, செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் உள்ளிட்ட மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி ஆகியவற்றின் கடலோரப் பகுதிகள் கடுமையாக பாதிக்கப்பட்டன. கடல்நீர் தீவிர வேகத்துடன் பல நூறு மீட்டர் தொலைவுக்கு ஊருக்குள் வந்தது. இதில், கடற்கரையோரம் வசித்து வந்த மீனர்கள் உள்ளிட்டோர் கடுமையாக பாதிக்கப்பட்டனர். ஏராளமானோர் உயிரிழந்தனர். மீனவர்களின் படகுகளும், வீடுகளும் கடுமையாக சேதமடைந்தன.

இந்த துயர சம்பவம் நடந்து 19 ஆண்டுகள் ஆகியும் இன்னமும் அது ஆறாத வடுவாகவே உள்ளது. இந்த துயரச் சம்பவத்தை நினைவுகூறும் விதமாக ஆண்டுதோறும் மீனவர்கள் மற்றும் பொதுமக்கள் கடற்கரைக்கு வந்து வணக்கம் செலுத்துவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இந்த ஆண்டும், பல மாவட்டங்





களின் கடற்கரையோர பகுதிகளில் மக்கள் அஞ்சலி செலுத்தினர். கடலூர் மாவட்டத்தில் சுனாமி பாதித்த பகுதிகளைச் சேர்ந்த மக்கள் குழுவாக கடற்கரைக்கு வந்து, உயிரிழந்தவர்களின் நினைவாக அஞ்சலி செலுத்தினர்.

# எண்ணூர் உள்ளிட்ட வடசென்னை பகுதியில் வாயுக்கசிவால் மக்ககள் பாதிப்பு!

பாமக தலைவர் அன்புமணி இராமதாஸ்

டிசம்பர் 27, 2023

எண்ணூர் உள்ளிட்ட வடசென்னை பகுதியில் செயல்பட்டு வரும் அனைத்துத் தொழிற்சாலைகளிலும், குறிப்பாக வேதி ஆலைகளில் தமிழக அரசு மற்றும் மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் சார்பில் பாதுகாப்பு தணிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பாமக தலைவர் அன்புமணி இராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில், “சென்னை எண்ணூரை அடுத்த பெரியக்குப்பம் பகுதியில் செயல்பட்டு வரும் கோரமண்டல் இண்டர்நேஷனல் என்ற உர ஏற்பட்ட அமோனியா வாயுக்கசிவால் அப்பகுதியில் உள்ள சின்ன குப்பம், பெரியகுப்பம், நேதாஜி நகர், பர்மா நகர் ஆகிய கிராமங்களில் கடுமையான நெடி பரவி வருகிறது. அந்த கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கு மயக்கம், மூச்சுத்திணறல் உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. 30-க்கும் மேற்பட்ட மக்கள் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆயிரக்கணக்கான மக்கள் கிராமங்களில் இருந்து வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். தனியார் தொழிற்சாலையின் அலட்சியம் மற்றும் பாதுகாப்புக் குறைபாடுகளால் ஏற்பட்டுள்ள இந்த பாதிப்பு அதிர்ச்சியளிக்கிறது.

எண்ணூர் துறைமுகத்தில் கப்பல்களில் இருந்து ஆலைக்கு அமோனியா வாயு கொண்டு வருவதற்காக குழாய் சேதமடைந்தது தான் வாயுக்கசிவுக்கு காரணம் ஆகும். எண்ணூர் பகுதியில் செயல்பட்டு வரும் பொதுத்துறை நிறுவனத்தில் இருந்து கச்சா எண்ணெய் கசிந்ததால் பொதுமக்களுக்கும், சுற்றுச்சூழலுக்கும் ஏற்பட்ட பாதிப்பு இன்னும் முழுமையாக களையப்படாத நிலையில் அடுத்து வாயுக்கசிவு ஏற்பட்டிருக்கிறது. எண்ணூர் பகுதியில் செயல்பட்டு வரும் தொழிற்சாலைகளில் போதிய அளவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படவில்லை என்பதையே இந்த நிகழ்வு காட்டுகிறது.

கோரமண்டல் இண்டர்நேஷனல் நிறுவனத்திலிருந்து வாயுக்கசிவு ஏற்படுவது இது முதல் முறையல்ல என்றும் கடந்த காலங்களில் இதேபோல் பல முறை வாயுக்கசிவு ஏற்பட்டிருப்பதாகவும் பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இந்தக் குற்றச்சாட்டுகள்



உண்மையானவை என்றால், தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை அங்குள்ள மக்களுக்கும், சுற்றுச்சூழலுக்கு எத்தகைய பாதிப்புகளை ஏற்படுத்தியதோ, அதே பாதிப்பை கோரமண்டல் நிறுவனமும் ஏற்படுத்தியதாகத் தான் கருத வேண்டியிருக்கும். இது குறித்து மாசுக்கட்டுபாட்டு வாரியமும், காவல்துறையும் விசாரணை நடத்தி, குற்றச்சாட்டுகள் உண்மையாக இருக்கும் பட்சத்தில் ஆலையை மூட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எண்ணூர் உள்ளிட்ட வடசென்னை பகுதியில் செயல்பட்டு வரும் அனைத்துத் தொழிற்சாலைகளிலும், குறிப்பாக வேதி ஆலைகளில் தமிழக அரசு மற்றும் மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் சார்பில் பாதுகாப்பு தணிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். அதில் தேர்ச்சி பெறாத ஆலைகளின் செயல்பாடுகளை, அவை உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்யும் வரை நிறுத்தி வைக்க வேண்டும். எண்ணூர் மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளில் அமோனியா வாயுக்கசிவால் ஏற்பட்ட பாதிப்புகளை அரசு உடனடியாக சரி செய்ய வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய இழப்பீடு வழங்கவும் அரசு முன்வர வேண்டும்.

அதுமட்டுமின்றி, எண்ணூர் பகுதியில் செயல்பட்டு வேதி ஆலைகளாலும், பிற காரணங்களாலும் அப்பகுதியில் நிலம், நீர், காற்று ஆகியவை எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய சென்னை ஐ.ஐ.டி பேராசிரியர்களைக் கொண்ட வல்லுநர் குழுவை அமைத்து ஆய்வு செய்ய வேண்டும் அத்தகைய பாதிப்புகளை சரி செய்ய மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து வல்லுநர் குழுவிடமிருந்து 3 மாதங்களில் பரிந்துரை அறிக்கை பெற்று அதை முழுமையாக செயல்படுத்தவும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்” எனக் குறிப்பிட்டுள்ளார்.

# கேப்டன் விஜயகாந்; தமிழ் மீதும் ஈழத்தமிழர்கள் மீதும் பெரும்காதல் கொண்ட புரட்சிக் கலைஞன்!

டிசம்பர் 28, 2023

**"ஈழத்தமிழர்கள் அழும்போது, என்னால் கொண்டாட்டத்தில் இருக்க முடியாது" – விஜயகாந்**

தே.மு.தி.க தலைவரும், நடிகருமான விஜயகாந்துக்கு யாரும் அறியாத எத்தனையோ பக்கங்கள் இருக்கிறது. அதேபோலத் தான் அவரின் தமிழ்மொழி மீதான பற்றும், தமிழ்நாட்டுத் தமிழர்கள் மட்டுமல்லாமல் ஈழத் தமிழர்கள்மீது கொண்ட பாசமும் காதலும் அளப்பரியது.



ஈழத்தமிழர்களுக்காக உண்ணாவிரம் இருந்த விஜயகாந்

விஜயகாந் தனக்கு 13 வயது இருக்கும்போதே மதுரையில் நடைபெற்ற 1965 இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டதாக தகவலும் சொல்லப்படுகிறது. சிறுவயதிலேயே தமிழ்மீது கொண்ட அந்தப் பற்றுதான் திரைக்கலைஞனான பின்னும் வளர்ந்து, தமிழர்களுக்காகப் போராடவும் தூண்டியது. குறிப்பாக, 1980-களின் பிற்பகுதியில் இலங்கையில் ஈழத் தமிழர்கள்மீது சிங்களவர்கள் புரிந்த கொடூரமானத் தாக்குதலில் ஏராளமான அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். அதைக் கண்டு கொதித்தெழுந்த விஜயகாந், ஈழத்தமிழர்கள் மீதானப் படுகொலையைக் கண்டித்து சக நடிகர், நடிகைகளுடன் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் நடத்தினார். அதுமட்டுமல்லாமல் இந்தப் படுகொலையை நிறுத்தவேண்டும், ஈழத்தமிழர்களுக்கு நீதி வேண்டும் எனக்கோரி அப்போதைய தமிழ்நாடு ஆளுநரிடம் மனுவும் அளித்தார்.

பின்னர், 1986-ம் ஆண்டு இலங்கையில் ஈழத் தமிழர்கள் மீதான தாக்குதல் தொடர்ந்து அதிகரித்து வந்ததால், அதை தடுக்கவேண்டும் எனக்கோரி சென்னை வட்டாட்சியர் அலுவலகத்தில் உண்ணாவிரதம் இருந்தார் விஜயகாந். அவரின் இரசிகர் மன்றத்தின் சார்பாக தமிழ்நாடு முழுவதுமுள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகத்தின் முன்பும் ஈழத்தமிழர்களுக்காக உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து ஈழத் தமிழர்களுக்காகக் குரல்கொடுத்தது மட்டுமல்லாமல் தமிழ்நாடு முகாம்களில் அகதிகளாக தஞ்சம் புகுந்த ஈழத்தமிழர்களுக்கு தன்னால் முடிந்த உதவிகளைச் செய்தார். குறிப்பாக, 1989-களில் மண்டபம் முகாம்களில் அகதிகளாக வசிப்பவர்களுக்கு நேரில்சென்று உதவிபுரிந்தார்.

எல்லாவற்றுக்கும் ஒருபடி மேலே சென்று, ஈழத்தமிழர்கள் படும் இன்னல்களுக்காக தனது பிறந்தநாள் கொண்டாடுவதையே தவிர்த்தார். "ஈழத்தமிழர்கள் அழும்போது, என்னால் கொண்டாட்டத்தில் இருக்க முடியாது" என்று ஈழத்தமிழர்களின் வலியை உணர்ந்தவராக உணர்ச்சிப்பூர்வமாகப் பதிலளித்தார். (பின்னாள்களில் அவரின் பிறந்தநாள் வறுமை ஒழிப்பு தினமாக அறிவிக்கப்பட்டு, ஏழைகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப் பட்டு வருகின்றன).

ஈழத்தமிழர்கள்மீதான பற்றைப் போலவே, தனித் தமிழீழப் போராட் டத்தை முன்னின்று நடத்திய விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் மீதும் அளவு கடந்த அன்பையும் மரியாதையை யும் கொண்டிருந்தார். அதன் சாட்சியாக தனது மூத்த மகனுக்கு 'விஜய பிரபாகரன்' என பெயர்வைத்து விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் மீதும், ஈழத்தின் மீதும் தனக்கிருந்த பற்றைப் பறைசாற் றினார். மேலும், தனது 100-வது படத்துக்கு வைத்த 'கேப்டன் பிரபாகரன்' என்ற பெயர்தான், அவரின் அடைமொழியாக நின்று இன்றுவரை அனைவராலும் அன்போடு "கேப்டன்" என அழைக் கப்படுகிறார்.

2009-ம் ஆண்டில் ஈழ இனப்படு கொலை நிறுத்தவேண்டும் எனக் கோரி அவர் நடத்தியப் போராட்டங்கள் ஏராளம். கடல் கடந்த ஈழத் தமிழர்கள் மீதே அத் தனை பரிவு என்றால் கண்களோடு நிற்கும் தமிழ் நாட்டுத் தமிழர்கள்மீதான அவரின் காதலை சொல்லிமாளாது. 2002-ம் ஆண்டு காவிரி நதிநீர் பிரச்னை உச்சத்தில் இருந்தபோது, அனைத்து நடிகர்களையும் ஒன்றிணைத்து 'நீர் தராத கர்நாடாகாவுக்கு மின்சாரம் இல்லை!' என்கிற முழக்கத்துடன் மாபெரும் போராட்டத்தை நெய்வேலிக்கே சென்று நடத்திக் காட்டினார்.

எல்லோரும் மாநிலம், மொழிகடந்து தனது திரைப்படத்தைப் பார்க்க வேண்டும், இரசிகர் களை அள்ளிக்குவிக்க வேண்டும் பான் இந்தியா ஸ்டாராக வேண்டும் என எண்ணி தனது இரசிகர் மன்றப் பெயருக்கு முன்னால் "அகில இந்திய" என்ற முன்னொட்டை வலிந்து சேர்த்துக்கொள் வார்கள். ஆனால் விஜயகாந்தோ, "தென்னிந்திய, அகில இந்திய" என்றிருந்த தனது இரசிகர் மன்றத்தின் பெயரை 1982-லேயே 'தமிழ்நாடு விஜயகாந் தலைமை இரசிகர் மன்றம்' எனப் பெயர் மாற்றம் செய்தவர்.

விஜயகாந் தமிழர்கள் மீதும் தமிழர்கள்மீதும் கொண்ட பாசமும் பற்றையும் நினைவு கூர்ந்து, ஒட்டுமொத்த உலகத் தமிழர்களும் அவரின் இறுதி பயணத்தை கண்ணீர்ததும்ப உணர்ச்சியுடன் வழியனுப்பி வைக்கிறார்கள்!

நன்றி: விகடன்

# தே.மு.தி.க தலைவரும், நடிகர் விஜயகாந் மறைவு! உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் இரங்கால்!

டிசம்பர் 29, 2023

தே.மு.தி.க. தலைவரும், சிறந்த நடிகருமான விஜயகாந் அவர்கள் காலமான செய்தியை அறிந்து மிக வருந்துகிறேன். மதுரை மாநகராட்சி உறுப்பினராக இருந்த அவருடைய தந்தையுடன் நெருங்கிப் பழகியிருக்கிறேன். சிறுவயது முதலே திரைப்பட நடிகராகவேண்டும் என்பதைத் தனது குறிக்கோளாகக் கொண்டிருந்த விஜயகாந் அவர்கள், தன்னுடைய திறமையினாலும், அயராத உழைப்பினாலும் அதில் வெற்றி பெற்று, நடிகர் சங்கத் தலைவராகவும் உயர்ந்தார்.

திரையுலகில் அவர் திரட்டிய செல்வத்தை மக்களுக்கு உதவும் அறத் தொண்டுகளில் செலவிட்டார். திரையுலகிலும், தமிழக மக்களிடமும் செல்வாக்குப் பெற்றவராகத் திகழ்ந்தார். தே.மு.தி.க.வைத் தொடங்கி எதிர்க்கட்சித் தலைவராகச் சட்ட மன்றத்தில் பணியாற்றினார். அவருடைய மறைவு திரையுலகிற்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டிற்கே பேரிழப்பாகும். அவரது பிரிவினால் வருந்தும் அவரது குடும்பத்தினருக்கும், அவருடைய கட்சித் தோழர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். என உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

# பல்லாயிரக்கணக்கான மக்கள் வழிநெடுக கண்ணீர் வணக்கம்; புரட்சிக் கலைஞர் விஜயகாந்தின் அறுதி ஊர்வலம்!

டிசம்பர் 29, 2023

புரட்சிக் கலைஞர் விஜயகாந் இறுதி ஊர்வலம் செல்லும் பாதை நெடுகிலும், ஏராளமான மக்கள் கூடி நின்று கண்ணீர் வணக்கம் செலுத்தி னர்.



நடிகரும், தேமுதிக தலைவருமான விஜயகாந் நேற்று காலை உயிரிழந்ததாக மருத்துவமனை அதிகாரப்பூர்வமாக அறிவித்தது. இதனைத் தொடர்ந்து சாலி கிராமத்தில் உள்ள அவரது வீட்டில் வணக்கத்திற்காக அவரது உடல் வைக்கப்பட்டது. இதன் பின் கோயம்பேட்டில் உள்ள தேமுதிக தலைமை அலுவலகத் திற்கு விஜயகாந்தின் உடல் கொண்டு செல்லப்பட்டு அங்கு பொது மக்கள் வணக்கத்திற்காக வைக்கப்பட்டது. அங்கு விஜயகாந் உடலுக்கு பொதுமக்கள், அரசியல் கட்சி தலைவர்கள் மற்றும் திரைப் பிரபலங்கள் நேரில் சென்று அஞ்சலி செலுத் தினர்.




இதனைத் தொடர்ந்து, பொதுமக்களின் கூட்டம் அலை மோதிய தால் விஜயகாந் உடல் இன்று பொதுமக்களின் பார்வைக்காக சென்னை தீவுத் திடலில் வைக்கப்பட்டுவதாக தேமுதிக சார்பில் அறிவிக்கப்பட்டது. இதன்படி, இன்று தேமுதிக அலுவலகத்தி லிருந்து தீவுத் திடலுக்கு சாலை மார்க்கமாக காலை 6 மணியள வில் விஜயகாந் உடல் கொண்டு வரப்பட்டது. பின்னர் பிற்பகல் 2.30 மணி வரை பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப் பட்டது.

இதனை அடுத்து சரியாக 2.45 மணி அளவில் தீவுத்திடலில் விஜயகாந்தின் இறுதி ஊர்வலம் தொடங்கியது. தேமுதிக அலுவலகம் விஜயகாந்தின் உடல் வந்தடைந்த பின் இன்று மாலை 4:45 மணிக்கு அரசு மரியாதையுடன் தேமுதிக அலுவலகத்தில் அவரது நல்லடக்கம் செய்யப்பட்டது.







# உலக செய்திகள்

## ஐஸ்லாந்தில் எரிமலை வெடிப்பு; மக்கள் வெளியேற்றம்!

டிசம்பர் 19, 2023

ஐஸ்லாந்தின் தென்மேற்கே அமைந்துள்ள ரெய்க்ஜேன்ஸ் தீபகற்பத்தில் பல வாரங்களாக கொதித்துக்கொண்டிருந்து எரிமலை வெடித்தது.

உள்ளூர் நேரப்படி 22:17 மணியளவில் எரிமலை வெடிப்பு ஏற்படத்தொடங்கியது என ஐஸ்லாந்திய வானிலை அலுவலகம் தெரிவித்துள்ளது.

க்ரிண்டாவிக் நகருக்கு வடகிழக்கே சுமார் 4 கிமீ (2.5 மைல்) தொலைவில் எரிமலை வெடிப்பு ஏற்பட்டுள்ள தாகவும், நில அதிர்வு நடவடிக்கைகள் நகரத்தை நோக்கி நகர்ந்து வருவதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

எரிமலையில் ஏற்பட்ட விரிசல் சுமார் 3.5 கிமீ நீளம் கொண்டது, எரிமலைக்குழம்பு வினாடிக்கு சுமார் 100 முதல் 200 கன மீட்டர்கள் வரை பாய்கிறது என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனால் அப்பகுதியை விட்டு மக்கள் விலகி இருக்குமாறு காவல்துறையினர் எச்சரித்துள்ளனர்.

இந்த மாத தொடக்கத்தில் மீன்பிடி நகரமான கிரின்டாவிக் நகரிலிருந்து சுமார் 4,000 பேர் வெளியேற்றப்பட்டனர்.



2010 இல் ஐரோப்பிய விமானப் பயணத்தை நிறுத்திய அதே அளவிலான இடையூறுகளை இது கொண்டுவரும் என்று எதிர்பார்க்கப்படவில்லை.

ஐஸ்லாந்துக்கு வரும் விமானங்களுக்கு எந்த இடையூறும் இல்லை. மேலும் சர்வதேச விமான தாழ்வாரங்கள் திறந்தே இருக்கும் என ஐஸ்லாந்து வெளியுறவு அமைச்சர் எக்ஸ் தளத்தில் கூறியுள்ளார்.

## ருவாண்டா இனப்படுகொலையில் ஈடுபட்ட முன்னாள் மருத்துவருக்கு 24 ஆண்டுகள் சிறை!

டிசம்பர் 20, 2023

ருவாண்டா இனப்படுகொலையில் ஈடுபட்ட முன்னாள் மருத்துவருக்கு பிரான்ஸ் நீதிமன்றம் 24 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்தது.

1994 ஆம் ஆண்டு டுட்ஸி இனப்படுகொலையில் ஈடுபட்டதற்காக ருவாண்டாவின் முன்னாள் மகப்பேறு மருத்துவர் சோஸ்தென் முனியேமனா (Sosthene Munyemana) 24 ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டார். இனப்படுகொலை நடந்து சுமார் மூன்று தசாப்தங்களுக்குப் பிறகு இந்த தீர்ப்பு வந்துள்ளது.

68 வயதான சோஸ்தென் முனியேமனா இனப்படுகொலை, மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் ஒரு இனப்படுகொலைக்கு உதவியது ஆகிய குற்றச்சாட்டுகளில் குற்றவாளியாகக் காணப்பட்டார். இவர் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்வார்.

தீர்ப்பு வரும் வரையில் முனியேமனா சிறையில் தடுத்து வைக்கப்படவில்லை. நடந்து முடிந்து விசாரணை வரைக்கும் அவர் கைது செய்யப்படாமல் சுதந்திரமாக இருந்தார்.

இனப்படுகொலை நடந்த சில மாதங்களுக்குப் பிறகு அவர் பிரான்ஸ் சென்று வசித்து வந்தார். இது மக்களிடையே பலத்த சந்தேகத்தை எழுப்பியது.

விசாரணைகளின் போது மருத்துவர் முனியேமனா நான் எந்த தவறும் செய்வில்லை என்று குற்றத்தை மறுத்துள்ளார்.

இனப்படுகொலை நடத்திய ருவாண்டாவின் இடைகால அரசாங்கத்தின் தலைவராக இருந்த ஜீன் கம்பண்டாவின் (ean Kambanda) நெருங்கிய நண்பராகவும் இருந்தார்.

இந்த இனப்படுகொலை குற்றத்தை ஒப்புக்கொண்ட ஒரே ஒரு தலைவர் கம்பண்டா மட்டுமே.



100 நாட்களுக்குள் 8 இலட்சம் சிறுபாண்மை டுட்ஸிகளையும் பிற இனக்குழுகளையும் ஆயுதம் ஏந்திய போராளிகள் படுகொலை செய்யப்பட்னர்.

## இசுரவேலின் தாக்குதலில் இதுவரை 22 ஆயிரம் பாலஸ்தீனியர்கள் பலி!

டிசம்பர் 21, 2023

இசுரவேல் இராணுவம் நடத்தி வரும் உக்கிரமான தாக்குதல்களால் காசாவில் உயிரிழப்பு நிமிடத்துக்கு நிமிடம் அதிகரித்து வருவதாகவும், மொத்த பலி எண்ணிக்கை 22 ஆயிரத்தை எட்டியுள்ளதாகவும், அதில் 8,000 குழந்தைகள் மற்றும் 6,200 பெண்கள் அடங்குவர் என்றும் காசா சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பாலஸ்தீனத்தின் காசா பகுதியை சேர்ந்த ஹமாஸ் அமைப்பினர் கடந்த அக்டோபர் மாதம் 7ஆம் திகதி இசுரவேல் மீது நடத்திய தாக்குதலில் 1,200 பேர் கொன்று குவிக்கப்பட்டதுடன், சுமார் 250 பேர் பணய கைதிகளாக பிடிக்கப்பட்டு காசாவுக்கு கொண்டு செல்லப்பட்டனர். இதை தொடர்ந்து, ஹமாசை அடியோடு ஒழிப்போம் என சூளுரைத்து காசா மீது இசுரவேல் போரை தொடங்கியது. இந்த போர் 2 மாதங்களை கடந்து நீண்டு வருகிறது.



சர்வதேச நாடுகளின் முயற்சியால் காசாவில் 7 நாட்களுக்கு போர் நிறுத்தப்பட்ட நிலையில், அதன் பின்னர் காசா மீதான போரை இசுரவேல் மீண்டும் தொடங்கியது. தப்போது முதல் தெற்கு காசாவை குறிவைத்து இசுரவேல் ராணுவம் மிகவும் ஆக்ரோஷமான தாக்குதல்களை நடத்தி வருகிறது. அங்கு



இசுரவேல் போர் விமானங்கள் இரவு, பகல் பாராமல் குண்டு மழை பொழிந்து வருகின்றன.

# அமெரிக்காவில் 48 வருட சிறைவாசத்தின் பின் நிரபராதி என்று விடுதலை!

டிசம்பர் 21, 2023

அமெரிக்காவில் 48 வருட சிறைவாசத்தின் பின் நபர் ஒருவர் நிரபராதி விடுவிக்கப்பட்ட சம்பவம் பரபரப்பி ஏற்படுத்தியுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,



அமெரிக்காவின் தென்மத்திய மாநிலம் ஒக்லஹாமா (Oklahama). 1975 காலகட்டத்தில் இம்மாநில தலைநகரமான ஒக்லஹாமா சிட்டியின் புறநகர் பகுதியில் உள்ள ஒரு மதுக் கடையில் நடந்த கொள்ளை முயற்சியில் கேரலின் சூ ராஜர்ஸ் (Carolyn Sue Rogers) என்பவர் கொலை செய்யப்பட்டர்.

இந்த வழக்கில் க்ளின் சிம்மன்ஸ் (Glynn Simmons) எனும் இளைஞர் மற்றும் டான் ராபர்ட்ஸ் என்பவர்கள் கைது செய்யப் பட்டனர்.

சிம்மன்ஸ், குற்றம் நடந்ததாக கூறப்பட்ட காலகட்டத்தில், தான் லூசியானா (Louisiana) மாநிலத்தில் இருந்ததாகவும், இந்த கொலைக்கும் தனக்கும் சம்பந்தம் இல்லையென்றும் கூறி வந்தார்.

எனினும் அவருக்கும், அவருடன் கைது செய்யப்பட்ட டான் ராபர்ட்ஸிற்கும், மரண தண்டனை வழங்கியதை அடுத்து, சில ஆண்டுகளில் மரண தண்டனை சிறை தண்டனையாக மாற் றப்பட்டது.

அப்போது சிம்மன்ஸிற்கு வயது 22. இந்நிலையில், கடந்த ஜூலையில் இவ்வழக்கு மறுவிசாரணைக்கு வந்தது. தற்போது இந்த வழக்கில் ஒக்லஹாமா மாவட்ட நீதிமன்றம், சிம்மன்ஸ் குற்றமற்றவர் என கூறி தண்டனையை ரத்து செய்ததை தொடர்ந்து சிம்மன்ஸ் விடுதலை செய்யப்பட்டார்.

அமெரிக்க நீதிமன்ற வரலாற்றிலேயே "குற்றச்செயலிலிருந்து விடுபட்டவர்களின் தேசிய பட்டியலில்" (National Registry of Exonerations) மிக நீண்டகாலம் சிறைவாசம் அனுபவித்தவ ராகிறார் க்ளின் சிம்மன்ஸ்.

இதனையடுத்து கடந்த 2008ல் ஒரே ஒரு முறை பரோலில் வெளியே வந்தார் சிம்மன்ஸ். அதேவேளை ஒக்லஹாமா மாநில குற்றவியல் சட்டத்தின்படி தவறாக குற்றம் சாட்டப்பட்டு சிறை தண்டனை பெற்றவர்கள் சுமார் ரூ.1 கோடியே 75 லட்சம்



(கூ1,75,000) வரை இழப்பீட்டு தொகை பெற முடியும்.

தற்போது கல்லீரல் புற்று நோய்க்காக சிகிச்சை பெற்று வரும் சிம்மன்ஸ் குற்றமே செய்யாமல் 48 வருட கால சிறை தண் டனை அனுபவித்ததை குறித்து தெரிவிக்கையில்,,

"பொறுமைக்கும் மன உறுதிக்கும் இது ஒரு பாடம். நடக்காது என யார் கூறினாலும் நம்பாதீர்கள் ஏனென்றால் நடக்க வேண் டியது நடக்கும்" என தெரிவித்தார். இநிலையில் சிம்மன்ஸ் விடுதலை குறித்து கருத்து தெரிவிக்கும் சமூக வலைதளங் களில் பயனர்கள், "48 வருட சிறைவாசத்தில் அவர் இழந்த வருடங்களை யார் தருவார்கள்?" என விமர்சித்து வரு கின்றனர்.

# செக் குடியரசின் தலைநகரில் அமைந்துள்ள பல்கலைக்கழகத்தில் துப்பாக்கிச் சூடு; 14 பேர் பலி, 24 பேர் காயம்!

டிசம்பர் 22, 2023

ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான செக் குடியரசின் தலைநகர் ப்ராக்கில் அமைந்துள்ள சார்லஸ் பல்கலைக்கழகத்தில் நடத்தப் பட்ட துப்பாக்கிச் சூட்டில் 14 பேர் கொல்லப்பட்டதுடன் மேலும் 24 பேர் காயமடைந்தனர். துப்பாக்கி தாரி 24 வயதுடைய டேவிட் கோசாக் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.



செக் நாட்டின் தலைநகரின் மையப்பகுதியில் உள்ள சார்லஸ் பல்கலைக்கழகத்தின் கலைப் பீடத்தில் கல்வி 24 வயது இளைஞனே துப்பாக்கிச் சூடு நடத்தினார். அவர் இன்று வெள் ளிக்கிழமை குற்றவாளி தன்னைத்தானே சுட்டுக் கொன்று விட்டு தற்கொலை செய்துகொண்டதாகக் காவல்துறை கூறியது. நேற்று பிற்பகல் 15 மணியளவில் நடைபெற்ற தாக்குதல் தொடர பில் செக் காவல்துறையினர் இன்று வெள்ளிக்கிழமை சில தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் மூன்று வெளிநாட்டவர்கள் என்றும் இதில் நெதர்லாந்தைச் சேர்ந்த ஒருவர் மற்றும் மத்திய கிழக் கைச் சேர்ந்த இருவர் என காவல்துறையினர் தொவித்தனர். துப்பாக்கிச் சூடு நடந்த இடத்திற்கு எவரும் செல்லமுடியாத வகை யில் மூடப்பட்டுள்ளது. தாக்குதல் தொடர்பான விசாரணையை காவல்துறையினர் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

இது ஒரு சர்வதேச பயங்கரவாத செயலுடன் தொடர்பு அற்றது என்றும் இத்தாக்குதல் குறித்த இளைஞனின் தனிப்பட்ட தாக் குதல் என்று உள்துறை அமைச்சு கூறியுள்ளது. உயிரிழந்தவர்



களுக்கு நினைவேந்தல் நடத்தப்பட்டது வெள்ளிக்கிழமை காலை பல்கலைக்கழக தலைமையகத்தில் மக்கள் மெழுகு வர்த்தி ஏற்றி, பாதிக்கப்பட்டவர்களுக்காக அஞ்சலி செலுத்தப் பட்டது.

# சதுரங்கச் சாம்பியன்ஷிப் போட்டியில் ஈழத் தமிழ் சிறுமி சாதனை!

டிசம்பர் 23, 2023

ஐரோப்பிய பிளிட்ஸ் சதுரங்கச் சாம்பியன்ஷிப் போட்டியில் லண்டனைச் சேர்ந்த 8 வயதான ஈழத் தமிழ் சிறுமி போதனா - சிவானந்தன் Bodhana Sivanandan சிறந்த பெண் வீராங்கனையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.




லண்டனில் உள்ள ஹாரோவைச் சேர்ந்த போதனா - சிவா னந்தன் என்ற சிறுமி இறுதிச் சுற்றில் இரண்டு முறை ரோமானிய சாம்பியனான 54 வயதான கிராண்ட்மாஸ்டர்



விளாடிஸ்லாவ் நெவெட்னிச்சியுடன் டிரா செய்தார்.




சர்வதேச மாஸ்டர் மற்றும் பிரித்தானிய மகளிர் பயிற்சியாளர் லோரின் டி'கோஸ்டாவை வென்றுள்ளார்.

ஒரு போட்டி விளையாட்டில் கிராண்ட்மாஸ்டருக்கு எதிராக தோல்வியைத் தவிர்க்கும் இளைய வீராங்கனை என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

எட்டு வயது சிறுமி "வியக்கத்தக்க முடிவை" அடைந்ததாக ஐரோப்பிய சதுரங்க ஒன்றியம் தெரிவித்துள்ளது.

உலக சாதனைப் புத்தகத்தில் இச் சிறுமியின் பெயரை பதிவு செய்து சாதனைச் சிறுமியாக பலரது பாராட்டுக்களையும் பெற் றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ‘என்ன நேர்ந்தது என்று தேடிய ஆணைக்குழுக்கள்’ யார் அதனை செய்தது? எனக் கண்டறியவில்லை!

## யஸ்மின் சூக்கா

டிசம்பர் 26, 2023

இலங்கையில் கடந்தகாலங்களில் நியமிக்கப்பட்ட அனைத்து ஜனாதிபதி ஆணைக்குழுக்களும் ‘என்ன நேர்ந்தது’ என்பதைக் கண்டறிவதற்காக உருவாக்கப்பட்டனவே தவிர, அவை ‘யார் அதனைச் செய்தது?’ என்பதைக் கண்டறிவதை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை என சுட்டிக்காட்டியிருக்கும் சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டம், எனவே தற்போதைய உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவும் அதனை ஒத்த நடவடிக்கையா எனக் கேள்வி எழுப்பியிருக்கின்றது.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கு அரசாங்கம் முன்னெடுத்துவரும் முயற்சிகள் பாதிக்கப்பட்டோர் உள்ளடங்கலாகப் பல்வேறு தரப்பினரதும் விமர்சனங்களுக்கு உள்ளாகியிருக்கும் நிலையில், இதுகுறித்து யஸ்மின் சூக்கா தலைமையிலான சர்வதேச உண்மைக்கும், நீதிக்குமான செயற்திட்டம் மேலும் கூறியிருப்பதாவது:

இலங்கையில் ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி) அட்டூழியங்கள் இடம்பெற்ற 1989 ஜுலைமாத காலப்பகுதியில் கம்பஹா மாவட்டத்துக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்ட சார்ஜன்ட் ரத்நாயக்க இன்னமும் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படவில்லை. ஏனெனில் இலங்கையில் நியமிக்கப்பட்ட அனைத்து ஜனாதிபதி ஆணைக்குழுக்களும் என்ன நேர்ந்தது என்பதைக் கண்டறிவதற்காக உருவாக்கப்பட்டனவே தவிர, யார் அதனைச் செய்தது என்று கண்டறிவதை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில் தற்போது உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் ஊடாக கடந்தகால வரலாறு மீளத்திரும்புகின்றதா?

மனித உரிமைகள் செயற்பாட்டாளரான எம்.சி.எம்.இக்பால் போன்றவர்களின் பங்கேற்புடன் முன்னர் இயங்கிய பல்வேறு ஆணைக்குழுக்கள் மிகக்கடினமாக உழைத்த போதிலும், அப்போதைய காலப்பகுதியில் சாதாரண வன்முறைகளாக விபரிக்கப்பட்டவை அனைத்தும் மிகுந்த அதிர்ச்சியளிப்பவையாகவே காணப்பட்டன.

எது எவ்வாறெனினும் வலிந்து காணாமலாக்கப்படல்களுடன் தொடர்புடைய கடத்தல்காரர்களை அடையாளங்காணமுடியும். ஆனால் 1989 ஒக்டோபர் மாதத்திலிருந்து அதுபற்றி எவரேனும் விசாரணைகளை மேற்கொண்டனரா? குறிப்பாக 1989 இல் காணாமல்போன நபரொருவர் பற்றிய தகவல்களில், அவர் தமது காவலின்கீழ் இருந்ததாக இராணுவத்தினர் (தலத்துஓயா இராணுவ முகாம்) கூறுகின்றனர். அவ்வாறெனில், அந்நபரை எவ்வித சாட்சியங்களுமின்றி காணாமலாக்கியது யார்? அக்காலப்பகுதியில் தலத்துஓயா இராணுவ முகாமின் பொறுப்பதிகாரியாக செயற்பட்டவர் யார்? அதனைக் கண்டறிவது அத்தனை கடினமானதல்ல.

அதேபோன்று பிறிதொரு காணாமலாக்கப்படல் சம்பவம் தொடர்பில் வழங்கப்பட்டுள்ள முறைப்பாட்டில், 1990 ஆம் ஆண்டு பேரதனையில் சிறீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் ஒருவரைக் கைதுசெய்த (பின்னர் காணவில்லை) இராணுவத்துக்குச் சொந்தமான வாகனத்தில் பதிவிலக்கம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதுகுறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆனால் 2009 மேமாதம் 18 ஆம் திகதி தம்மிடம் சரணடைந்து காணாமல்போன நூற்றுக்கணக்கான தமிழர்களை பேரூந்து பதிவிலக்கமின்றி (அவர்களை அழைத்துச் சென்ற) கண்டறியமுடியாது என இராணுவம் கூறியது.




அதுமாத்திரமன்றி 1989 ஆம் ஆண்டு இராணுவத்தைச்சேர்ந்த சீருடையணியாத சுமார் 30 - 40 பேரால் அழைத்துச்செல்லப்பட்ட தனது 20 வயது மகன் காணாமல்போனமை குறித்து முறைப்பாடளிப்பதற்கு கலகெதர பொலிஸார் அனுமதியளிக்கவில்லை என தாயொருவர் தெரிவித்துள்ளனர் என சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டம் சுட்டிக்காட்டியுள்ளது.

# இனப்படுகொலை செய்கிறது இசுரவேல்; சர்வதேச நீதிமன்றத்தில் தென்னாப்பிரிக்கா வழக்கு!

டிசம்பர் 30, 2023

இசுரவேல் இனப்படுகொலை குற்றத்தைச் செய்துவருவதாக சர்வதேச நீதிமன்றத்தில் தென்னாப்பிரிக்கா வழக்கு தொடர்ந்துள்ளது. இசுரவேல் காஸ்வில் பாலஸ்தீன மக்களை இனப்படுகொலை செய்துவருவதாக குறற்ம் சாட்டப்பட்டுள்ளது.




இசுரவேல் - ஹமாஸுக்கு இடையே நடைபெற்றுவரும் இந்தப் போரின் நோக்கம் காஸாவிலுள்ள பாலஸ்தீன மக்களை அழிப்பதுதான் எனத் தென்னாப்பிரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

காஸாவில் இசுரவேல் பல போர் குற்றங்களை நிகழ்த்துவதாக பல்வேறு தரப்புகள் குற்றம் சாட்டிவந்த நிலையில், இந்த வழக்கை தென்னாப்பிரிக்கா தொடர்ந்துள்ளது. பொதுமக்களைப் பாதுகாக்குமாறு அமெரிக்கா உள்பட பல நாடுகள் வலியுறுத்திவந்த நிலையில், காஸாவில் இதுவரை 21,500க்கும் மேற்பட்ட மக்களை கொன்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

இசுரவேலின் வான் மற்றும் தரைவழித் தாக்குதல்களில் அப்பாவி பாலஸ்தீனர்கள் மட்டுமல்லாமல், ஹமாஸ் அமைப்பால் பிடித்துவைக்கப்பட்டுள்ள பிணைக்கைதிகளும் கொல்லப்பட்டு வருகின்றனர்.

சொந்த நாட்டு மக்களை தவறுதலாகக் கொன்றபோதும் போரை



நிறுத்தாமல் தொடர்ந்து இசுரவேல் தாக்குதல்களை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

# இந்தோனேசியாவில் அடுத்தடுத்து சக்திவாய்ந்த நிலநடுக்கங்கள்!

டிசம்பர் 31, 2023

இந்தோனேசியாவில் அடுத்தடுத்து ஏற்பட்ட நிலநடுக்கங்களால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

நிலநடுக்கங்களால் சுனாமி எச்சரிக்கை விடப்படாவிடினும் அதிர்வுகள் ஏற்படக்கூடும் என இந்தோனேசியாவின் வானிலை தட்பவெப்ப நிலை மற்றும் புவி இயற்பியல் நிறுவனம் எச்சரித்துள்ளது. அடுத்தடுத்து ஏற்பட்ட நிலநடுக்கங்கள் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

இந்தோனேசியாவின் மேற்கு பகுதியில் உள்ள ஆச்சே மாகாணத்தில் நேற்று (30) காலை சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்நிலையில், வடக்குப் பகுதியில் உள்ள பப்புவா மாகாணத்தின் தலைநகரான ஜெயபுராவில் உள்ள அபேபுராவிற்கு வடகிழக்கே 162 கிலோமீட்டர் தொலைவில் இன்று (31) அதிகாலை மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

குறித்த நிலநடுக்கம்  ரிக்டர் அளவில் 6.5-ஆக பதிவானதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சுனாமி எச்சரிக்கை விடப்படாவிடினும் அதிர்வுகள் ஏற்படக்கூடும் என இந்தோனேசியாவின் வானிலை, தட்பவெப்ப நிலை மற்றும் புவி இயற்பியல் நிறுவனம் எச்சரித்துள்ளது.

இலங்கையை அண்மித்த இந்தியப் பெருங்கடலில் பாரிய நிலநடுக்கம் நேற்று (30) காலை 10.49 மணி அளவில் ஏற்பட்டது. குறித்த நிலநடுக்கம் 6.6 ரிச்டர் அளவில் பதிவாகியிருந்தது.



இதனால் நாட்டைச் சூழவுள்ள கரையோர பகுதிகளில் வசிக்கும் மக்களை எச்சரிக்கையுடன் இருக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களத்தின் தேசிய சுனாமி முன்னெச்சரிக்கை மையத்தினால் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# MORTGAGE

- ⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- ⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- ⇒ Private Mortgage (No Income Verification)
- ⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- ⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- ⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- ⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC

www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

**Cell : 416-624-4843**

எமது முகவரி

305 Milner Ave, Unit 301
Toronto ON M1B 3v4
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4




RE/MAX HALLMARK FIRST GROUP REALTY

1154 Kingston Rd
Pickering, ON
L1V 1B4 CA

சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர் பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# “வீரசுதந்திரம் வேண்டுவோருக்கு உறுதிதான் வலுமிக்க ஆயுதம்”

## –தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –



எமது போராட்டம் எத்தனையோ சவால்களுக்கு ஈடுகொடுத்து தனது விடுதலைப்பயணத்தில் வெற்றிநடைபோட முடிந்தது என்றால், அதற்கான அடிப்படைக் காரணம் எமது இலட்சிய உறுதிதான் என்பதை நான் திட்டவட்டமாகக் கூறுவேன். நீண்ட வரலாற்று அனுபவத்தில் நான் கண்ட உண்மை இது.

ஒரு விடுதலைப் போராட்டம் பல சூறாவளிகளைச் சந்திக்கிறது. பல நெருக்கடிகளை எதிர் கொள்கிறது.

கொந்தளிப்பான பல சூழ் நிலைகளுக்கு முகம் கொடுக்கிறது. விடுதலைப் போராட்டம் என்பது இரத்தம் சிந்தும் ஒரு ரணகளம். சாவையும், அழுவையும், துன்பத்தையும் பரிசாகக் கொடுத் துத்தான் நாம் சுதந்திரம் எனும் சுவர்க்கத்தைக் காணமுடியும். கரடு முரடான பாதைகள் நிறைந்த இந்த இலட்சியப் பயணத்தில் எமக்கு ஒரேயொரு ஊன்று கோலாக இருப்பது எமது உறுதிதான்.

இன்று ஒரு புதிய நெருக்கடியான வரலாற்றுத் திருப்பத்தை நாம் சந்தித்து நிற்கிறோம்.

எதிரிப் படைகள் யாழ்ப்பாணக் குடாநாட்டை முற்றுகையிட்டு நிற்கின்றன. பொருளாதாரத் தடைகளை இறுக்கி உணவுப் பஞ்சத்தை உண்டு பண்ண எதிரி முனைகிறான். இராணுவ அழுத்தம், பொருளாதார நெருக்குதல் என்ற ரீதியில் இரு முனைகளில் எமது மக்கள் மீது யுத்தம் ஒன்று ஏவப்பட்டிருக்கிறது. எமது போராட்டத்தின் அசைக்க முடியாத அரணாக நிற்கும் எமது மக்களின் மனபலத்தை உடைத்துவிட எதிரியானவன் எல்லாவித தந்திரோபாயங்களையும் கடைப்பிடிக்கலாம் என்பது எமக்கு தெரியாதது அல்ல.

எமது மக்கள் சிங்கள இனவாத அடக்கு முறையின் அக்கினிப் பட்டறையில் புடம் போடப்பட்டவர்கள் அரச பயங்கரவாதத்தின் அகோரங்களைச் சந்தித்தவர்கள் துன்பச் சிலுவையைச் சதா சுமந்து பழகிரவர்கள். மரணத்தின் நிழலில் படுத்துறங்கி வாழ்பவர்கள்.

களைத்துப்போனவனின் இறுதி ஆயுதமாக உணவுப் போர் எமது மக்கள் மீது தொடுக்கப்படலாம் பட்டினித் தீயால் மக்களின் மன உர்தியைச் சுட்டெரிக்க எதிரி முயற்சிக்கலாம். ஆனால் சுதந்திரப் பசியால் உறுதி பூண்ட மக்களை சோற்றுப்பசி தீண்டி விடப்போவதில்லை.

எனது அன்பான மக்களே!

இன்று நாம் எதிர் கொள்ளும் இந்த நெருக்கடியான சூழ்நிலையில் எதிரியின் எந்தச் சவாலுக்கும் நாம் முகம் கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும்.

எமது மனஉறுதிக்கு எதிரி சவால் விடுகிறான். இந்தச் சவாலை ஏற்பதற்கு எமக்கு ஆன்ம உறுதியைத் தவிர வேறு ஆயுதங்கள் தேவையில்லை.

எரிமலை (தை 2000) இதழிலிருந்து...


மரகதம்
வைரம்
முத்து
புஷ்பராகம்
மாணிக்கம்
பவளம்
வைடூரியம்
நீலம்
கோமேதகம்
உங்கள் இராசிக்கேற்றபடி
அதிஸ்டக் கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் செய்து தரப்படும்
லஷ்சுமி
பொற்சாலை
Inside of Majestic City Plaza
அழையுங்கள்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6


PSP
PSP MOTORS
QUALITY USED CARS
Dealers in all kinds of used Motor Vehicles
பல வருடம் அனுபவம் கொண்ட நம்பிக்கையான ஸ்தாபனம்
தரமான பாவித்த ஜப்பானிய வாகனங்கள்
நியாயமான விலையில் கிடைக்கும்
WE'LL BUY YOUR USED VEHICLE EVEN IF YOU DON'T WANT TO BUY OURS!
T. Udayakumar
PSP MOTORS 416.871.0450
30 Old Kennedy Road Unit B Markham ON. L3R 0L6
www.pspmotors.com I info@pspmotors.com


HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
Endless Supply of Hot Water
No Up-front Equipment Cost
Save Up To 40%
Save Money & Space Design
15 Years Warranty
No More Risk of Flooding or Explos
KD NAVIEN
The Leader in Condensing Tankless Technology
FREE ESTIMATE
Sales, Service & Repair
S.Kumar
416-993-8001
Airehvac70@gmail.com
FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN
$15,000


நான் பெரிது நீ பெரிது என்று
வாழாமல்
நாடு பெரிது என்று
வாழவேண்டும்
தமிழீழத் தேசியத் தலைவர்
தமிழீழம்
விடியலை நோக்கி

# மன உலகம்

நெருப்புக்குளத்து நீசல்
இருப்பிழந்து போன எரிசல்
எல்லாம் சேர்த்து
இறுக்கப் பார்க்கிறது
மனங்களை.

போரின் நீட்சி
பொருள் முடக்கம்
வாழ்வின் வலி
வதையுயும் வம்சம்
இடர்நிறை சூழல்
ஏங்கும் பொழுதுகள்
எந்த மனங்ளையும்
வெந்திட வைக்கும்.

நெருங்கி மூலையில்
முடங்கிட பிசையாக்கி
உயிரைப் பிசையாக்கி
உளறிட வைக்கும்.

சாவின் பயமும்
சண்டைகள் ஒலியும்
கேவி அழுதழ
கீழ்ப்படிய வைக்கும்.

மனந்தானே எல்லாமும்!
சூழலில் தாக்கம்
உனக்குள் புதைய
உனது தாக்கம்
மனசைப் பிசைய
எல்லாம் முடிந்ததாய்
எண்ண வரும்.

மனந்தானே எல்லாமும்!

உர்ணவுகளின்
கலவைதான் மனம்
அதில் உறுதியை
நிரப்பினால் திறம்
எதையும்
உரிமையாக்குவதும்
கனமாக்குவதும்
மனதின் மாயங்களே.

வலியால் துடிக்கும் மனம்
வலுவிழந்து அழிகிறது
வலிமை நிறைந்த மனம்
வரலாறாய் ஆகிறது.



அறிவின் கதவுகளை
அகலத் திறப்பவனுக்கே
மனசின் முக்கன்
மர்மங்கள் விலகுகின்றன.

அறிவின் கட்டளைக்கு
மனசைப் பழக்கினால்
குவியும் இலக்கெதையும்
குறிப்பிட்டு வென்றிடலாம்.

மனந்தானே எல்லாமும்!

போராட்டப் பாதையை
மனதில் துணிவிருந்தால்
பூப்பூக்க வைக்கலாம்
எந்த இறுக்கத்தையும்
மனதில் திறனிருந்தால்
இலகுவாக வென்றிடலாம்
துயரின் பாரங்களை
மனதில் வலுவிருந்தால்
தூக்கியே வீசிடலாம்.

மனம்

மூன்றெழுத்து சொல்தான்
ஆனால் அதுவே உன்
மூளையத்தின் வில்
இலக்கை நோக்கி
வில்லை வளைத்தால்
எய்யும் அம்பு
என்றும் தவறாது.

மனந்தானே எல்லாமும்!

மனம்
உனக்குள் சுற்றும்
ஓர் உலகம்
அதை அறிவால் இயக்கு
உன்னை சுற்றிலும்
இவ்வுலகம்.

-கு.வீரா - 2009






# ஆழப்பதிந்த பெரும் சமர்!

பெரும் நிலமீட்புச் சமராக வெடித்து பல்லாயிரம் சதுரக் கிலோ மீற்றர் நிலத்தை சிங்களப் பேரினவாத வல்வளைப்பிலிருந்து மீட்டுவரும் ஓயாத அலைகள் 3 நடவடிக்கை தமிழர்களின் நவீன படைத்துறை வரலாற்றில் புதியதொரு பரிணாமத்தை வெளிக்காட்டியுள்ளது. இக் கட்டுரை நகர்வு பல்வேறு அரசியல் - படைத்துறை - அரசதந்திர நகர்வுகளை தூண்டி விட்டுள்ளது.

புத்தாயிரம் ஆண்டு பிறந்த வேளையில் கொழும்பு படைத்துறை தலைமையகத்தில் சிங்களத் தரைப்படைத் கட்டளையாளர் லெப். ஜெனரல் சிறீலால் வீரசூரிய தன் உயரதிகாரிகளைச் சந்



தித்தார். வன்னியில் ஏற்பட்ட தோல்வியால் துவண்டுவிடா தீர்கள் எனவும் கடந்த காலத்தில் சுழலாமல் எதிர்காலத்திற்குள் செல்லுங்கள் எனவும் அவர் ஆலோசனை சொன்னார்.

வன்னியில் ஏற்பட்ட தோல்வி தற்காலிகமானது. இத்தகைய தோல்விகளை போரில் சந்திப்பது தவிர்க்க முடியாதது எனவும் தானே ஆறுதல் சொல்லிக் கொண்ட வீரசூரிய படைவலு மூலமே தீர்வு இயலுமைப்படும் என வீரமுழக்கம் செய்தார். (தி ஐலண்ட் 02.01.00)

சந்திரிகாவுக்கு நெருக்கமானவர் என கொழும்பு வட்டாரங்கள் கருதப்படும் வீரசூரிய சிங்களத்தின் தொடர்ச்சியான நிகழ்ச்சித் திட்டத்தை தெளிவாக அங்கு முன்வைத்தார். அவ் உரையின் தொடர்ச்சியாக படைத்துறையிற்கு பெரும் ஆட்சேர்ப்பு நடவடிக் கைக்கான பரப்புரைகளை தூண்டிவிட்டன. சிங்கள நாடு முழுமையும் 744 ஆட்சேர்ப்பு மையங்கள் இறக்கப்பட்டன. வீடு வீடாகச் சென்று ஆட்சேர்ப்புப் பணியில் படைத்துறை ஈடுபடும் என வீரசூரிய மீண்டும் அறிவித்தார். போதிய சிங்களவர்கள் படையில் சேராவிடின் கட்டாய படைத்துறை பயிற்சிக்கான முடிவைக்கூட அரசு மேற்கொள்ளலாம் என அமைச்சர் மகிந்த ராஜபக்ச ஊகம் கூறினார். (தி இந்து 29.01.00)

படையின் ஆள்வலுவை கூட்டுவதற்கான முயற்சிகள் இடம் பெறும் வேளையில் கொழும்பில் சிறீலங்காவுக்கான ஆயுத வழங்கல் தொடர்பாக பல்வேறு அறிவிப்புக்கள் வெளியாகன. இசுரவேலிடம் இருந்து கடற்கலங்களை கொள்வனவு செய்த அரசு அவற்றை இயக்குவதற்கான பயிற்சியினைப் பெற 720 கடற்படையினரை அங்கு அனுப்பி வைத்துள்ளதாக அறிவிக்கப் பட்டது. மறுபுறம் அமெரிக்காவுடனான சிங்களத்தின் படைத் துறை உறவு அதிகரித்துவிட்டதாகவும் புலிகளின் சேணேவிகள் மற்றும் எறிகணைகளை கண்டுபிடிக்கும் கதுவீகளை 20 மில்லியன் டொலர்கள் செலவில் சிறீலங்கா கொள்வனவு செய்யும் எனவும் அறிவிக்கப்பட்டது.

சமர்முனையில் நிலவும் ஒப்பீட்டளவிலான அமைதியை சிங் கள படைத்துறையிற்குக் கிடைத்த வெற்றி என சிறீலங்காவின் துணை படைத்துறை கட்டளையாளர் மேஜர் ஜெனரல் பலகெல கொழும்பில் அறிவித்தார். ஆனையிறவில் தமது படைகள் புலிகளை தோற்கடித்துவிட்டதாக சிங்கள அரச ஏடான இடெய்லி நியூசு அறிவித்தது. எவ்வாறு புலிகளின் ஓயாத அலைகளை முறியடித்தோம் என 54-ம் படைப்பிரிவின் முன்னைய கட் டளையாளர் கொழும்பு ஏடுகளுக்கு செய்தி வழங்கி படைத் துறை பற்றிய திகைப்பான எண்ணங்களை ஏற்படுத்த முனைந்

தார். இவ்வாறான பின்னணியில், சிங்கள இயந்திரம் ஓயாத அலைகளை எதிர்கொள்ளவும் தமிழீழம் மீதான வல் வளைப்பை தொடர்வதற்கான இறுதியான ஆயுதமாக படைத் துறையையே தொடர்ந்தும் நம்பியுள்ளதை கவனிக்கலாம். படைத்துறையை சுற்றி எழுப்பப்பட்டுள்ள இன அழிப்புக் கோட் பாடுகளில் சிங்கள இயந்திரம் தொடர்ந்தும் இயங்குவதை துல்லியமாக இங்கு அறியமுடிகிறது. ஆனால், இதன் இயலுமைத் தன்மைகள் எவ்வாறு உள்ளன?

1995-ம் ஆண்டு புதிய ஊக்கமகிழ்வுடனும் நவீன வகை ஆயுத தளபாடங்களுடனும் தமிழர்களின் பெருநகர்களை தாக்கிக் கைப்பற்றும் சமர்த்திட்டத்தை நடைமுறைப்படுத்தப் புறப்பட்ட சந்திரிகா அரசு இன்று யாழ். குடாநாட்டினுள் வலுவான சமர் வியூகங்களுடன் உள் நுழைந்துள்ள புலிகளின் தொடர்நகர் வுகளை எதிர்கொள்கின்றது. வன்னியில் ஏற்பட்ட பெரும் படைக் கட்டுமான உடைப்பினால் குப்புற வீழ்ந்த எதிரி இன்று யாழ். குடாநாட்டிலிருந்து தப்புவதற்கான தரைவழியாக பாதை இல் லாத மூன்று பெரும் படைப்பிரிவுகளின் நிலைகளை காக்க வேண்டிய தேவையைக் கொண்டுள்ளனர்.

குடாநாட்டின் கேந்திர முக்கியத்துவம் நிரம்பிய பகுதிகளில் கால் பதித்து சிங்களத்தின் வல்வளைப்பு நிலைகளை புலிகள் ஊட




றுத்து செல்வதால், ஆனையிறவு - இயக்கச்சி நிலைகளை காத்தல் என்ற தேவை முழுச் சிங்களத்தினதும் முதன்மை அச்ச மாகிவிட்டது. புலிகளை அழிப்பதற்காக உலக வல்லுநர்களால் பயிற்றுவிக்கப்பட்டு வன்னிக்கு அனுப்பப்பட்ட 53-வது படைப் பிரிவு 54-வது படைப்பிரிவுடன் இணைந்து ஆனையிறவு - இயக்கச்சி நிலைகளை பாதுகாத்தவாறு பலாலியுடனான தொடர்பை பேணும் பணியை இவ் 48-வது படைப்பிரிவு புரிகின்றது. இவ்விரு படைப்பிரிவுகளும் சுமார் 25,000 படை யினராலும் நவீன தகரிகள், கவசவூர்திகள் என்பனவற்றாலும் சேணேவிகளாலும் வலுப்படுத்தப்பட்டவை.

யாழ். குடா வல்வளைப்பை பாதுகாக்கும் பணிக்காக பல உய ரதிகாரிகளை அங்கு அனுப்பி வைத்துள்ள சந்திரிகா அரசு, குடாநாட்டில் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ள வான் தாக்குதல்கள்



மூலம் யாழ்.குடாநாட்டில் ஓயாத அலைகளின் வலுவை ஒப்புக் கொண்டுள்ளது. மேலும், புலிகளின் நகர்வுகளை இடைநிறுத்து வதற்கான உத்தியாக மக்களை கவசங்களாக்கும் முயற்சியை படைத்துறை ஆரம்பித்தது. தமது சேணேவி நிலைகளை மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் அமைப்பதன் மூலம் புலி களின் பகரடி தாக்குதல்களை தடுக்க முனைந்துள்ளமையை




எதிர்த்து மக்கள் குரலெழுப்பிசென்றார்கள். வடமராட்சிப் பகுதியில் படைத்துறை மக்கள் பயணம் செய்யும் ஊர்திகளைப் பாவித்து புலிகளின் தாக்குதல்களிலிருந்து தப்பிக்கும் உத்திகளை பாவிப்பது பற்றி புலிகள் பகிரங்க எழுதருகையை அண்மையில் விடுத்திருந்தனர்.

இவ் ஆயத்தங்களை நோக்கியவாறு புலிகளின் படைவியூகம் பல்வேறு திசையூடாக பரந்தகன்று வருவதை உலக ஆய்வாளர்களே ஏற்றுக்கொண்டுள்ளனர். அண்மையில் வன்னிக்குச் சென்று திரும்பிய கத்தோலிக்க பிதா தெரிவித்த கருத்துக்கள் பெரும் பரபரப்பை கொழும்பில் ஏற்படுத்தியது. வன்னியில் ஏற்பட்டு வரும் பெரும் அரசியல் - படைத்துறை எழுச்சி பற்றி அவர் கூறினார். 2000 ஆண்டை போர் ஆண்டாக சாற்றாணைப் படுத்தி பெரும் போர்ப்பயிற்சிகளில் தமிழர்கள் ஈடுபட்டுள்ளனர் என அவர் கூறினார். (சற்றர்டே எக்சுபிரசு 29.01.00)

போரின் தீவிரத்தை சற்றுக் குறைத்து அதனை தந்திரவழிவகை வழிநெறியூடாக நகர்த்தும் போக்கு இப்போது நிலவுவதை அனைவரும் ஒப்புக்கொள்கின்றனர். ஆனையிறவுத் தளத்தின் முக்கியத்துவம் குறைக்கப்பட்டு வடமராட்சி கிழக்கு ஊடான தரைப்பாதையும் தனங்களப்பு, கேரதீவு ஊடான பாதையும் புலிகளினால் திறக்கப்பட்டுள்ளது. மறுபுறம் ஆனையிறவுத் தளத்தின் தெற்கு - கிழக்கு அரண்களை கைப்பற்றியதன் மூலம் ஆனையிறவுத் தளத்தின் பெரும் தளத்தை நெருங்கியவாறு அமர்ந்துள்ளனர். இயக்கச்சிப் பகுதிகளில் படைநிலைகளை நெருங்கக் கூடிய தொலைவில் புலிகள் நிலையெடுத்துள்ளதை சிங்களம் வெளியிடும் சமர்ச் செய்திகள் உறுதிப்படுத்துகின்றன.

இந் நிலையை உற்றுநோக்கும் ஆய்வாளர்கள் இரு விடயங்களை நோக்குகின்றனர்.

போரின் பிடி அல்லது முன்னெடுப்பதற்கான வாய்ப்பு இன்று எதுவித ஐயங்களுமின்றி புலிகளிடம் உள்ளது.

யாழ். குடாநாட்டில் உள்ள சிங்கள நிலைகள் புலிகளின் ஒரு வலைவிரிப்புக்கு வெறுமனே எதிரொளிக்கின்றன.

தற்போது பெறப்படும் அல்லது பெற உள்ளதாக அறிவிக்கப்படும் அமெரிக்க ஆயுத உதவிகள் சமர்க்களத்தில் புலிகள் பெற்றுள்ள படைய மேலாதிக்கத்தை உடைக்க உதவாது என இந்திய ஆய்வு ஒன்று கூறுகின்றது. சிங்கள ஆய்வாளரான தயான் செயதிலக சிங்களத்திற்கு தேவையானது பெரும் அழிவுகளை ஏற்படுத்தும் ஆயுத தளபாடங்களே எனக்கூறுகின்றார். அதற்கு ஏற்புடைய படைத்தளபாடங்கள் வாங்கப்பட வேண்டும் என அவர் கூறுகின்றார். படைத்துறையின் ஆட்சேர்ப்பு நடவடிக்கை பற்றி கருத்து வெளியிட்ட பௌத்த பீடாதிபதி வண. சோபித தேரர் "தோல்விகளுக்கு ஒவ்வொரு காரணங்களைக் கொண்டு வருகின்றனர்" என விரிக்கிறார். அமெரிக்க அரசு தனது ஆயுத வழங்கல் தொடர்பாக விடுத்த செய்தியில் தமது அரசு அப்படியொன்றும் திகைப்பான உதவிகளைப் புரியவில்லை எனவும் தமது பயிற்சித் திட்டங்களின் அடிப்படையில் 20-60 அமெரிக்க படையினர் பங்கேற்கும் பொது பயிற்சியிலேயே ஈடுபட்டதாக கூறுகின்றனர். அவை சமரிற்கு வெளியேயான செயற் பற்றிய பயிற்சியென அமெரிக்கா விரித்துள்ளது.

இவ்வாறான படைத்துறை புறநிலையில் ஓயாத அலைகளின் வலிமையால் வலுப்பெற்ற அரசியல் இணக்கப்பாடு பற்றிய விடயம் முன்னணிக்கு வந்துள்ளது. சந்திரிகா அரசின் பெரும் படையெடுப்புக்கு இரையிட உருவாக்கப்பட்ட தீர்வுப்பொதி தற்போது மீள தூசு தட்டப்பட்டு ஓயாத அலைகளிற்கு தடுப்பிட பயன்படுத்தப்படுகின்றது. வெறும் அரசமைப்பு இருத்தம் மூலம் சிங்கள பேரினவாதத்தை இல்லாதொழிக்கலாம் என்ற பொய்யை மீண்டும் சந்திரிகா அரசு தூக்கிப்பிடித்துள்ளது. கடந்த காலங்களில் இப் பொதிக்கு எதிர்ப்பு தெரிவித்த ரணில் விக்கிரமசிங்கவின் மேல் இனச்சிக்கல் தொடர்வதற்கான காரணம் எனப் பழியைப்போட்ட சந்திரிகா அரசு, ரணில் விக்கரமசிங்க பொதிக்கு ஆதரவு தரத்தயார் என அறிவித்தமையால் பொதியை சிறிது காலத்திற்கான விவாதப் பொருள் ஆக்கியுள்ளது.

அரசமைப்புச் சட்டத்தை மாற்றுவதன் மூலம் இனச்சிக்கலை தீர்க்கலாம் என்பது அறிவியலற்ற செயற்பாடு. இரு தேசியங்களின் ஆழமான வரலாற்று பிளவை ஆராயாது வெறுமனே ஓயாத அலைகளின் வலுவினால் இணக்கத்திற்கு ஒப்புக் கொள்ள முற்படும் அரசும் இனவாத இயந்திரமும் தற்காலிக ஓய்வுக்குப் பின் இன அடக்குமுறையை தொடர்வர். இங்கே அரசமைப்பு என்பது சிங்கள பௌத்த ஆட்சி பீடத்தின் சட்டமாகும்.





சிங்கள ஆக்கிரமிப்புப்படை

பெரும் இன அழிப்பு இடம்பெறும் புறச்சூழ்நிலைகளில் புலிகள் இணக்கப்பாட்டை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். நோர்வே போன்ற நாடுகளின் தலையீடு கூட புலிகளின் இக்கோரிக்கையின் நியாயங்களை ஏற்றுக்கொள்ளும் கடந்த காலங்களில் பல சிங்கள தலைமைகள் இருந்த போதும் பேச்சுக்களின் போது தமது படைத்துறை சூழ்நிலைகளை பாதுகாத்தவாறே சிங்களம் பேச முயன்றது. படைத்துறை விடயங்களை புலிகள் இணக்க மேடையில் கொண்டு வந்த வேளைகளில் பேச்சுக்கள் முறிந்து போயின.

இன்னிலையில் புதிதாக எழுந்துள்ள அரசியல் - அரசதந்திர சூழ்நிலைகளானது தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் கடந்த மாவீரர் உரையில் கோடிட்டுக்காட்டிய இணக்கப்பாட்டுக்கான தேவைகளை உள்வாங்கியதாக இருக்க வேண்டும் மாறாக, சிங்களத்தின் தேவைகளுக்கு ஏற்புடையதொரு பேச்சுவார்த்தைக்கு புலிகள் உடன்பட வேண்டிய தேவை நிலவவில்லை.

இவ்வாறான மாற்றங்களின் ஊடு ஓயாத அலைகள்-3 நகர்ந்து வருகின்றது. இதுவரை இந் நடவடிக்கை இயலுமைப்படுத்திய அல்லது ஏற்படுத்திய மாற்றங்கள் ஒருபுறமும் ஏற்படுத்த உள்ள தாக்கங்களும் மாற்றங்களும் மறுபுறமும் தமிழீழ சிங்கள தேசிய உறவுகளை வடிவமைத்து வருகின்றன. போரின் பிடியை தமது கைகளில் வைத்துள்ள புலிகளே இவ் வரலாற்றின் நாயகர்கள் ஆவார்.

ஜனவரி 2000 - எரிமலை




# தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

# தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை 10.01.1974






1974ஆம் ஆண்டு சனவரி மூன்றாம் திகதி தொடக்கம் பத்தாம் திகதி வரை தமிழ் மக்கள் தமது மொழி, பண்பாடு என்பனவற்றை உள்ளடக்கி நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் சிறப்பாக நடாத்துவதற்கு ஏற்பாடு செய்தார்கள். மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதை அப்போது ஆட்சியிலிருந்த அரசாங்கம் விரும்பவில்லை. அரசாங்கம் இதனை ஏற்றுக்கொள்ளாது கொழும்பில் நேரடியாகவும், யாழ்ப்பாணத்தில் மாநகர மேஜர் ஊடாகவும் தொடர்ச்சியான தடைகளை ஏற்படுத்தியது. அத்துடன் மாநாடு நடைபெறுவதற்கான முக்கிய அரங்குகளின் அனுமதி இறுதி நேரம் வரை மறுக்கப்பட்டிருந்தது. மாநாட்டில் கலந்து கொள்ள பல வெளிநாட்டு அறிஞர்களுக்கு விசா மறுக்கப்பட்டது.

இவைகள் எவ்வாறு இருந்தாலும், மாநாட்டை சிறப்பாக நடத்த வேண்டும் என்ற மனவெழுச்சி அமைப்பாளர்களிடமும், மக்களிடமும் இருந்தது. மக்கள் அலை அலையாகத் திரண்டதைக் கண்ட அரசாங்கம் சற்றுக் கீழிறங்கி மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வெளிநாட்டு அறிஞர்களுக்கு விசா வழங்கியது.

## 4 வது உலகத் தமிழாராச்சி மாநாடு 03-09 தை 1974



விழாக் கோலத்தில் யாழ் நகர் 1974 தை

நன்றி: 'ஒளியில் எழுதி' அமிர்தலிங்கத்துகான இலண்டன் வெளியீட்டிலிருந்து...

மாநாட்டுக் குழுத்தலைவர் நீதியாளர் தம்பையா மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு விரும்பவில்லை. ஆகையால் அவர் தலைவர் பதவியிலிருந்து விலகப் பேராசிரியர் சு.வித்தியானந்தன் தலைமையில் தமிழாராய்ச்சி மாநாடு மூன்றாம் திகதி ஆரம்பமாகி பத்தாம் திகதிவரை யாழ். முற்றவெளி திறநத் வெளியரங்கில் சிறப்பாக நடைபெற்றது. யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலிருந்தும் இலட்சக்கணக்கான மக்கள் யாழ். நகரம் வந்தார்கள். அதுவரை நடைபெற்ற எந்தவொரு மாநாடும் இதுபோல சிறப்பாக நடைபெறவில்லை. அன்றைய தினம் குடாநாடு விழாக் கோலம் பூண்டிருந்தது.

1974ஆம் ஆண்டு சனவரி பத்தாம் திகதி இறுதி நாளாகக் கொண்டாடப்பட்டது. இறுதி நிகழ்வாக அறிஞர்கள் தமிழின் பெருமைகளையும், பண்பாட்டின் பெருமையையும் பற்றிப் பேசினார்கள். மக்கள் உணர்வோடு கைதட்டி உற்சாகப்படுத்தினர். இறுதியாகத் தமிழகப் பேராசிரியர் “நைனா முகமது” பேசிக் கொண்டிருக்கும் போது யாழ். உதவிக்கு காவற்துறைமா அதிபர் சந்திரசேகரா தலைமையிலான காவற்துறை மாநாட்டில் கலந்து கொண்டிருந்த மக்களைத் தாக்கியதுடன், துப்பாக்கியாலும் சுட்டார்கள். இச் சம்பவத்தில் ஒன்பது பொதுமக்கள் உயிரிழந்தார்கள். பலர் காயமடைந்தனர். அரங்குகள் சேதமடைந்தன. இம்மாநாட்டினைக் குழப்பிய யாழ் உதவிக் காவற்றுறை அத்தியட்சகர் சந்திரசேகரா பின்னர் சிறீமாவோ பண்டாரநாயக்கா அவர்களால் காவற்றுறை அத்தியட்சகராகப் பதவி உயர்த்தப்பட்டார்.

***10.01.1974 அன்று தமிழாராய்ச்சி மாநாட்டில் கொல்லப்பட்டோர் விபரம்:***

1. வேலுப்பிள்ளை கேசவராஜன் (வயது 15 – மாணவன்)
2. பரமசோதி சரவணபவன் (வயது 26)
3. வைத்தியநாதன் யோகநாதன் (வயது 32)
4. ஜோன் பிடலிஸ் சிக்மறிங்கம் (வயது 52 – ஆசிரியர்)
5. புலேந்திரன் அருளப்பு (வயது 53)



10.01.1974

தமிழ்மீது காதல்கொண்டனர்
கொலை வெறிக்காளாகி மாண்டனர்.

சி. நந்தகுமார் | வே. கேசவராசன் | ப. சரவணபவன்

இ. சிவானந்தம் | வ. யோகநாதன் | இ. தேவரட்னம்

பி. சிக்மாறிலிங்கம் | சி. ஆறுமுகம் | சி. பொன்னுத்துரை

இலங்கையில் நடைபெற்ற நான்காம் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளன்று, சிங்கள அரசின் காவற் படையினரின் காட்டுமிராண்டித்தனத்திற்குப் பலியான ஒன்பது தமிழர்கள்.

6. இராசதுரை சிவானந்தம் (வயது 21 – மாணவன்)
7. இராஜன் தேவரட்ணம் (வயது 26)
8. சின்னத்துரை பொன்னுத்துரை (வயது 56 – ஆயுள்வேத வைத்தியர்)
9. சின்னத்தம்பி நந்தகுமார் (வயது 14 – மாணவன்)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# சுன்னாகம் காவல்துறை நிலையப் படுகொலை 08.01.1984

யாழ் மாவட்டத்தின் வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச எல்லைக்குள் சுன்னாகம் அமைந்துள்ளது. யாழ் நகரிலிருந்து காங்கேசன்துறை செல்லும் கே.கே.எஸ் வீதியில் பத்து கி.மீ தூரத்திலுள்ள சந்திக்குத் தெற்குப் புறமாக இருநூற்றைம்பது மீற்றர் தூரத்தில் சுன்னாகம் காவல்துறை நிலையம் அமைந்திருந்தது.

1984ஆம் ஆண்டு தை மாதம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் காரணமின்றிக் கைதுசெய்யப்பட்ட சுன்னாகப் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் சுன்னாகக் காவல்துறை நிலையத்தில் தடுத்து வைக்கப் பட்டிருந்தனர்.

1984ம் ஆண்டு தை மாதம் எட்டாம் நாள் காவல்துறை மீது போராளிகளின் எதிர்ப்புக்கள் பரவலடைய சுன்னாகக் காவற்றுறையினர், இளைஞர்களைத் தடுத்து வைத்திருந்த அறையில் நேரக்கணிப்பு குண்டினை பொருத்திவிட்டு அவ்விடத்தை விட்டு வெளியேறினார்கள். காவல்துறையினர் பொருத்திய குண்டு வெடித்ததில் காவல்துறை நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்ட இளைஞர்களை காப்பாற்றச் சென்ற சஞ்சீவன் உட்பட பத்தொன்பது இளைஞர்கள் உயிரிழந்தனர்.

***08.01.1984 அன்று சுன்னாகம் காவற்றுறை நிலையப் படு***

***கொலையில் கொல்லப்பட்டோர் விபரம்:***

01. செல்லர் சிவலிங்கம் (வயது 22 – மாணவன்)
02. வைத்திலிங்கம் நிகேதனன் (வயது 21 – மாணவன்)
03. கந்தையா பாலன் (வயது 25 – கமம்)
05. அப்பையா நாகராசா (வயது 38 – வியாபாரம்)
06. ஆசீர்வாதம் விஜிற்விமலராஜா ( வயது 20 – மின்சாரசபை ஊழியர்)

குறிப்பு :- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# வங்காலைப் பங்குத்தந்தை வணபிதா மேரி பஸ்ரியன் மற்றும் பொதுமக்களின் படுகொலை 06.01.1984






வங்காலைக் கிராமம் மன்னர் மாவட்டத்தின் நானாட்டான் பிரதேச செயலகப்பிரிவில் கடற்கரையோரமாக அமைந்துள்ளது. புனித அருள் ஆலயம் இங்குள்ள மக்களின் வணக்கத்தலமாக உள்ளது.

1985 ஆம் ஆண்டு தை மாதம் ஆறாம் திகதி பூரணை தினத்தன்று பி.ப. 12:30 மணியளவில் வங்காலைக் கிராமத்தினை இராணுவத்தினர் சுற்றி வளைத்துக்கொண்டனர். நள்ளிரவு தொடக்கம் மறுநாள் காலை 10:00 மணிவரை வெடிச்சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்தன.

மேரி பஸ்ரியன் குருவின் வதிவிடத்தை நோக்கிச் சுட்டுக்கொண்டு இராணுவத்தினர் சென்றனர். குருவானவர் தனது மேலங்கியையும் அணிந்து கொண்டு செபமாலையுடன் வெளியே வந்து கைகளை மேலுயர்த்தியவாறு ஆங்கிலத்தில் “பிளீஸ்“ எனக் கெஞ்சும் பொழுது அவரை நோக்கி இராணுவத்தினர் சுட்டனர் பங்குத்தந்தையுடன் நின்ற இரண்டு இளைஞர்களும் உயிரிழந்தார்கள். வெடிச்சத்தத்திற்கு பயந்து ஓடிய சிலரும் பலியாகினர். சிலர் கோயிலின் மேல் மாடியில் ஏறி பதுங்கியிருந்தார்கள. இராணுவத்தினர் பங்குத்தந்தையின் உடலை இழுத்து வந்து கன்னியர்மட வாசலிற் கிடத்திப் புகைப்படங்கள் எடுத்தனர். இவற்றைக் கோயிலின் மேல்மாடியில் ஒளித்திருந்த பொதுமக்கள் பார்த்தார்கள்.

இந்தச் சம்பவம் நிகழ்ந்த பின் இராணுவத்தினர் ஒரே பாட்டும் கூத்துமாக இருந்தனர். பின்னர் இராணுவத்தினர் இறந்தவர்களை ஏற்றிக்கொண்ட சென்றுவிட்டனர். இதன் பின்னர் மக்கள் திரண்டு சென்று பார்த்தபோது மேரி பஸ்ரியனின் இருப்பிடம் இரத்த வெள்ளமாகக் காணப்பட்டுது.

இறந்த மேரி பஸ்ரியனின் உடலைத் தரவி மற்ற எட்டுப் பேரின் உடல்களை மன்னார் வைத்தியசாலையிற் கொடுத்துவிட்டு, மேரி பஸ்ரியனின் உடலைத் தள்ளாடி இராணுவ முகாமிற்குக் கொண்ட சென்றுவிட்டனர். அவ்வேளையில் இந்த முகாமிலிருந்து எழும்பிய வழமைக்கு மாறான புகைமண்டலத்திலிருந்து அவரது உடல் எரிக்கப்பட்டதாக அப்பகுதி மக்கள் நம்புகின்றனர்.

இச்சம்பவத்தில் மேலும் பல இளைஞர்கள் வெடிபட்ட காயங்களுடன் பின்னர் கண்டு பிடிக்கப்பட்டு இரகசியமான முறையில் வைத்தியம் செய்யப்பட்டனர். இறந்தவர்களின் உடல்கள் வங்காலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டன.

***06.01.1985 அன்று வங்காலைப் பங்குத்தந்தை வணபிதா***

***மேரி பஸ்ரியன் மற்றும் பொதுமக்கள் படுகொலையில் கொல்லப்பட்டபோர் விபரம்***

1. மரியதல்மைடா தாசன் (26)
2. சூசையப்பு மேன்பீரிஸ் (20)
3. ஞானசேகரம் றூபன்குரூய் (24)
4. சவிரியான் அந்தோனி (23)
5. மனியப்பன் நீலமேகம் (28)
6. சந்தியா அலெக்சாண்டர் முறாவிலி (33)
7. வணபிதா மேரி பஸ்ரியன் (-)
8. லூயிசம்மா பிராண்டா (60)

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# திருகோணமலை தமிழ் மாணவர்கள் படுகொலை 02.01.2006




திருகோணமலை டொக்யார்ட் வீதி, பெரிய கடற்கரைச் சந்தி யிலுள்ள காந்தி சிலைக்குச் அருகாமையாக மாலைப் பொழு தில் தனிமும் இளைஞர்கள் நின்று கதைப்பது வழக்கம். 02.01.2006 அன்றைய மாலைப் பொழுதும் மாணவர்கள்



பலர் அவ்விடத்தில் கூடிநின்று கதைத்துக்கொண்டிருந்தனர். அப்போது ஆட்டோ ஒன்றில் வந்த இனம் தெரியாத நபர்கள் இந்த இஞைர்கள் மீது கைக்குண்டை வீசிவிட்டு கோட்டைப் பக்கமாகச் சென்றனர்.

கைக்குண்டு வெடித்தில் திருமலை புனிதஜோசப் கல்லூரி மாணவரான யோகராஜா பூஞ்குழலோன் என்பவர் காய மடைந்தார். இவரை ஏனைய மாணவர்கள் வைத்திய சாலைக்குக் கொண்டுசெல்ல முற்பட்டபோது அப்பகுதிக்கு வந்த கடற்படையினர் அங்க சுமார் 10 நிமிடங்கள் வரை துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனால் கடற்கரையில் நின்ற மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடத்தொடங்கினர். இதற்கிடையில் காய மடைந்த மாணவர்களுக்கு அருகில் விரைந்த கடற்படையினர் அவர்களை நிலத்தில் விழுத்தி கண்மூடித்தனமாகத் தாக்கினர். மாணவர்கள் இச்சம்பவம் பற்றி தமக்கு ஏதும் தெரியாது எனக் கூறியபோதும் மாணவர்களைச் சப்பாத்துக் கால்களால் மிதித்து கண்மூடித்தனமாக சுடத்தொடங்கினர். இத்தகைய காட்டு மிராண்டித் தனமான தாக்குதலில் 05 மாணவர்கள் படு கொலை செய்யப்பட்டனர். மேலும் 05 மாணவர்கள் படுகாய மடைந்திருந்தனர்.

***02.01.2006 அன்று திருகோணமலையில் கொல்லப் பட்டடோர் மாணவர் விபரம்***

1. லோகிதராசா றொகான் (20)
2. சண்முகராஜா சஜீந்திரன் (19)
3. மனோகரன் வஜீகர் (21)
4. தங்கத்துரை சிவானந்தன் (20)
5. யோகராஜா கேமச்சந்திரன் (22)




இச்சம்பவத்திற் காயமடைந தவர்கள் விபரம்

1. பரராஜசிங்கம் கோகில ராஜா (21)
2. யோகராஜா பூங்குழ லோன் (20)

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.




















# மன்னார் படகுத்துறைப் படுகொலை - 02.01.2007




இலங்கையின் வடக்கே மன்னார் மாவட்டத்தின் மன்னார் நகருக்கு வடகிழக்கே சுமார் 20 மைல்களுக்கு அப்பாலுள்ள படகுத்துறைக் கிராமம். 1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மீது சிறீலங்கா இராணுவம் மேற்கொண்ட படை நடவடிக்கை காரணமாக யாழ்.நவாந்துறைப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்துவந்து 35 வரையான குடும்பங்கள் இக்கிராமத்தில் குடியேறி வாழ்ந்துவந்தனர். இவர்கள் கடற்றொழிலையே தமது வாழ்வாதாரமாகக் கொண்டமையால் இக்கரையோரக்கிராமம் இவர்களது தொழில் நடவடிக்கைக்கு ஏற்புடையதாக இருந்தது. இங்கு வாழ்ந்த மக்கள் அனைவரும் கத்தோலிக்க மதத்தினைச் சேர்ந்தவர்கள். இக்கிராமத்தில் கத்தோலிக்க தேவலாயம் ஒன்று உள்ளது தேவாலயச் சுற்றாடல் பார்ப்பதற்கு மிகவும் இழகாக இருக்கின்றது. இம்மக்கள் மிகவும் சந்தோசமாகவும் ஒற்றுமையாகவும் வாழ்ந்துவந்தனர்.

2007 ஜனவரி இரண்டாம் நாள் காலை இக்கிராமத்திற்கு மேலாக சிறீலங்கா சிங்கள வான்படையின் வேவு பார்க்கும் விமானம் ஒன்று பறந்துகொண்டிருந்தது. சரியாக 9:30 மணியளவில் இவ்வான்பரப்பில் நுழைந்த சிறீலங்கா சிங்கள வான்படையின் மூன்று கிபீர் விமானங்கள் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டன். கிராம மக்கள் மிகவும் நெருக்கமாக வாழ்ந்ததனாலும் விமானங்களிலிலிருந்து ஏவப்பட்ட குண்டுகள் அனைத்தும் குடியிருப்புப் பகுதி மீதே வீழ்ந்து வெடித்ததாலும் அவர்களது வீடுகள் மற்றும் சொத்துக்கள் அனைத்தும் முழுமையாக அழிவடைந்தன பெண்கள் சிறுவர்கள் உட்பட 15 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். மேலும் 37 பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.

இத்தாக்குதலின் மொத்தப் பாதிப்பும் பொதுமக்களுக்கே ஏற்பட்டுள்ளது என்பதை மதத் தலைவர்களும் அப்பகுதி மக்களும் உறுதிப்படுத்தியுள்ளனர். பாதிப்படைந்த மக்களை இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் சென்று பார்வையிட்டுள்ளது. சிறீலங்கா விமானப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட இப்படுகொலை நடவடிக்கையானது அப்பாவிப் பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட மனித நேயமற்ற ஒரு கொடுரத்தையே வெளிப்படுத்துகின்றது.

***02.01.2006 அன்று மன்னார் படகுத்துறைப் கொல்லப்பட்டடோர் மாணவர் விபரம்***

1. அ. ஆனந்தி (32)
2. அ. விதுசன் (04)
3. அ. இராஜகுமாரி (57)
4. அ. சத்தியப்பிள்ளை (26)
5. அ. குகன் (36)
6. கு. தயாழன் (02)

கு. வலஸ்தீனா (30)

8. ப. ஜமேசன் (12)
9. ச. மதுசன் (01)
10. உதயகுமார் (55)
11. உ. மாலினி (27)
12. உ. தர்சிகா (01)
13. வி. வினோயன் (04)
14. வி. தர்சினி (08)
15. வி. விஜிதா (35)

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.


























# திம்புப் பிரகடனம் – 1985 யூலை 13
# வட்டுக்கோட்டை தீர்மானம் – 1976



## திம்புப் பிரகடனம் – 1985

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி [EPRLF], ஈழப் புரட்சி அமைப்பு [EROS], தமிழீழமக்கள் விடுதலைக் கழகம் [PLOTE], தமிழீழ விடுதலைப் புலிகள் [LTTE], தமிழீழ விடுதலை இயக்கம் [TELO], மற்றும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி [TULF] ஆகியவற்றைக் கொண்டதான தமிழ்த் தூதுக் குழுவால் விடப்பட்ட கூட்டறிக்கை.

தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான பயனுள்ள தீர்வெதுவும் பின்வரும் நான்கு முக்கிய கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டுமென்பது எமது ஆழ்ந்தாராய்ந்த கருத்தாகும்.

1. இலங்கைத் தமிழர்கள் ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கப் படுத்தல்.

2. இலங்கையிலுள்ள தமிழர்களுக்கு இனங்காணப்பட்ட ஒரு தாயகம் உள்ளதென்பதை அங்கீகரித்தல்.

3. தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீ கரித்தல்.

4. இத்தீவைத் தமது நாடாகக் கருதுகின்ற எல்லாத் தமிழர் களினது பிரசாவுரிமையையும் அடிப்படை உரிமைகளையும், அங்கீகரித்தல்.

இக்கோட்பாடுகளை உறுதிப்படுத்துவதற்கு வெவ்வேறு நாடுகள், வெவ்வேறு அரசாங்க முறைமைகளை வகுத்தமைத் துள்ளன.

எமது மக்களுக்கு இந்த அடிப்படை உரிமைகளை மறுத்தத னால் எழுந்துள்ள இப்பிரச்சினைக்குப் பதிலளிப்பாக நாம் சுதந்திரமான தமிழ் அரசொன்றைக் கோரியுள்ளதுடன் அதற் காகப் போராடியும் வந்துள்ளோம்.

இப்பிரச்சினைக்கு அவர்களின் தீர்வாக இலங்கை அரசாங்கத் தூதுக் குழுவினரால் முன்வைக்கப் பட்டுள்ள ஆலோசனைகள் முற்றிலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை. எனவே 1985 யூலை 12 ம் திகதிய எமது கூற்றில் நாம் தெரிவித்துள்ளவாறு அவற்றை நாம் நிராகரித்துள்ளோம்.

எனினும் சமாதானத்துக்கான எமது மனமார்ந்த விருப்பின் நிமித்தம், மேலே குறிப்பிட்ட கொட்பாடுகளுக்கிணங்க இலங்கை அரசாங்கம் எமக்கு முன்வைக்கும் ஆலொசனை களின் தொகுதி எதனையும் நாம் பரிசீலனை செய்யத் தயாரா யுள்ளோம்.

## வட்டுக்கோட்டை தீர்மானம் –1976

பொன்னம்பலம் செல்வநாயகம்

1976 மே 14 ஆந் தேதியன்று வட்டுக்கோட்டையில் நடைபெற்ற தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் முதலாவது தேசிய மாநாட்டில் ஏகமனதாகக் கைக்கொள்ளப்பட்ட தீர்மானம்.

தவிசாளர் எஸ். ஜே. வி. செல்வநாயகம், கியுசி, பா.உ (காங் கேசன்துறை) 1976 மே 14ஆந் தேதியன்று (வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள) பண்ணாகத்தில் கூடுகின்ற தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் முதலாவது தேசிய மாநாடு,

இலங்கைத் தமிழர்கள் தங்களின் தொன்மைவாய்ந்த மொழியி னாலும் மதங்களினாலும் வேறான கலாசாரம், பாரம்பரியம் ஆகியவற்றினாலும் ஐரோப்பிய படையெடுப்பாளர்களின் ஆயுதப்பலத்தினால் அவர்கள் வெற்றி கொள்ளப்படும் வரை பல நூற்றாண்டுகளாக ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் தனிவேறான அரசாகச் சுதந்திரமாக இயங்கிய வரலாற்றின் காரணமாகவும் எல்லாவற்றுக்கும் மேலாக தமது சொந்தப் பிரதேசத்தில் தம் மைத்தாமே ஆண்டுகொண்டு தனித்துவமாகத் தொடர்ந் திருக்கும் விருப்பம் காரணமாகவும் சிங்களவர்களிலிருந்து வேறுபட்ட தனித் தேசிய இனமாகவுள்ளனரென, இத்தால் பிரகடனப்படுத்துகின்றது.

மேலும் 1972இன் குடியரசு அரசியலமைப்பு தமிழ் மக்களைப் புதிய காலனித்துவ எசமானர்களான சிங்களவர்களால் ஆளப் படும் ஓர் அடிமைத் தேசிய இனமாக ஆக்கியுள்ளதென்றும் தமிழ்த் தேசிய இனத்தின் ஆட்சிப்பிரதேசம், மொழி, பிரசா வுரிமை, பொருளாதார வாழ்க்கை, தொழில் மற்றும் கல்வி வாய்ப்புக்கள் ஆகியவற்றை இழக்கச்செய்வதற்கு சிங்கள வர்கள் தாம் முறைகேடாகப் பறித்துக் கொண்ட அதிகாரத்தைப் பயன்படுத்துகின்றனரென்றும் அதன்மூலம் தமிழ் மக்களின் தேசியத்திற்கான இயற்பண்புகள் யாவும் அழிக்கப்படுகின் றனவென்றும் இம்மாநாடு உலகுக்கு அறிவிக்கின்றது.

மேலும் தமிழ் ஈழம் என்ற தனிவேறான அரசொன்றைத் தாபிப் பதற்கான அதன் ஈடுபாட்டுக்கடப்பாடு தொடர்பில், வடக்கு மற் றும் கிழக்குப் பிரதேசங்களுக்கு வெளியே வாழ்கின்றவர்களும் வேலை செய்கின்றவர்களுமான பெரும்பான்மையான பெருந் தோட்டத் தொழிலாளர்களின் ஒரு தொழிற்சங்கமான இலங் கைத் தொழிலாளர்காங்கிரஸ் வெளிப்படுத்திய அதன் ஒவ் வாமைகளைக் கருத்தில் கொள்கின்ற அதேவேளையில், ஒவ் வொரு தேசிய இனத்தினதும் உள்ளியல்பான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சுதந்திரமான, இறைமைபொருந் திய, சமயச்சார்பற்ற, சமதர்மத் தமிழீழ அரசை மீட்டளித்தலும் மீள உருவாக்குதலும் இந்நாட்டில் தமிழ்த் தேசிய இனம் உளதாயிருத்தலைப் பாதுகாக்கும் பொருட்டுத் தவிர்க்க முடியாத



தாகியுள்ளதென இம்மாநாடு தீர்மானிக்கின்றது. இம்மாநாடு மேலும் பிரகடனப்படுத்துவதாவது:

(அ) தமிழ் ஈழ அரசு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களி லுள்ள மக்களைக் கொண்டதாக இருக்கவேண்டுமென்பதுடன் இலங்கையின் எந்தப்பகுதியிலும் வசிக்கின்ற தமிழ் பேசுகின்ற மக்களுக்கும் தமிழ் ஈழத்தின் பிரசாவுரிமையை விரும்பித் தெரிகின்ற உலகின் எப்பகுதியிலும் வசிக்கின்ற ஈழ வம்சா வழித் தமிழர்களுக்கும் முழுமையான, சமமான பிரசா வுரிமைகளை உறுதிப்படுத்தவும் வேண்டும். தமிழ் ஈழத்தின் ஏதேனும் சமயத்தைச் சேர்ந்த அல்லது ஆட்சிப்பிரதேசத்தைச் சேர்ந்த சமூகமொன்று வேறு ஏதேனும் பிரிவினரின் மேலாதிக் கத்திற்குட்படாதிருத்தலை உறுதிப்படுத்தும் பொருட்டு தமிழ் ஈழத்தின் அரசியலமைப்பு சனநாயகப் பன்முகப்படுத்தற் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும்.

(ஆ) தமிழ் ஈழ அரசில் சாதி ஒழிக்கப்படவேண்டுமென்பதுடன், பிறப்பின் அடிப்படையில் பின்பற்றப்படும் பெருங்கேடான பழக்க மான தீண்டாமை அல்லது ஏற்றத்தாழ்வு முற்றாக ஒழித்துக் கட்டப்படவும் எவ்வகையிலேனும் அதனைக் கடைப்பிடித்தல் சட்டத்தால் தண்டிக்கப்படவும் வேண்டும்.

(இ) தமிழ் ஈழம் அவ்வரசிலுள்ள மக்கள் சார்ந்திருக்கக்கூடிய எல்லாச்சமயங்களுக்கும் சமமான பாதுகாப்பும் உதவியும் வழங்குகின்ற சமயச்சார்பற்ற ஓர் அரசாக இருக்க வேண்டும்.

(ஈ) தமிழ் அரச மொழியாக இருக்க வேண்டும் எனினும் தமிழ் ஈழத்தில் சிங்களம் பேசுகின்ற சிறுபான்மைகள் அவர்களின் மொழியில் கல்வியையும் அலுவல்களையும் தொடர்வதற்கான உரிமைகள் சிங்கள அரசிலுள்ள தமிழ் பேசும் சிறுபான்மைகள் பாதுகாக்கப்படும் சரி எதிரிடையான அடிப்படையில் பாதுகாக்கப் பட வேண்டும்.

(உ) தமிழ் ஈழத்தில் மனிதனால் மனிதன் சுரண்டப்படுதல் தடை செய்யப்படும். உழைப்பின் மகத்துவம் பாதுகாக்கப்படும். சட்டத்தினால் அனுமதிக்கப்படும் எல்லைகளுக்குள் தனியார் துறையின் இருப்புக்கு அனுமதி வழங்கப்படுகின்ற அதே வேளையில், பண்டங்களின் உற்பத்தி மற்றும் விநியோகம் என்பன அரச உரிமையின் கீழ் அல்லது அரச கட்டுப்பாட்டுடன் மேற்கொள்ளப்படும். பொருளாதார அபிவிருத்தி சோசலிசத் திட்ட மொன்றின் அடிப்படையில் ஏற்படுத்தப்படும். ஒரு தனிநபரின் அல்லது குடும்பத்தின் செல்வம் தொடர்பில் உச்சவரம்பு விதிக்கப் படும். இவ்வகையில் தமிழ் ஈழம் ஒரு சமதர்ம அரசாக இருக்க வேண்டும்.

தமிழ் தேசிய இனத்தின் இறைமையையும் சுதந்திரத்தையும் வென்றெடுப்பதற்கான போராட்டத்திற்கான செயல்திட்ட மொன்றை மிதமிஞ்சிய தாமதமின்றி வகுத்தமைத்து அதனைத் தொடங்கவேண்டுமென தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி யின் செயற்குழுவை இம்மாநாடு பணிக்கின்றது.

மேலும் இம்மாநாடு, சுதந்திரத்திற்கான இப்புனிதப்போரில் தம்மை முழுமையாக அர்ப்பணிக்க முன்வரும்படியும் இறை மையுள்ள தமிழ் ஈழ அரசென்ற இலக்கு எட்டப்படும் வரை அஞ் சாது போரிடும் படியும் பொதுவில் தமிழ்த் தேசிய இனத்துக்கும் குறிப்பாக தமிழ் இளைஞர்களுக்கும் அறைகூவல் விடுக் கின்றது.

(இது 1976 மே 15ஆந் தேதியன்று திரு. செல்வநாயகம், கியுசி. பா.உ அவர்கள் தலைமையில் (வட்டுக்கோட்டைத் தொகுதி யிலுள்ள) பண்ணாகத்தில் நடைபெற்ற தமிழர் ஐக்கிய விடு தலை முன்னணியின் 1ஆவது தேசிய மாநாட்டில் ஏகமனதாகக் கைக்கொள்ளப்பட்ட தீர்மானம். 1977இல் இதனை முன்வைத் துத் தேர்தலுக்குச் சென்ற த.ஐ.வி.மு. தமிழ் வாக்காளர்களிட மிருந்து அமோகமான ஆணையைப் பெற்றது. இதுவே ஈழத் தமிழர் சனநாயக முறையில் நடத்தப்பட்ட ஒரு வாக்கெடுப்பில் சுதந்திரமாகத் தமது விருப்பை வெளிப்படுத்துக் கூடுமாயிருந்த இறுதித் தடவையாயிருந்தது.

# இமாலயப் பிரகடனம் யாருக்குச் சேவகம் செய்யும்?

26.12.2023



இமாலயப் பிரகடனத்தைச் செய்ததன் மூலம், உலகத் தமிழர் பேரவை புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் மத்தியில் பெரு மளவுக்குத் தனிமைப்படுத்தப்பட்டு விட்டது. அந்த அமைப்புடன் இணைந்து மகிந்தவைச் சந்தித்த கனேடியத் தமிழ்க் கொங் கிரஸின் சில உறுப்பினர்கள் கனடாவில் கடுமையாக விமர்சிக் கப்படுகின்றார்கள். தாயகத்தில் பெரும்பாலான கட்சிகள் அப்பிர கடனத்தை நிராகரித்துவிட்டன. குடிமக்கள் சமூகங்களும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் தமிழரசுக் கட்சி இதுவிடயத் தில் அதன் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை வெளிப்படுத் தவில்லை. பிரகடனம் சம்பந்தரிடம் கையளிக்கப்பட்ட போது அவர் “இந்த முன்னெடுப்பை நாம் பல ஆண்டுகளுக்கு முன்பே செய்திருக்க வேண்டும்” என்று கூறியுள்ளார். ஆனால் சிறி தரனைப் போன்ற சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனிப்பட்ட முறையில் அதற்கு எதிர்ப்புக் காட்டியிருக்கிறார்கள்.

அப்பிரகடனத்தின் பின்னணியில் சுமந்திரன் இருப்பதாக ஒரு குற்றச்சாட்டு உண்டு. பிரகடனமானது போர்க் குற்றச்சாட்டு களில் இருந்து இலங்கை அரசைக் காப்பாற்றும் உள்நோக்க முடையது என்று புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புக்கள் குற்றம் சாட்டுகின்றன. இலங்கை வரலாற்றில், மகா சங்கத்தோடு தமிழ்த்தரப்பு கையெழுத்திட்ட முதலாவது உடன்படிக்கை இது. ஆனால் அது நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் தமிழ் மக்களால் பெருமளவுக்கு நிராகரிக்கப்பட்டுள்ளது.

பிரகடனக் குழுவில் அங்கம் வகிப்பவர்கள் தரும் தகவல்களின படி, பிரகடனக்குழு நேபாளத்துக்குச் சென்றபோது அதற்கு வேண்டிய வசதிகளை சுவிற்சலாந்து செய்து கொடுத்திருக் கின்றது. அந்த நாட்டின் இலங்கைக்கான தூதரகத்தில் முன்பு அரசியல் செயலராக இருந்த ஒருவர் மேற்படி சந்திப்புக்குரிய ஏற்பாடுகளைச் செய்து கொடுத்திருக்கிறார். ஆயின், அந்தப் பிரகடனத்தின் பின்னணியில் ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட மேற்கு நாடுகளின் உள்நோக்கங்கள் இருப்பதாக எடுத்துக் கொள்ளலாமா?



அவ்வாறு ஒரு பிரகடனத்தை உருவாக்குவதால் மேற்கு நாடுக ளுக்கு என்ன நன்மை? பிரகடனமானது ரணில் விக்கிரமசிங்க இப்பொழுது முன்னெடுத்து வரும் உண்மை மட்டும் நல் லினக்க ஆணைக்குழுவுக்கு மேலும் பலம் சேர்க்கும். அதாவது அவர் பொறுப்புக்கூறும் விடயத்தில் முன்னேறுவது போன்ற ஒரு தோற்றத்தை அது கட்டியெழுப்ப உதவும். அதன்மூலம் பன் னாட்டு நாணய நிதியத்தின் உதவிகளைப் பெறும் வழிகளை இலகுவாக்கும்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டால் அது ஒப்பீட்டளவில் தமக்கு அனுகூலமானது என்று மேற்கு நாடுகள் சிந்திக்கின்றன. எனவே தேர்தலை நோக்கி ரணில் விக்கிரமசிங்கவை பலப்படுத்த வேண்டிய தேவை அவர்களுக்கு உண்டு. போர்க்குற்றங்களுக்கு எதிரான பரிகார நீதியை அழுத்தமாக கேட்பது புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள்தான். இந்த விடயத்தில் கனடாவில் உள்ள புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகம் ஒப்பீட்டளவில் குறிப்பிடத்தக்க அள வுக்கு முன்னேறியிருக்கின்றது. எனவே புலம்பெயர்ந்த தமிழ் அமைப்பு ஒன்றை மகா சங்கத்துடன் உடன்பாட்டுக்கு வர வைப்பதன் மூலம் சிங்கள பௌத்தர்களின் பயங்களைக் குறைக்கலாம் என்று மேற்கு நாடுகள் சிந்திக்கின்றனவா?

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் யூலி சுங் “சமூகங்க ளுக்கு இடையேயான புரிதலை விசாலமாக்குவதற்கும், நீடித்த நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கான இந்த முயற்சியை நாங்கள் பாராட்டி வரவேற்கிறோம்” என்று தனது ருவீற்றறில் எழுதியுள்ளார். இலங்கை மற்றும் மாலைதீவுக்கான சுவிஸ்



தூதுவர் சிறி வோல்ட் பிரகடனக் குழுவைச் சந்தித்தபின், “இந்தச் சந்திப்பும், ஐக்கியத்திற்கான தொலைநோக்குப் பார்வையைக் கொண்ட பன்மைத்துவமும் அமைதியும் கொண்ட இலங் கையை உருவாக்கும் முன்னெடுப்பிலான இமாலயப் பிர கடனத்தை ஆதரிப்பதும் எமக்குப் பெருமை தருவதாகும். நல்லிணக்கத்தை நோக்கிய பாதையில் இது ஒரு குறிப்பிடத்தக்க படியாகும்.” என ருவீற் செய்துள்ளார்.

பொதுவாக மேற்கு நாடுகளில் நல்லிணக்க முயற்சிகளை மகா சங்கம் முழுமனதாக ஆதரித்தது கிடையாது. ஆனால் இமாலய பிரகடனத்தை மகா சங்கம் எடுத்த எடுப்பில் எதிர்க்காததற்குக் காரணம் என்ன? இலங்கையில் மகா சங்கம் எனப்படுவது இலங்கை அரசுக் கட்டமைப்பின் ஒரு பகுதி. அது ஒரு மத நிறுவனம் என்பதை விடவும் அரசியல் நிறுவனம் என்பதே அதிகம் பொருத்தமானது. பல நூற்றாண்டு காலமாக அரசியல் செய்த ஒரு நிறுவனம். அதற்கு வேண்டிய பாரம்பரியமும் அனு பவமும் அவர்களுக்கு உண்டு. அந்த அடிப்படையில் சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பை பாதுகாப்பதற்கு அவர்களுக்கு இது போன்ற பிரகடனங்கள் தேவை.

பிரகடனக் குழு மல்வத்த பீடத்தை சந்தித்த பொழுது எதிர்பார்த் ததற்கு மாறாக மகாநாயக்கர் அதிகம் சினேகபூர்வமாகப் பழகிய தாக பிரகடனக் குழுவினர் தெரிவிக்கின்றார்கள். பொதுவாக விருந்தாளிகள் வரும் பொழுது மகாநாயக்கர்கள் தமது உதவி யாளர்களை பிரித் ஓதுமாறு பணிப் பதுண்டு. ஆனால் பிரகடனக் குழுவுக் காக அவரே பிரித் ஓதியிருக்கிறார். “கடந்த காலங்களில் கட்சிகளுக்கிடை யில் உருவாக்கப்பட்ட பல்வேறு உடன் படிக்கைகள் இல்லாமல் போவதற்கு வீதிக்கு இறங்கிய பௌத்த பிக்குகள் தான் காரணமென்று தமிழ் பிரதி நிதிகள் கூறியது உண்மைதான்... இன வாதத்தையும் வெறுப்பையும் போதிக் கும் இந்தப் பிக்குகளில் ஒரு சிறு பான்மையினர் உரத்த குரலில் இவற் றைப் பேசி வெற்றி பெற்றனர். ஏனென் றால் சமாதானத் தையும் சமத்துவத் தையும் விரும்பும் நம்மில் பெரும் பான்மை யானவர்கள் அந்தச் சந்தர்ப் பங்களில் போதுமான அளவு உரத்த குரலில் பேசவில்லை. எதிர்காலத்தில் நாம் அதைச் செய்ய வேண்டும்” என்றும் மகாநாயக்கர் கூறியுள்ளார்.

பௌத்த மகா சங்கங்கள் இதுவரை வெளியிட்ட அறிக்கைகள் மற்றும் கருத்துக்களின்படி அவர்கள் இமாலய பிரகடனத்தை எதிர்க்கவில்லை என்பது ஒரு தொகுக்கப்பட்ட அவதானிப்பு. பௌத்த மகா சங்கம் எதிர்க்கவில்லை என்றால், அது சிங்கள பௌத்த கட்சிகளின் முடிவுகளில் பெருமளவு தாக்கத்தைச் செலுத்தும். அதே சமயம் இப்பிரகடனம் ரணிலைப் பிணை யெடுக்கக்கூடியது என்பது எதிர்க்கட்சிகளுக்கு உவப்பானது அல்ல. எனினும் மகா சங்கத்தைப் பொறுத்தவரை அது கட்சி கடந்து சிங்கள பௌத்த அரசு கட்டமைப்பை எப்படி பாதுகாப்பது என்றுதான் சிந்திக்கும்.

ஒருபுறம் நாட்டின் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட் டைக் காப்பாற்றும் தகமை ரணிலுக்கே இருப்பதாக மகா சங்கம் கருதுகின்றது. எனவே ரணிலைப் பலப்படுத்த இப்பிரகடனம் உதவும். இன்னொருபுறம், அவர்களுடைய போர்வெற்றி நாய கர்களான ராஜபக்சக்களையும் படைப் பிரதானிகளையும் பாது காக்க வேண்டும். ஏற்கனவே கனடா மூத்த இரண்டு ராஜபக்சக் களுக்கும் படைப்பிரதானிகளுக்கும் எதிராகத் தடைகளை விதித்திருக்கிறது. அமெரிக்காவிலும் நிலைமை இறுக்கமாக இருக்கிறது. சில ஐரோப்பிய நாடுகள் முன்னாள் படைத் தள பதிகளுக்கு விசா வழங்குவதில்லை. கடைசியாக நடந்த ஐநா கூட்டத்தொடரில் ஐநா மனித உரிமைகள் பேரவையின் உதவி ஆணையாளர் மேலும் 10 படைத் தளபதிகளைக் குறித்துப் பிரஸ்தாபித்திருந்தார். எனவே சிங்களபௌத்த அரசுக் கட்ட மைப்பின் ஒரு பகுதியாகிய படைக்க கட்டமைப்பைப் பாதுகாக்க வேண்டிய தேவை அதே அரசு கட்டமைப்பின் மற்றொரு பகுதி யான பௌத்த மகா சங்கத்துக்கு உண்டு. அந்த அடிப்படையில் இது போன்ற பிரகடனங்களின் மூலம் மேற்கு நாடுகளைத் திருப்திப்படுத்தி, நல்லிணக்க முயற்சிகளைத் தமக்கு பாதுகாப் பான எல்லைக்குள் இருந்தபடி, ஊக்குவித்து, தமது படைக் கட்டமைப்பைப் பாதுகாக்க மகா சங்கம் முயற்சி செய்கின்றது என்று எடுத்துக் கொள்ளலாமா?

மேற்கண்டவற்றைத் தொகுத்துப் பார்த்தால், தெளிவாகத் தெரி வது என்னவென்றால், ரணில் விக்கிரமசிங்கவைப் பாதுகாக்க வேண்டிய தேவை மேற்கு நாடுகளுக்கு உண்டு; பன்னாட்டு நாணய நிதியத்துக்கு உண்டு; பௌத்த மகா சங்கத்துக்கு உண்டு; ராஜபக்சங்களுக்கு உண்டு. எனவே, மேற்கண்ட எல்லாருடைய நலன்களையும் ஒரு பொதுப்புள்ளியில் இணைப் பதற்கு இமாலயப் பிரகடனம் உதவுமா?

அதேசமயம், உள்ளூரில் உலகத் தமிழர் பேரவைக்கு வேறு ஒரு உள்நோக்கம் இருக்க முடியும் என்று யாழ்ப்பாணத்தில் ஊடக வட்டாரங்களில் ஊகங்கள் உண்டு. சுமந்திரனுக்கும் ரணிலுக்கும் இடையே இப்பொழுது இடைவெளி அதிகம். சுமந் திரனுக்கு நெருக்கமான சாணக்கியன் ரணிலின் மீது அளவுக்கு மிஞ்சி வாய்வைத்துவிட்டார். அதனால் இடைவெளி மேலும்



அதிகரித்திருக்கின்றது. ஆனால் அடுத்த ஜனாதிபதியாக ரணில் வருமிடத்து, அப்படி ஒரு இடைவெளியை வைத்திருப்பது மேற்கு நாடுகளின் நிகழ்ச்சி நிரலுக்குப் பாதுகாப்பாக இருக்காது. என வே சுமந்திரனை ரணிலை நோக்கிக் கொண்டு செல்லும் நோக் கத்தோடு இப்படி ஒரு பிரகடனம் உருவாக்கப்பட்டதா? என்பது அந்த ஊகம். இந்தப் பிரகடனம் அதன் இறுதி அர்த்தத்தில் ரணிலைப் பிணையெடுக்கும். அவ்வாறு சுமந்திரனுக்கு நெருக் கமான அமைப்பொன்று ரணிலைப் பிணையெடுத்து, அவ ருடைய நன்மதிப்பை வென்று, அதன்மூலம் சுமந்திரனுக்கும் ரணிலுக்கும் இடையிலான இடைவெளியை குறைக்கலாம் என்று ஒரு விளக்கம் கூறப்படுகின்றது.

இருக்கலாம். மேற்படி பிரகடனம் ரணிலைப் பிணையெடுப் பதற்கு உதவும் என்பது வெளிப்படையானது. அது மேற்கு நாடுகளின் நல்லிணக்க நிகழ்ச்சி நிரலை சிங்கள பௌத்த நோக்கு நிலையிலிருந்து முன்னெடுப்பதற்கும் உதவலாம். போர்க் குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்களைப் பாதுகாப்பதற்கு உதவலாம். சில சமயம் சுமந்திரனுக்கு ரணிலுக்குமிடையில் இடைவெளியைக் குறைக்க உதவலாம். ஆனால், தமிழ் மக்கள் தமது அரசியல் இலக்குகளை வென்றெடுப்பதற்கு அது உதவப் போவதில்லை.

நன்றி: நிலாந்தன்


JATHU RENOVATION
Free!
ESTIMATES
உங்கள் இல்லத்தை புதுப்பிக்க
அழையுங்கள்
★ Basement ★Carpet★Flooring
★Hardware★Kitchen Cabinets
★Painting★Tiles★ Stairs
★Moulding★Window★Garage Door
★Spotlight★ Plumping★Electrical
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com


அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சினை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203


The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com


Call today to Save energy
Broken Glass...?
We will fix it within 24 hour.
Free
Estimate!
Call today
$50 OFF
Let us help with...
Replacement (Door & Windows)
Custom Door & Windows
Front Door & Patio Door
Garden Door
Door & Windows Re-Caulking (Important)
Painting Doors & Windows
Basement Separate Entrance Door
Home Painting
Spotlights installation
California Shutters
PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com

# தொல்லியல் சுவடுகள்...



# தமிழரின் தொன்மை

சிறு கண்ணோட்டம்– யோ.சே. யோகி

உலகின் தொன்மையான மொழிகளுள் தமிழும் ஒன்று என்பதில் யாருக்கும் ஐயமில்லை. ஆனால் அது எவ்வளவு தொன்மையானது என்பதில் பல சர்ச்சைகள் உண்டு. அண்மைக் காலம் வரை சமற்கிருத மொழிக்குத் தந்த முக்கியம் தமிழுக்குத் தரப்படவில்லை. தமிழருக்கோ அவர் தம் மொழியின் தொன்மை குறித்து போதிய அறிவுமில்லை. மொழிமீது பற்றுமில்லை.

மொழி ஓர் ஊடகமே என கூறியோர் பலர் இன்று குறிப்பாக சில நாடுகள் அதனது மொழியைக் காக்க எடுக்கும் முயற்சிகள் கண்டு ஆச்சரியப்படவும் கூடும்.

உலகிலுள்ள மொழிகளுக்கெல்லாம் மூலமாக இருந்தது பழத் தமிழே என்று பல தமிழறிஞர்களும் மேற்குலக அறிஞர்களும் கூறி இருக்கின்றனர். மேலும் முதல் மாந்தனின் பிறந்தகம் குமரிக் கண்டமென்றும் அங்கிருந்து தான் மனிதர்கள் உலகம் முழுதும் பரந்தார்கள் என்றும் நீண்ட காலமாக தமிழறிஞர்கள் சிலர் கூறி வந்துள்ளனர். இக் கூற்றுக்கான எள்ளி நகையாடியோர்களில் பல தமிழறிஞர்களும் உண்டு.

இன்று மாந்தனின் பிறந்தகமாக ஆபிரிக்காவை அறிவியல் அடையாளம் காண்கிறது. அங்கிருந்தே மனிதர்கள் உலகம் முழுவதும் பரந்தார்கள் என்ற முடிவுக்கும் அது வருகின்றது. ஆபிரிக்காவுக்கு அப்பால் ஆய்வு நகர முடியவில்லை. அது நகரவேண்டுமாயின் குமரிக் கண்டத்தை ஆயவேண்டும். அது கடலுள்ள மூழ்கியதால் அதனை இப்போது ஆய முடியாது உள்ளது. தமிழர்கள் காலம் காலமாகக் கூறிவந்த தொன்மக் கதையில் பெரும் பகுதி இன்று உண்மையென்று ஆகி விட்ட நிலையைக் காண்கிறோம். இன்றும் சில புதிர்கள் தீர்க்கப்பட வேண்டும். தீர்க்கப்படுமா? காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

திராவிட மொழிகளுக்கு மூல மொழி பழந்தமிழே என்பது பலர் கருத்து. இன்று 23 இற்கும் மேற்பட்ட திராவிட மொழிகள் உள்ளன. பல அழியும் நிலையிலுள்ளன. அழிந்தவை பலவாகும். கனியாகுமாரி முதல் விந்திய மலைவரை இடைவிடாது வாழும் மக்களின் மொழியாகவும் வங்கத்தின் ஓரத்திலும் நேபாள எல்லையிலும் பாகிசுத்தானின் பகுதியாகிய பலுசிசுதானத்திலும் திராவிட மொழி பேசப்படுகின்றது. தமிழ், மலையாளம், கன்னடம், குடகு, துளு, தோடா, கோத்தா, கொராகா, (தென் திராவிட மொழிகள்) தெலுங்கு, கோண்டி, கோயா, கூயி, கூவி, கோலாமி, பர்யி, கதபா, கொண்டா, நாயக்கி, பெங்கோ, மண்டா (நடுத் திராவிட மொழிகள்) குருக், மாலதோ, பிராகூய் (வட திராவிட மொழிகள்) என்பன பொதுவாக அடையாளம் காணப்பட்ட திராவிட மொழிகளாகும்.



கிளிநொச்சி அக்கராயன் அணைக்கட்டு வீதியில் ஆற்றின் கரையோரத்தில் எடுக்கப்பட்ட மட்கலங்கள்

> **"இன்று மாந்தனின் பிறந்தகமாக ஆபிரிக்காவை அறிவியல் அடையாளம் காண்கிறது. அங்கிருந்தே மனிதர்கள் உலகம் முழுவதும் பரந்தார்கள் என்ற முடிவுக்கும் அது வருகின்றது. ஆபிரிக்காவுக்கு அப்பால் ஆய்வு நகர முடியவில்லை. அது நகரவேண்டுமாயின் குமரிக் கண்டத்தை ஆயவேண்டும். அது கடலுள்ள மூழ்கியதால் அதனை இப்போது ஆய முடியாது உள்ளது. தமிழர்கள் காலம் காலமாகக் கூறிவந்த தொன்மக்கதையில் பெரும் பகுதி இன்று உண்மையென்று ஆகி விட்ட நிலையைக் காண்கிறோம். இன்றும் சில புதிர்கள் தீர்க்கப்பட வேண்டும். தீர்க்கப்படுமா? காலம் தான் பதில் சொல்ல வேண்டும்."**



கிளிநொச்சி ஆனைவிழுந்தானில் அகழ்வு செய்யப்பட்டு எடுக்கப்பட்ட 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்கால மண் உருவச்சிற்பங்கள்

ஞானப்பிரகாச அடிகளும் தேவநேயப் பாவணரும் தமிழ்ச்சொல் அ, இ, உ என்னும் சுட்டில் முளையாகி அல் - இல் - உல் என வளர்ந்து மேலும் குல் - கல் - நுல் - புல் - முல் எனக் கிளைத்துருவாகின எனக் கூறினர்.

மாந்தன் பேசத்தொடங்கிய போது, பிறந்த மொழி தமிழ் என்பதைப் பாவாணர் பல எடுத்துக்காட்டுகளோடு விளக்கியுள்ளார்.

வாயை விரிவாயங்காத்தலால் சேய்மையையும் (ஆ) பக்க வரியாய் கீழ்மேல் ஒடுங்கி யங்காத்தலால் (ஈ) அண்மையையும் இடைநிகர்த்தாய் குவித்தங்காத்தாலால் (ஊ) இடைமையையும் பக்கவாரியாயொடுக்கி கீழ்மேல் நீட்டியங்காத்தலால் (ஓ) உயரத்தையும் முதற்றமிழர் குறித்த தொலித்ததால் முறையே ஆ, ஈ, ஊ, ஓ என்னும் ஒலிகள் பிறந்தன. அந்த, இந்த, உந்த, ஓங்கு என்பன மேற்கூறிய அவரின் கூற்றுக்களுக்கு எடுத்துக் காட்டுக்களாகும். ஆ, ஈ, ஊ என்னும் முச்சொட்டுக்களிலிருந்தே இழைத்தல் மொழி பெரும்பாலும் உருவாயிற்று.

மேற்கூறிய பாவாணாரின் கருத்துக்கள் இன்று பல அறிஞர்களால் ஏற்கப்பட்டுள்ளன. உலக மொழிகளுக்கெல்லாம் முதன் மொழியாக ஒரு மொழி இருந்திருக்கவேண்டும் என்றும் பல

| | | | | |
|---|---|---|---|---|
| எல் | எல்பு | எம்பு | எம்புதல் | மேலெழுதல் |
| எல் | எல்கு | எக்கு | எக்குதல் | வயிற்றை மேலே உயர்த்தல் |
| எல் | எல்கு | எக்கு | எக்கர் | நீர் நிலைகளில் உயர்ந்திருக்கும் மணல் திட்டு |



**கிளிநொச்சி ஆனைவிழுந்தானில் அகழ்வு செய்யப்பட்டு எடுக்கப்பட்ட 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்கால மண் உருவச்சிற்பங்கள்**

அறிஞர்கள் கருதுகின்றனர்.

இன்றைக்குப் 10,000 ஆண்டுகளுக்கு முன்பு உலகெங்கும் (பனியூழி முடிவில்) கடல் மட்டம் உயர்ந்த போது இன்று நிலப் பகுதியை ஒட்டியுள்ள கண்டத்திட்டுக்கள் (கடலிலிருந்து சில நூறு கல் தொலைவு செல்பவை) கடலுள் மூழ்கின. இந்தப் பகுதியிலேயே பண்டைய நாகரிகங்கள் தோன்றின என்பார் சோவியத் அறிஞர் அலெக்சாந்தர் காந்திரதா. தமிழர்களால் குமரிக்கண்டம் எனக் கூறப்படுவது இந்த நீண்ட நிலப்பரப்பே.

தமிழ் நாட்டில் மயிலாடு துறையில் 2006 பிப்ரவரியில் கண்டெடுக்கப்பட்ட புதுக்கற்காலக் கருவி ஒன்றில் சிந்துவெளி எழுத்துக்கள் நான்கு உள்ளன. அவற்றை ஐ. மகாதேவன் அவர்கள் “முருகு அன்” (முருகன்) எனப் படித்துள்ளார். புதுக் கற்காலத் தமிழ் மக்களும் சிந்துவெறி மக்களும் ஒரே மொழி யைப் பேசினர் என்பதை இந்தக் கண்டுபிடிப்பு எடுத்துக் காட் டுகின்றது. என மகாதேவன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

**"தமிழில் எழுத்துக்கள் எப்போது தோன்றின என்ற சர்ச்சை இப்போதும் தொடர்கின்றது. வடக்கிலிருந்தே (வடபிராமி) எழுத்துக்கள் தெற்கே வந்தன (தென்பிராமி) என்று அண்மைக் காலம் வரை கருதப்பட்டது. ஆனால் அண்மைக்காலக் கண்டு பிடிப்புக்களும் ஆய்வுகளும் எழுந்து தெற்கேயிருந்தே வடக்கு நோக்கிச் சென்றுள்ளது என்பதை உறுதி செய்கின்றன."**



கடந்த 700,000 ஆண்டுகளில் 17 தடவைகள் கடல் மட்டம் தாழ்ந்து இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே தரைவழித் தொடர்பை ஏற்படுத்தியிருந்தது. இறுதிப் பிரிப்பு 7,000 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்டிருக்க வேண்டும் என்பார் இலங்கையின் முன்னாள் தொல்பொருள் ஆய்வாளர் திணைக்களத்தின் தலைவர் தெரியியகல அவர்கள். அவர் மேலும் இரணமடுப் படிவங்கள் குறித்த ஆய்வுகள் இங்கு கற்காலத்தை 250,000 ஆண்டுகள் பழைமையான தாக்கும் என்றும் ஆதிவாசிகளான வேடர்களில் மேற்கொள்ளப்பட்ட மரபியல் சார் ஆய்வுகள் புதும மனிதர்கள் தென்னாசியா, தென்கிழக்காசியா, ஒரு வெளை தென் சீனாவிலிருந்தே திரிவாக்கம் அடைந்தனர் என்ற முடிவுக்கு வரச் செய்கின்றன. ஆபிரிக்காவிலிருந்தே புதும மனிதன் திரிவாக்கடைந்தான் என்ற முடிவுக்கு இந்த முடிவுகள் அறை கூவலிடுகின்றன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேற்கூறிய ஆய்வுகள் எல்லாம் ஒரு விடயத்தையே மறைமுகமாகச் கூட்டுகின்றன. அதாவது எம் தாய் மொழியின் தொன்மையைச் சுட்டுகின்றன.

தமிழில் எழுத்துக்கள் எப்போது தோன்றின என்ற சார்ச்சை இப்போதும் தொடர்கின்றது. வடக்கிலிருந்தே (வடபிராமி) எழுத்துக்கள் தெற்கே வந்தன (தென்பிராமி) என்று அண்மைக் காலம் வரை கருதப்பட்டது. ஆனால் அண்மைக்காலக் கண்டு பிடிப்புக்களும் ஆய்வுகளும் எழுந்து தெற்கேயிருந்தே வடக்கு நோக்கிச் சென்றுள்ளது என்பதை உறுதி செய்கின்றன.

தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள் தொகுதி - 03 பகுதி - 02 இல் பிராமி எழுத்தானது திராவிட மொழிகளுக்காகவே உருவாக்கப்பட்டது என்றும், குறிப்பாக அவற்றுள் பழமையானதான தமிழுக்காகவே அது தோற்றுவிக்கப்பட்டதென்றும் பின்னாளில் பிராகிருத மொழி அதனைப் பயன்படுத்திக் கொண்டது என்றும் நாளடைவில் இந்தியா முழுவதும் அதுவே வழக்கத்தில் நிலவி யது என்றும் திரு.டி.என் சுப்பிரமணியம் குறிப்பிட்டுள்ளதை மொழி அறிஞர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

முற்காலத் திராவிட மொழியே வட நாட்டுப் பிராகிருத மொழி. ஆரியரின் முன்னோர் மொழியும் பிராகிருதமும் இணைந்ததே வேதமொழி. வேத மொழியும் தமிழும் இணைந்ததே சமற் கிருத மொழி எனப் பாவாணர் குறிப்பிட்டுள்ளமை கவனத்திற் குரிய ஒரு கூற்றாகும்.

இந்திய இலக்கியங்களுள் தொன்மை மிக்கது சங்க இலக்கியமே. சங்க இலக்கிய காலம் குறித்தும் சார்சைகள் இல்லாம லில்லை. அதன் காலத்தை கி.மு 500 - கி.பி. 200 வரை என்பர். சங்கம் மருவிய காலம் அல்லது நீதி நூல் காலம் கி.பி. 100 - கி.பி. 500 வரை என்பர்.

சங்க இலக்கியங்களை எட்டுத்தொகை, பத்துப் பாட்டு எனத் தொகுத்துள்ளார்கள். அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, நற்றிணை, ஐங்குறு நூறு, பதிற்றுப் பத்து, கலித் தொகை, பரிபாடல் ஆகிய நூல்களை எட்டுத் தொகையென்பர். பொரு நராற்றுப் படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப் படை, முல்லைப் பாட்டு, மதுரைக் காஞ்சி, நெடு நல் வாடை, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம், திருமுரு காற்றுப்படை ஆகிய நூல்களைப் பத்துப்பாட்டென்பர்.

மன்னன் இளம் பெருவழுதி இந்த உலகம் மெய். அது மாயையல்ல. அமிர்தம் எனினும் தனித்து உண்ணாமல் பிறர்க்குத் தந்து, புகழ் எனில் உயிரைத் தந்து பழி எனில் இந்த உலகே பரிசாகக் கிடைத்தாலும் அதைச் செய்ய மறுத்து ஆசை அற்று, பிறர்க்கு உழைக்கும் மனிதர்கள் இருக்கின்றார்கள் அவர்களால் இந்த உலகம் வாழ்கிறது எனக் கருத்துப்பட எழுதிய சங்க இலக்கியப் படைலை தனிநாயகம் அடிகளார் ஓர் ஒப்பற்ற பாடலாக குறிப்பிட்டுள்ளார்.

*உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்*
*அமிழ்தம் இயைவதாயினும் இனிதெனக்*
*தமியர் உண்டலும் இலரே முனிவிலர்*
*துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்*
*புகழ் எனின் உயிரும் கொடுக்குவர் பழி*
*எனின்*
*உலகுடன் பெறினும் கொள்ளலார் அயர்விலர்*
*அன்ன மாட்சி அனையராகித் தமக்கென*
*முயலா நோன்றாள்*
*பிறர்க்கென முயலுநர் உண்மையானே.*

தமிழர் பண்பாட்டின் களஞ்சியங்கள் என தொல்காப்பியப் பொருளதிகாரம் குறுந்தொகை, புறநாநூறு, திருக்குறள், சிலப்பதிகாரத்தை அடிகளார் குறிப்பிடுவார். அதேபோல் உலக நீதி இலக்கியங்களைச் சிறப்பாக ஆராய்ந்து பெரும் நூல்களை இயற்றிய அல்பேட் சுவைட்சர் "திருக்குறளைப் போல உயர்ந்த கோட்பாடுகளைக் கொண்ட ஒரு நூலை இவ்வுலகில் காண்பது அரிது" என்று குறிப்பிடுள்ளதையும் இங்கே சுட்டிக்காட்டல் பொருந்தமுடையதாகும்.

இந்தக் கட்டுலையில் தமிழின் தொன்மை குறித்து ஓரளவு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தமிழின் வேர் உலகெங்கும் எவ்வாறு பரந்துள்ளது என்பதற்கு திரு. அரசேந்திரன் எடுத்துக்காட்டியுள்ள ஒரு சிறு விளக்கத்தோடு இக்கட்டுரையை முடிவுக்குக் கொண்டு வருதல் பொருத்தமானதாகும்.

கதிரவன் தமிழில் "எல்" என அழைக்கப்படுவதுண்டு "எல்" என்பதற்கு உயர்தல், மேலெழுதல் என்பதே மூலப் பொருள்.

கதிரவன் காலையில் கீழ்த்திசைக் கடலில் தோன்றி மேலெழுந்து உயர்ந்து வரும் தோற்றத்தைத் தருவதால் பழந்தமிழர் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னர் அதனை "எல்" என அழைத்தனர்.

எல் - எலு - எளு - எழு என எழுதல் சொல் தமிழில் பிறந்தது. இந்த "எல்" எனும் எழுதற்பொருள் வேர் இலத்தீன் மொழியில் "elevo" என உயர்தல் மேலேழுதல் பொருளில் பதிவாகியுளள்து. "Israel" எனப்தில் உள்ள "el" என்பதற்கு கதிரவன் என்பதே பொருள். பாபிலோனுக்கு ஈபுரு மொழி வடிவம் "babel" என்பது "bab" என்பதற்கு நுழைவாயில் என்றும் "el" என என்பதற்குக் கடவுள் என்றும் பொருள் உரைக்கின்றனர். பாபிலோனின் நுழைவாயிலில் ஞாயிற்றுக் கடவுளுக்கு உயரமான கோயில் எழுப்பியிருந்தார்கள். கிரேக்க ஞாயிற்றுக் கடவுளுக்க "Apollo" என்பது பெயர். "ello" என்பதற்கு ஒளியுடையது என்பது பொருள். மேற்காட்டிய "எல்" என்ற சொல்லுக்குத் தமிழில் தான் வேர் உண்டு. இவ்வாறு உலகம் பரவிய தமிழின் வேர் குறித்து அண்மைக்காலத்தில் ஓரளவு விரிவாக ஆராயப் படுகின்றன. அண்மைக் காலத்தில் இவ்வகை ஆய்வில் திரு. அரசேந்திரனின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

உலகின் மொழிகளுக்கெல்லாம் தாய்மொழி தமிழே. இன்று கணினி உலகில் கணினி மொழிக்கும் ஏற்ற மொழியாக இருப்பதும் தமிழே. இயல்பாகப் பிறந்த மொழிக்கு உரிமையாளர்களாகிய நாம் அதன் தொன்மையை, பெருமையை, புதுமையை அறிந்து போற்றுவோம் எமக்கான தாயகமொன்றை அமைக்க ஒன்று பட்டு நிற்போம்.

**கருவிநூல்கள்:**


தமிழறிவோம் - முனைவர். கு. அரசேந்திரன்

தமிழ் இலக்கிய வரலாறு - மு. வரதராசன்

தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் - உலகத் தமிழராய்ச்சி நிறுவனம்

முதற்றாய்மொழி - ஞா. தேவநேயப் பாவாணர்

ஒப்பியன் மொழிநூல் - ஞா. தேவநேயப் பாவாணர்

சங்க கால நடுகற்கள் கண்டுபிடிப்பு - கா. ராசான்

தமிழ் நாகரிகமும், சிந்துவெளி நாகரிகமும; அலெக்சாந்தர் காந்திரதாவ், தமிழாக்கம் பி. இராமநாதன்.

A Bridge to SriLanka - Vesak Com Memoration Lecture 2004, by Dr. R. U Deraniyagala - Front Line 18.06.2004


நன்றி: எரிமலை ஏப்ரல் 2008


**விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது.**

**இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.**

**விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு தொடர்புகளுக்கு**

**437.345.4203**

# இமாலயப் பிரகடனம் அல்ல! இமாலயப் பிரட்டுருட்டு! ஈழத்தமிழர் தேசிய அடிப்படைகளுக்கு எதிரான அரசியல் இரண்டகம்!

ஈழத்தமிழர் சுயாட்சிக்கழக கட்சியின் செயலாளர் நாயகம் ஆனந்தி சசிதரன்

18.12.2023

**இமாலயப் பிரகடனம் தொடர்பாக வடக்கு மாகாண சபையின் முன்னாள் மகளிர் விவகார அமைச்சரும் ஈழத்தமிழர் சுயாட்சிக் கழக கட்சியின் செயலாளர் நாயகமுமான அனந்தி சசிதரன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கை**



இமாலயப் பிரகடனம் என்பது ஈழத்தமிழர்கள் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையை வலியுறுத்தவில்லை, ஒத்துக் கொள்ளவில்லை.

வரலாற்று ரீதியான தனித்துவமான இறைமைக்கு ஈழத் தமிழர்கள் உரித்துடையவர்கள் என்பதை அது உரைக்கவில்லை, உதறிவிட்டுள்ளது.

சனநாயக ரீதியில் சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்தி ஈழத்தமிழர்கள் மட்டுமல்ல பெரும்பான்மையான தமிழ் பேசும் மக்கள் தந்தை செல்வாவின் தலைமையில் மேற்கொண்ட வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அற வலிமையை அழித்துவிடலாம் என்ற கற்பனையில் உலகில் உயரமான மலையில் இருந்து கனவு காண வைக்கப்பட்டிருக்கிறார்கள் வெள்ளையும் காவியும் தரித்தவர்கள் சிலர்.

இந்த வெண்ணிற ஆடைக் காரருக்கும் காவித் தரப்பினருக்கும் சில செய்திகளை சர்வதேச நீதிக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்துவரும் நான் இங்கே தெளிவாக முன்வைக்க விரும்புகிறேன்.

முதலில் தென்னிலங்கை பௌத்த மதபீடங்களுக்கு நான் சொல்ல விரும்பும் செய்தி. ஈழத்தமிழர்கள் நல்லிணக்கத்தை எப்போதும் விரும்பியவர்கள். ஈழத்தமிழர்களின் நல்லிணக்கத்தை சீரழித்து இன அழிப்புச் சிந்தனைக்கு வழிகோலிய மகாவம்ச மனநிலையை நீங்கள் மாற்றினால் ஒழிய உண்மையான நல்லிணக்கம் ஏற்படாது. உண்மையான நல்லிணக்கம் தான் உங்கள் நோக்கம் என்றால் அதை ஆரம்பிக்கவேண்டிய புள்ளிகள் எவை என்று எனது பார்வையில் உங்களுக்கு இரண்டு விடயங்களைச் சொல்லுவேன்.

உங்களுக்கு பௌத்த தந்த தாதுவைப் பேணும் தலதா மாளிகை எவ்வளவு புனிதமானதோ அதைப்போல உண்மையான வித்துடல்களை விதைத்த எமது மாவீரர் துயிலும் இல்லங்கள் எமக்குப் புனிதமானவை. அவற்றைத் துவம்சம் செய்த சிங்கள இராணுவத்தின் மன்னிக்கமுடியாத குற்றத்தை முதலில் போக்குங்கள். எமது மாவீரர்களை அவர்களது பதவி நிலைகள் பொறித்த நடுகற்களோடு மீண்டும் துயிலும் இல்லங்களை உடைக்கப்பட்ட கற்களைப் பொறுக்கி எடுத்து முதலில் கட்டுங்கள். அது தான் நீங்கள் நல்லிணக்கத்தை ஆரம்பிக்கவேண்டிய புள்ளி. மகாவம்ச எடுத்துரைப்பில் கூட தமிழ் அரசனான எல்லாளனை போர்முனையில் இடறிக் கொன்ற துட்டகெமுனு பின்னர் தமிழ் மன்னனை வணங்கச் செய்த நல்லிணக்க வரலாறு இருக்கிறது. அதைக் கூட மீண்டும் செய்ய இயலாதவர்கள் நீங்கள். வடக்கு கிழக்கில் வரலாற்று ரீதியான தமிழ்ப் பௌத்த வரலாற்றையும் நிராகரித்து, தேரவாத சிங்கள பௌத்த வரலாற்று அடையாளங்களாக அவற்றை மாற்றும் நாகரிக இன அழிப்புச் செயற்பாடுகள் இன்றும் தொடருகின்றன. இவற்றை நிறுத்தி, எமது வரலாற்றை நாமே பேணும் சமத்துவத்தை உருவாக்குங்கள். இதுதான் உங்களது நல்லிணக்கத்துக்கான ஆரம்பப் புள்ளி.

வெண்ணிற ஆடை அணிந்த சில புலம் பெயர்க் கறுப்பு ஆடுகளோடு கைகோர்த்து எங்களுக்கு நல்லிணக்கப் பாடம் நடத்த நீங்கள் முயல்வது புனிதமற்ற செயற்பாடு.

வெண்ணிற ஆடை அணிந்து மத குருக்களோடும் கோர்ட் சூட்டில் அரசியல்வாதிகளோடும் படம் காட்ட வைக்கப்பட்டுள்ள சில புலம்பெயர் தமிழர்கள் மக்கள் அங்கீகாரமும் ஆணையும் அற்ற வெள்ளையடிக்கப்பட்டுள்ள ஆசாமிகளாகவே எங்கள் கண்ணுக்குத் தெரிகிறார்கள். இவர்கள் நேபால் நாட்டின் நாகர்கோட் நகரில் இந்தவருடம் ஏப்ரல் மாதம் இரகசியமாகக் கூட்டப்பட்டு புரிந்திருப்பது ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை இமாலயப் பிரகடனம் அல்ல, இமாலயத் தவறு.

எம்மைப் பொறுத்தவரை இது ஒரு பிரகடனமே அல்ல, ஈழத்துத் தமிழ் வழக்கில் இதைப் 'பிரட்டுருட்டு' என்றே சொல்லமுடியும்.

ஆயுதப் போராட்டத்துக்கு முன்னரே திட்டமிட்ட இன அழிப்பு ஆரம்பிக்கப்பட்ட வரலாற்றை இந்தப் பிரட்டுருட்டுப் பிரகடனம் பிரட்டியும் பார்க்கவில்லை.

ஆயுதப் போராட்டம் இன அழிப்புப் போர் ஊடாக அழிக்கப்பட்ட பின்னரும் பண்பாட்டு இன அழிப்பும், கட்டமைக்கப்பட்ட இன அழிப்பும் இன்றுவரை தொடர்வதை அது எடுத்துரைக்கவில்லை.

ஈழத்தமிழர்களுக்கு எதிரான இன அழிப்பின் வரலாறு சொல்லப்படவில்லை. இன அழிப்புக்கு சர்வதேச நீதி ஏன் அவசியம் என்பது சொல்லப்படவில்லை. சுயநிர்ணய உரிமை பற்றி இம்மியளவும் இதில் எதுவும் இல்லை.

நான் ஏற்கனவே குறிப்பிட்ட எமது தேசிய விடுதலைக்கான அடிப்படைகள் அனைத்தையும் அடியோடு உருட்டிப் பிரட்டிப் போடும் நோக்கோடு இது தயாரிக்கப்பட்டிருக்கிறது.

இந்த வெண்ணிற ஆடைக் கூட்டம் ஆட்டுவிக்கப்படும் கூட்டம். ஆட்டுவிப்பவர்கள் யார் என்பதும் அவர்களின் திட்டம் எவ்வளவு ஆபத்தானது என்பதும் போகப் போக மேலும் துல்லியமாகத் தெரிய வரும். இதற்குப் பின்னால் நீண்ட காலமாக ஈழத்தமிழர்களைக் குறிவைத்து இயங்கி, தமது கஜானாக்களைத் திறந்துவிட்டு, பலவீனமான நம்பிக்கை இழந்த செயற்பாட்டாளர்களை அடையாளம் கண்டு அவர்களை மேசையில் இருத்தி சனநாயகம், வெளிப்படைத் தன்மை, உண்மைத் தேடல், ஒப்புக்கொள்ளல், நல்லிணக்கம் என்ற சொற்களின் உள்ளடக்கத்துக்கு எதிராக இரகசியமாகச் செயற்படும் இந்த அமைப்புகளால் ஏவி விடப்பட்டு அவர்களின் பரிசோதனைக்குப் பலியாகி, வெள்ளை ஆடுகள் போலத் தோற்றமளிக்கும் கறுப்பு ஆடுகள்!

நல்லிணக்கம் என்ற போர்வையில் தமக்கு வர இருக்கும் ஆபத்தை உணராமற் செய்து ஈழத்தமிழர்களைப் 'பிராக்காட்ட' இந்தப் பிரகடனம் முயல்கிறது. ஆனால், இது சரிவரப் போவதில்லை. பிராக்காட்ட உருவாக்கப்படும் பிரட்டுருட்டுப் பிரகடனங்கள் ஒருபோதும் எடுபடப் போவதில்லை.

மிகவும் அகலமாகப் பொருள்படுகின்ற, பரந்துபட்ட பொருள் தருகின்ற பொறுப்புக்கூறல், கூட்டு உரிமைகள், அதிகாரப் பங்கீடு, புதிய அரசியலமைப்பு என்பவற்றை ஆங்காங்கே பிரட்டி உருட்டி, அதற்குள் அதுவும் இருக்கிறது இதுவும் இருக்கிறது என்று சொல்லித் தப்பித்துக்கொள்ளும் நோக்கில் தயாரிக்கப்பட்டிருக்கிறது இந்த இமாலயப் பிரட்டுருட்டு.

இதனை எந்த ஒரு வலுவுள்ள புலம்பெயர் ஈழத்தமிழர் அமைப்புகளும் ஏற்றுக்கொள்ளவில்லை. நாளாந்தம் மறுப்பு அறிக்கைகள் கூட்டாகவும் தனித்தனியாகவும் வந்துகொண்டிருக்கின்றன. தங்களுக்குள்ளே ஒற்றுமை இல்லாது சிதறடிக்கப்பட்டிருந்தாலும் புலம் பெயர் சூழலில் இயங்கும் பல அமைப்புகள் இதை மறுத்துவிட்டார்கள். தாயகத்திலும் ஈழத்தமிழர் தேசத்துக்கான அரசியலுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் மக்கள் அமைப்புகளும் அரசியல் பிரதிநிதிகளும் இதை ஏற்றுக்கொள்ளவில்லை.

ஆனால், பிரட்டுருட்டு நாடகம் தொடருகிறது. ஏதோ மாநாடுகளும் கலந்தாலோசனைகளும் செய்வது போன்ற தோரணையில் சந்திப்புகளும், ஊடக அறிக்கைகளும் வெளிவந்துகொண்டிருக்கின்றன.

இதற்கு சில மேற்கு நாடுகளின் தூதரலாயங்களும் வரவேற்பு வெளியிட்டுக்கொண்டிருக்கின்றன. வலிந்து காணமலாக்கப்பட்டோரின் உறவுகளையும் இதற்குப் பயன்படுத்தி இணங்கவைக்க என்ன செய்யலாம் என்று ஆராய்ச்சிகளும் சந்திப்புகளும் நடக்கின்றன.

இது ஒரு புறம் இருக்க, இன்னொரு புறத்தில் இந்திய மத்திய அரசை அல்லது இந்திய இந்துத்துவவாத தரப்புகளை நோக்கி அணிவகுக்கச் செய்யப்பட்டுள்ள சில ஈழத் தமிழ் அரசியல், மத, சிவில் சமூக, கல்விச் சமூக கருத்துருவாக்கிகளும் மக்கள் பிரதிநிதிகளும் இந்த இமாலயப் பிரகடனத்தை மறுதலித்துள்ளார்கள். இதையும் நாங்கள் கூர்மையாக அவதானித்து வருகிறோம்.

இமாலயப் பிரகடனம் அடுத்துக் குறிவைக்கப் போவது தமிழ் நாட்டை. குறிப்பாக தமிழ் நாட்டு அரசை. மறைந்த முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்கள் ஈழத்தமிழர்களின் நிலை கண்டு, தனது கடந்த கால நிலைப்பாடுகளில் இருந்து முழுமையான மனமாற்றம் கண்டு முன்வைத்த தீர்மானத்தின் வலுவை தமிழ் நாட்டு அரசியலில் இருந்து அகற்றிவிடவேண்டிய தேவை வெண்ணிற ஆடைகளை இயக்கும் சக்திகளுக்கு ஏற்பட்டுள்ளது. இதற்காக அவர்கள் இயங்கிவருகிறார்கள்.

இப்படியெல்லாம் விரைவில் நடைபெறும் என்பதை முன்கூட்டியே உணர்ந்த நிலையில்தான் கடந்த ஆண்டு மார்ச் மாதத்திலும் ஏப்ரல் மாதத்திலும் தமிழ்நாட்டில் நீண்டகாலம் ஈழத் தமிழர் அரசியல் விடுதலைக்காகக் குரல் கொடுத்தவர்களை இணைத்து அவர்களுக்குச் சில அடிப்படைகளை மீண்டும் தெளிவாக வலியுறுத்துமாறு வேண்டிக்கொண்டேன். இதற்கான பயணத்தை மேற்கொண்டு தமிழ்நாட்டில் வேண்டிய கதவுகளைத் தட்டினேன். இறுதியில் தெளிவான தீர்மானங்களும் அங்கே வெளியிடப்பட்டன. அவற்றை மீண்டும் ஒருமுறை ஈழத்தமிழர்கள் அனைவரும் மீண்டும் வாசித்து அசைபோட்டுப் பார்த்தால் உண்மை புரியும். அந்தத் தீர்மானங்களை மறுதலிக்கச் செய்யும் நோக்கத்தோடு தான் தற்போது இமாலயத் தீர்மானம் முன்வைக்கப்படுகிறது.

தமிழ்நாட்டின் ஆளும் தரப்பு ஈழத்தமிழரின் நீதிப் பயணத்துக்கும் விடுதலைக்கும் குரல்கொடுக்காமல் மாற்றப்பட்டு இலங்கை அரசுக்கும் வெளிச் சக்திகளுக்கும் ஏற்ற வகையில் கையாளப்படும் நோக்கில் எரிக் சொல்கைம் இயங்கி வருகிறார். அவர் தமிழ் நாட்டிலும் ஆலோசகர், இங்கே ரணிலுக்கும் ஆலோசகர். சீனாவிடமும் அவர் சம்பளம் வாங்குகிறார். இந்தியாவிலும் இயங்குகிறார். இவருக்குச் சமாந்தரமாக மறைமுகப் பேச்சுவார்த்தைகள் என்ற போர்வையில் சில மேற்கு நாடுகளின் நலனுக்காக இயங்கும் அமைப்புகளும் அதே போன்ற வேலைத் திட்டத்தில் நீண்டகாலமாகச் செயற்படுகின்றன. இவர்கள் அனைவரும் குறிவைப்பது வடக்கு கிழக்கை மட்டுமல்ல, தமிழ் நாட்டையும் கூட. இதற்காகவே புலம் பெயர் சூழலில் தனித்துப் போயுள்ள சில ஆடுகள் பலியிடப்படுகின்றன.

தமிழ்நாட்டில் பல குழப்பங்கள் இருந்தாலும் கடந்த வருடம் எடுத்துக்கொண்ட முயற்சியால் பெரும்பாலனவர்களை ஒரே மேடையில் சந்திக்கச் செய்து பல தரப்புகளின் பொது இணக்கப்பாட்டுடன் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதேபோல புலம் பெயர் தரப்புகளும் பொதுவாக ஒரு மேடையில் இணைந்து தீர்மானங்களை இனியாவது வெளியிடவேண்டும். அடக்குமுறைக்கும் ஆக்கிரமிப்புக்கும் உள்ளாகி, கருத்துச் சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ள தாயகத்திலும் இவ்வாறு ஒரே மேடையில் தமிழ்த் தேசியத் தரப்புகள் அனைத்தும் ஒன்றிணைந்து தீர்மானங்களை இயற்ற வேண்டும். ஆனால், அந்தச் சிந்தனையை இங்குள்ள சில அரசியல் கட்சிகள் கொன்று தின்றுவிட்டன. உருவாக்கப்பட்ட தமிழ் மக்கள் பேரவையும் முடக்கப்பட்டுவிட்டது. இருந்தாலும் மீண்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

2015 ஆம் ஆண்டு மக்களாணை பெற்ற வடமாகாண சபையில் இன அழிப்புக்குச் சர்வதேச விசாரணை வலியுறுத்தப்பட்டு ஏகோபித்த ஆதரவுடன் தீர்மானம் வெளியிடப்பட்டது என்பது முக்கியமான ஒரு விடயம். இதைப் போலப் பெரும் நெருக்கடிகள் இருந்த காலத்தில் தான் அதுவும் நடந்தது என்பதை நாங்கள் நினைத்துப் பார்க்கவேண்டும். ஆகவே, மீண்டும் தேர்தல் அரசியலுக்கு அப்பாற்பட்டு ஒரு தளத்தில் அனைவரும் கூடி ஈழத்தமிழர் நிலைப்பாட்டை வலியுறுத்தவேண்டும். தகுந்த மக்கள் தரப்பு இதை முன்வந்து முன்னெடுத்தால், மீண்டும் தெளிவாக ஒரு செய்தியை உலகுக்கு உரைக்கமுடியும்.

ஆனால், அவ்வாறு முன்னெடுக்கும் தரப்பு ஒரு போதும் குறிப்பிட்ட எந்த ஒரு வெளிநாட்டின் நிகழ்ச்சிநிரலுக்குள் மட்டும் இயங்கக் கூடாது. இந்தியா மட்டுமே எமக்குத் தேவை என்றோ, மேற்கு நாடுகள் தான் எமக்கு நீதி தரும் என்றோ தனித்தனி வழிகளில் போலி நம்பிக்கைகளோடு இயங்கக்கூடாது. அதே வேளை, தனித்தனி வழிகளில் இயங்கும் அனைத்துத் தரப்புகளும் ஈழத்தமிழர் தேசிய விடுதலைக்காக ஒரு மேடையில் அடிப்படைகளை வலியுறுத்துவதற்காகவேனும் ஒன்று கூடி எமது நிலைப்பாடுகளை வலியுறுத்தவேண்டும்.

விரைவாக மாறிவரும் உலக சூழலில் திறக்கப்படக் கூடிய புதிய கதவுகளைத் திறக்கும் வகையில் சுயாதீனமாக ஈழத்தமிழர் தரப்புக்குரிய மக்கள் சக்தி திரட்டப்படவேண்டும்.

எனது கடமையாக சர்வதேச நீதியே பொறுப்புக்கூறலின் முக்கிய நகர்வு என்பதை 2013 ஆம் ஆண்டில் இருந்து ஒவ்வொரு முறையும் ஜெனீவாவில் நடைபெறும் கூட்டத் தொடர்களில் பங்கேற்று இன அழிப்புக்கான நீதியை வலியுறுத்திவந்துள்ளேன்.

இவ்வருடம் கூட இறுதியாக நடைபெற்ற அமர்விலும் நேரடியாகக் கலந்துகொண்டு அதையே வலியுறுத்தினேன்.

அதுமட்டுமல்ல, இன அழிப்புப் போரில் இலங்கை அரசுக்கு முட்டுக்கொடுத்த சர்வதேச தரப்புகள் இன அழிப்புக்கான சர்வதேச விசாரணையை முன்னெடுக்காது இலங்கை அரசுக்குக் கால நீடிப்பைத் தொடர்ந்துவருவதால் தொடர்ந்தும் ஈழத்தமிழர் மீது சர்வதேச அநீதியே கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கிறது என்பதை மக்கள் தீர்ப்பாயம் தனது தீர்ப்பாக ஜேர்மனியில் வழங்கியிருந்தது. அந்த வரலாற்று முக்கியத்துவமான நிகழ்வில் கலந்துகொண்டு, அங்கு வெளியான தீர்ப்பையும் மனித உரிமைப் பேரவையில் எடுத்துரைத்தேன்.

இவ்வாறு, எமது நீதிக்கான பயணம் தொடருகிறது. சர்வதேச நீதியை வலியுறுத்தி, தாமதிக்கப்படுகின்ற, மறுக்கப்படுகின்ற நீதியை வென்றெடுக்க ஒரு புறம் நாங்கள் பயணித்துக்கொண்டிருக்கும் போது, ஒருசில புலம்பெயர்ந்த கறுப்பு ஆடுகள் மறுபுறத்தில் இமாலயத் தவறான பிரட்டுருட்டுப் பிரகடனத்தோடு பிரவேசித்திருக்கிறார்கள்.

மகிந்த ராஜபக்சவின் காலத்திலும் இவ்வாறு சிலர் இங்கு வந்து போனதும், விடுதலைப் புலிகளின் முன்னாள் முக்கியஸ்தரான கே.பி. என்பவர் ஊடாக இவ்வாறான சந்திப்புகள் முன்னெடுக்கப்பட்டதும் காற்றோடு கரைந்து போன கதையாகி விட்டது.

இதைப் போல, இதே வெண்ணிற ஆடை ஆசாமிகள் 2013 ஆம் ஆண்டில் சிங்கப்பூரில் சிறிசேன ஆட்சிக்கு வந்தபோது போட்ட தீர்மானத்துக்கு என்ன ஆனது என்பதும் மக்களுக்கு நன்கு தெரியும். இதையே இமாலயப் பிரகடனத்துக்கும் இதே கதிதான் ஏற்படும்.

2015 ஆம் ஆண்டு வடமாகாண சபையில் இன அழிப்புக்கான சர்வதேச விசாரணை கோரி தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது சிங்கப்பூர் கோட்பாட்டுக் காரருக்கு பெரிய சிக்கலை உருவாக்கியது. இதனால் வடமாகாண முதலமைச்சரை பதவியில் இருந்து இறக்கும் சதியை ஐரோப்பாவில் இருந்து ஆதரித்து சில வேலைத் திட்டங்கள் நடைபெற்றன. ஆனால், இவற்றையெல்லாம் சரிவரப் புரியாதவராகவே முதலமைச்சர் காணப்பட்டார். புரியாத போதும் அவர் சரியாகச் செயற்பட்டார் என்பதால் அவரை விழவிடாது காப்பாற்றினோம். வடமாகாண சபையில் அவருக்கு அடுத்ததாக பெருமளவு வாக்குகளோடு தெரிவாகியிருந்த எனக்கு, எந்த அமைச்சுப் பொறுப்பும் தராமல் அவர் அமைச்சரவையை ஆரம்பத்தில் அமைத்திருந்தார். பின்னர் சிக்கல் உருவாகிய பின்னரே இறுதியில் அமைச்சுப் பொறுப்பைத் தந்திருந்தார். இப்படி பலவிதமான விடயங்களைத் தாண்டியே நாங்கள் நீதிக்காக, பொறுமையோடும் பொறுப்போடும் பயணித்து வருகிறோம்.

இப்போது மாகாண சபை கலைக்கப்பட்டிருந்தாலும். மாகாண சபையில் கடமையாற்றி இறுதியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக் கூட ஒன்றாகக் கூட்டி சில செய்திகளை உலகுக்குச் சொல்லலாம். செய்வார்களா என்ற கேள்வியை இங்கு முன்வைக்கிறேன்.

நல்லிணக்கம் என்ற போர்வையில், நாமும் குற்றம் இழைத்தோம் என்று நாமே ஒத்துக்கொண்டு எமது வரலாற்றை மறந்து விடவேண்டும் மறுதலிக்கவேண்டும் என்ற சிந்தனையோடு உண்மை உரைக்கும் ஆணையம் என்ற நாடகத்தை ஆடி, சர்வதேச நீதியை மறுதலித்து, இலங்கைக்குள் அதை முடக்கும் இமாலயச் சதியை நாம் அனைவரும் ஒன்றிணைந்து முறியடிக்கவேண்டும். இதையே ரணிலும் அவருக்குப் பின்னால் இருக்கும் மிலிந்த மொராகொடயும் பேச்சுவார்த்தைக் காலத்தில் இருந்து முன்னெடுக்கிறார்கள்.

இதைப் புரிந்துகொண்டு, இவற்றை எமது விடுதலை அரசியலால் இந்தப் போலி நாடகங்களை நாம் மறுதலிக்கவேண்டும்.

மேற்கு நாடுகளில் இருந்து இந்த நடவடிக்கைகளைச் சில நிறுவனங்கள் முன்னெடுக்கின்ஜறன. இலங்கை அரசை ஏற்றுக்கொள்ளும் மனநிலையில் ஈழத்தமிழர்கள் இருப்பது போல அறிகுறிகளைக் காட்டி சர்வதேச நீதியை முடக்கும் வேலைத் திட்டத்திற்கு நாம் பலியாகத் தயாராக இல்லை என்ற செய்தி உரப்பாகவும் எந்தவித ஐயத்துக்கும் இடமளிக்காத வகையிலும் அப்பட்டமாக உலகத்துக்குச் சொல்லப்படவேண்டும். இது செய்யப்படாவிட்டால் மேலும் பல பிரட்டுகள் எதிர்வருகின்ற கிழமைகளிலும் மாதங்களிலும் நடைபெற வாய்ப்பிருக்கிறது.

இந்த வெளிநாட்டு தன்னார்வ நிறுவனங்களின் முன்னெடுப்புகளோடு தமது கஜானாவை நிரப்பலாம் என்று 2015 ஆம் ஆண்டில் நிலைமாறுகால நீதி பேசப் புறப்பட்ட தன்னார்வ நிறுவனங்களும் மனித உரிமை என்ற போர்வையில் இயங்கிய சில நிறுவனங்களும் தனிநபர்களும் எவ்வாறு அணிவகுத்தார்களோ, அதைப்போல மீண்டும் ஓர் அணிவகுப்பை உருவாக்க மீண்டும் முயற்சி நடைபெறுகிறது. இவர்களில் பலரை இன்று காணவும் கிடைக்கவில்லை.

ஆகவே, ஒரே தளத்தில் ஒன்றிணைந்து பலமாக இதற்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு ஐரோப்பாவில் இருக்கும் புலம்பெயர் ஈழத்தமிழர்களுக்கும், தாயகத்தில் உள்ள மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஈழத்தமிழர் தரப்புகளுக்கும் உள்ளது. அப்போது தான் இந்த மாயைகளுக்கு முற்றுப் புள்ளி இட முடியும்.

தமிழ்நாட்டில் தீர்மானத்தை நிறைவேற்ற ஒரு மேடையில் தோன்றியவர்களுக்கும் அதன் தொடர்ச்சியைப் புரிந்து செயற்படவேண்டிய கடமை இருக்கிறது. ஒவ்வொரு முறையும் நாம் பிச்சை கேட்டு கதவைத் தட்டி அலையவேண்டிய அவல நிலையை எமக்கு தமிழ்நாட்டில் இருக்கும் உறவுகள் ஏற்படுத்தக்கூடாது.

மாகாண சபைத் தேர்தலில் பெருந்தொகையான மக்களின் வாக்குகளோடு தெரிவாகிய மக்கள் ஆணையோடு நான் தொடர்ந்தும் நீதிக்கான செயற்பாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறேன். ஒன்றித்து ஒரே தளத்தில் ஈழத்தமிழர் மக்களானை பெற்ற பிரதிநிதிகள் கூடி உலகுக்கு எடுத்துச்சொல்லவேண்டியதைத் தெளிவாக முன்வைக்க நான் முழுமையாகத் தயாராக இருக்கிறேன். ஈழத்தமிழர் தேசிய விடுதலை பற்றியும் அரசியல் விடுதலை பற்றியும் பேசும் ஏனையவர்கள் இதயசுத்தியுடன் அடிப்படைகளை இணைந்து வலியுறுத்தத் தயாராக உள்ளார்களா என்ற கேள்வியை முன்வைக்கிறேன்.

விளம்பரம் என்பது
உங்கள் வணிகத்தின்
ஒரு முதலீடு
தொடர்புகளுக்கு
437.345.4203





AFFORDABLE REFRIGERATION SERVICES INC
Walk - In Freezers
Walk - In Coolers
Reach - In Freezers
Reach - In Coolers
We Sell. Install used & new Walk in Cooler Walk in Freezer
kapil.afr@gmail.com
Kapil: 647.515.8643




வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை
NEW LIFE FRESH START
Save 80%
கடன் 80% குறைய நடவடிக்கை
Reduce your debts upto 80%.
கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts.
கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, legal action & garnishments.
உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
Protect all your assets (House, Car, RRSP, RESP).
மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
Make one monthly patment to all of your creditors.
வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
GIve you solutions without bankruptcy.
Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation
Over 20 Years Experience in the field of Insolvency
Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca
CRC CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

# 16.01.1993 அன்று வங்கக்கடலில் காவியமான உங்கள் நினைவுகள் எங்கள் மனங்களில் கரையேறும் அலைகளாக மீண்டும்... மீண்டும்...



# கேணல் கிட்டு நினைவு சிறுவர் பூங்கா



“என் உயிரினும் மேலான தாய்த்திரு நாட்டை அன்னிய ஏகாதிபத்தியவாதிகளுக்குத் தாரை வார்த்துக்கொடுப்பதா?”

ஆம்!… அன்று வீரமுழக்கமிட்டு தமிழீழ நிலப்பரப்பின் ஒரு பகுதியான யாழப்பாணத்தைக் கட்டி ஆண்டு அன்னிய ஏகாதி பத்திய வாதிகளுக்கு ஒரு அச்சுறுத்தலாக விளங்கிய சங்கிலி யனின் அந்தக் கம்பீரமான சிலை வானளாவ உயர்ந்து நின் றது!

நல்லூரில் அமைந்துள்ள “கேணல் கிட்டு நினைவு சிறுவர் பூங்கா” வின் நுழைவாசலில் நிற்கும் பொழுது வீறுகொண்டு பாய்கின்ற குதிரையில் வாள் ஏந்திய சங்கிலிய மாமன்னனின் அந்த வீரம் செறிந்த பார்வை, பார்ப்பவர்களின் உள்ளங்களை யும் ஒரு கணம் வீறுகொள்ளவைக்கும்.

தமிழீழ அரசின் இராஜதானியாக விளங்கிய நல்லூரில் அந்த மாவீரனின் சிலை அமைக்கப்பட்டதும் பொருத்தமானதுபோல் இருந்தது. அந்த மாமன்னனின் சிலையை ஒரு தடைவ சிரம் தாழ்த்தி வணங்கிக் கொண்டே, அனுமதிச் சீட்டையும் பெற்றுக் கொண்டு, நுழைவாயிலின் ஊடாக “கேணல் கிட்டு நினைவுப் பூங்கா” வினுள் காலடி வைக்கின்றேன்.

ஓ… இயற்கையின் அழகிய வனப்பும், கண்ணைக் கவரும் பூமரங்களும், குளிர் நிழல் தரும் பெரு விருட்சங்களும், “சல… சல…” என்ற நீரோடைகளும்… துள்ளித்திரிந்து ஆனந்தமாய்க் குதூகலிக்கும் குழந்தைகளும், தம் துயரங்களையும் மறந்து களிப்பில் திளைக்கும் பெரியவர்களும்… இப்படியே அந்தப் பூங்கா எங்கும் கலகலப்பாக இருந்தது…!

“சே!… இவ்வளவு செலவழித்து இந்தப் பூங்காவை அமைத் திருக்கின்றார்களே… இந்தப் போர்க்கால நெருக்கடியிலும் இது தேவைதானா?”

என்னுடைய மனம் அநத மனோரம்மியமான சூழலில் இருந் தும் சிறது விலகி அசைபோடத் தொடங்கியது.

பாதையின் இரு ஓரங்களிலும், உள்ள பச்சைப் பசேலென்ற புல் படுக்கைகளையும், அழகிய பூமரங்களையும், பார்த்தபடியே மெதுவாக நடந்துகொண்டிருந்த எனது மனதிலும் ஏன்தான் இப்படி ஒரு எண்ணம் பிறந்ததோ?

சிறிது தூரம் வரை நடந்து சென்றுகொண்டிருந்த என் கண் முன்னால் கம்பீரமாகத் தோற்ற மளித்துக்கொண்டிருந்த, இன்னுமொரு உருவம், என் நடையின் வேகத்தைத் தடுத்து நிறுத்தியது…

ஆம்!… யாழ்ப்பாணத்தைச் சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்து தமிழ் மண்ணின் வீரத்தை உலகுக்கு எடுத்துக்காட்டிய “கேணல் கிட்டு” வின் எடுப்பான தோற்றம், அங்கே நுழைபவர்களுக்கு மீண்டும் ஒரு தடைவ வீரத்தை ஊட்டுவது போல இருந்தது!

“எந்த நெருக்கடியான சூழலிலும், எந்த அழுத்தங்களின் மத்தியிலும் தமிழ் மக்களாகிய நாம் நிலைகுலைந்து போகாது உறுதியாக வாழவேண்டும். இது பொன்ற சரணாலயங்கள் சிறுவர் பூங்காக்கள் நெருக்குதலுக்கு ஆளான, எங்களுடைய மக்களின் மனங்களை செழுமைப்படுத்தும்… போர்ச்சூழலிலேயே வாழ்ந்து, மன அமைதியற்றுத் தவிக்கின்ற எங்






களுடைய குழந்தைகளுக்கு உத்வேகத்தையும், உள மகிழ்ச்சியையும், மனவெழுச்சியையும் ஏற்படுத்தும். இது எதிர்கால சமுதாயத்தின் எழுச்சிக்கும் வித்திடும்... எமது ஆடம்பர வாழ்வுக்காகவும், களியாட்டங்களுக்காகவும் எவ்வளவோ பணத்தைச் செலவழிக்கின்றோம்... உளவியல் ரீதியாகவும், உடல் ரீதியாகவும் எழுச்சியைத் தருகின்ற இந்தச் சரணாலயம் தமிழீழத்திற்கு நல்ல ஒரு எடுத்துக் காட்டாக இருக்கும்... எமது மண் விடியும்போது வெறும் பாலைவனமாக இருக்கக் கூடாது...”

1986ஆம் ஆண்டு, “பண்டிதர் சரணாலயத்தை” உருவாக்கி அதனை ஒரு நல்ல இயற்கை வளம் நிறைந்த ஒரு வனமாக உருவகித்துக்கொண்டிருந்த கிட்டு, அன்று கூறிய அந்தப் பொருள் பொதிந்த கருத்தக்கள், மீண்டும் எதிரொலித்து அலை மோதிக்கொண்டிருந்தது.

ஓ... பரந்த தீர்க்கதரிசனத்துடன் சிந்தித்த அந்த மாவீரனின் முன்னால் நிற்கும் என் உடலும் உள்ளமும் ஒரு தடவை கூனிக் குறுகியது.

அன்று!... அஸ்தமித்துப்போன தமிழ் ஈழத்தின் கடைசி மன்னனாக இருந்து கோலோச்சி வீரச்சாவடைந்த மாவீரன் சங்கிலியனின் உருவம் வரவேற்கின்றது!

இங்கே... உருவாகப் போகின்ற தமிழ் இராட்சியத்தின் மாவீரனான கிட்டுவின் தோற்றம் ஒரு புதிய தேசத்தின் உதயத்தைச் சுட்டிக்காட்டுவது போல் இருக்கின்றது.

என் தலைக்கு மேலாக உள்ள சுமார் இருபது அடி உயரத்திற்கு மேல் அமைக்கப்பட் பிரமாண்டமான தொங்குபாலத்தை நிமிர்ந்து பார்த்ததும், என் கண்கள் வியப்பினால் அகலத் திறந்தன.

ஒரு மலை உச்சியில் இருந்து இன்னொரு மலைக்கோ, அல்லது பெரிய ஆறுகள், நீரோடைகளைக் கடப்பதற்கோ வெளிநாடுகளில் அமைக்கப்பட்டிருக்கும் தொங்கு பாலங்களை எங்களுடைய குழந்தைகள் எப்பொழுதாவது அறிந்திருப்பார்களா?

எங்களுடைய மண்ணிலேயே அத்தகைய ஒரு தொங்கு பாலத்தைக் கண்டதும் என் மனம் குதூகலித்தது.

“எங்களுடைய வளரும் சமுதாயத்திற்கு எதுவும் இல்லை என்ற குறை இந்த மண்ணில் இருக்கக் கூடாது... வளர்ச்சியடைந்த நாடுகளில் கிடைக்கின்ற வசதிகளும், வளங்களும் எங்கள் மண்ணில் வாழ்கின்ற குழந்தைகளுக்கும் ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும்...” என்ற பரந்த நோக்கத்தில் சிந்தித்த தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையில் உருவான அந்த, எதிர்பார்க்கைகளை நினைத்துப்பார்க்கும் பொழுது ஒரு கணம் எம் நெஞ்சமெல்லாம் புல்லரித்தது!

அந்த உறுதியான தொங்கு பாலத்தின் மீது குதூகலமாகத் தவழ்ந்தும், ஓடியும் நடக்கின்ற குழந்தைகளையும், சிறுவர்களையும் மட்டுமல்ல, இளைஞர்கள், வயதானவர்கள் எல்லோரையும் பார்க்கும் பொழுது.

“இவர்கள் குண்டுகள் போடும், துப்பாக்கிச் சத்தங்கள் கேட்கின்ற மண்ணிலா வாழ்கின்றார்கள்...” என்றல்லவா எண்ணத் தோன்றுகின்றது.

அதற்கு அருகே, மிக உயரமான ஒரு மலையும், அதில் இருந்து “சல, சல” என்று வழிந்தோடுகின்ற நீர்வீழ்ச்சியும், கீழே நீரைச் சேர்த்துக் கொண்டு செல்கின்ற நீரோடையும் மிக அற்புதமாக இருந்தது.

மலையின் கீழே சுற்றிச் சுற்றிச் செல்லும் குகையும், அதன் இரு பக்கங்களிலும் பொருத்தப்பட்ட வண்ண, வண்ண மீன் தொட்டிகளும் மனோரம்மியமாக இருந்தது.

ஒவ்வொரு மீன் தொட்டிகளினுள்ளும் வகை வகையான மீன் காட்சியம் (Aquarium) குழந்தைகளுக்கு கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

அங்கிருந்து விலகிச் சென்று கேணல் கிட்டுவுடன், வங்கக் கடலிலே வீரச் சாவைத் தழுவிக் கொண்ட ஒன்பது மாவீரர்களின் உருவப் படங்களையும் பார்த்து, என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு, அப்பால் நடந்து சென்ற எனக்கு, வெளிநாட்டில் ஏதோ ஒரு பூங்காவிற்குள் நிற்பது போன்ற பிரமைதான் ஏற்பட்டது.

ஓய்வெடுக்கும் மாடிக் குடில்கள், சிறுவர்களும், பெரியவர்களும் கூட விளையாடிக் களிக்கும் நிறுத்தாடுவனைகள், ராட்டினங்கள், ஊஞ்சல்கள், சறுக்கும் ஏணிகள் போன்ற விளையாட்டுச் சாதனங்கள், இத்தனைக்கும் களைப்புற்று வந்தால் உல்லாசமாக இருந்து ஓய்வெடுக்கும் அழகிய வடிவமைப்பிலான மண்டபங்கள், குளிர்களி மற்றும் சிற்றுண்டிகள் விற்பனையாகும் அழகிய கடை... இப்படியே ஒவ்வொன்றாகப் பார்த்துக்கொண்டு சென்ற என் மனதிலே ஒரு இனம்புரியாத மகிழ்ச்சியையும், மன அமைதியையும் அந்தப் பூங்கா தந்து கொண்டிருந்தது.

அங்கே வட கிழக்கு மூலையில் ஒரு கொட்டகையினுள் வைக்கப்பட்டிருந்த பிரமாண்டமான சேதமாக்கப்பட்ட “செய்ன் டோசர்” தமிழீழ விடுதலைப் புலிகளின் தனித்துவமான வீரத்தைப் பறைசாற்றிக் கொண்டிருந்தது.

அன்னிய ஆக்கிரமிப்பாளர்களின், எந்த ஆயுத பலமும், பாரிய இராணுவ தளபாடங்களும், அச்சுறுத்தும் டாங்கிகளும் விடுதலை உணர்வுடைய மக்களின் ஆன்மபலத்தின் முன்னால், நிலைகொள்ள முடியாது என்பதை அந்த அழிக்கப்பட்ட சேதமாக்கப்பட்ட “செயின் டோசர்” காட்டிக்கொண்டிருந்தது.

“செந்தமிழ் நாடென்னும் போதினிலே - ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே...”

என்ற இந்திய சுதந்திரக் கவி பாரதியின் வீர வாசகம் எங்கள் இதயங்களையே ஒரு கணம் எழுச்சி பெறவைத்துக் கொண்டிருந்தது.

“ஓ... போர்ச்சூழலின் நெருக்குதலின் மத்தியிலும் வாழ்கின்ற எங்களுடைய மக்களுக்கு இந்தப் பூங்கா ஒரு சஞ்சீவி...”

கேணல் கிட்டு, நினைவுப் பூங்காவில் இருந்து வெளியேறிக் கொண்டிருந்த என் நெஞ்சத்திலும், உடலிலும் ஒரு புத்துணர்ச்சி ஊற்றெடுப்பதுபோல் இருந்தது...

- ந. ஆனந்தராஜ் ... ஜனவரி 1995 - எரிமலை










# கேணல் கிட்டுவின் நினைவாக எம் இளையோர் மகிழ ஓர் இனிய உலகம்

## தமிழர் அரசட்சியில் சிறுவர் பூங்கா







கேணல் கிட்டு

"முன்னேறிய நாடுகளில், அந்நாட்டுப் பாதுகாப்புக்காக ஒதுக்கப்படும் நிதியளவுக்குச் சமமாகக் குழந்தைகளின் பராமரிப்புக்கும் கல்விக்கும் நிதி ஒருக்கப்படுகின்றது, நாமும் குழந்தைகளின் பராமரிப்பு, கல்வி ஆகியவற்றை அமைப்பு ரீதியாக பங்குபடுத்தி எழுச்சிமிக்க எதிர்கால தாயகத்தை உருவாக்க வேண்டும்"

"குழந்தைகளைச் சரியாக வழிநடத்துவதன் மூலமே, நாம் ஒரு எழுச்சிமிக்க எதிர்கால சந்ததியினரை உருவாக்க முடியும். குழந்தைப் பிராயத்திலேயே அவர்களின் மனநிலையை உளவியல் ரீதியாக, திட்டமிட்டு வளர்ப்பதன் மூலம் சிறந்ததோர் எதிர்காலச் சந்ததியை உருவாக்கலாம்"

கேணல் கிட்டு





"குண்ட வீச்சு விமானங்களின் தாக்குதல்களினாலும், இராணுவ முகாம்களிலிருந்து ஏவப்படும் குண்டுகளினாலும் எமது குழந்தைகளின் மனோநிலை பெரிதும் பாதிக்கப்படுகின்றது, அதனால் எமது எதிர்கால சமுதாயமே உளவியல் ரீதியில் மிகவும் பாதிப்படைந்து வருகின்றது"

கேணல் கிட்டு

"உளவியல் ரீதியாகப் பாதிப்படையக் கூடாது என்பதற்காகவும், பாதிப்படைந்த குழந்தைகளுக்கு சிறிதளவேனும் நிவர்த்தி கொடுப்பதற் காகவுமே நாம் ஆங்காங்கு சிறுவர் பூங்காக்கள், சரணாலயங்கள், சிறுவர் விளையாட்டரங்குள் ஆகியவற்றை அமைத்து வருகின்றோம், இவற்றால் குழந்தைகளின் மனநிலை, தேகாரோக்கியம், அறிவாற்றல் ஆகியவற்றை வளர்க்க முடிறும்"

கேணல் கிட்டு






**05.01.2008 அன்று மன்னார் மாவட்டம் பள்ளமடுப்பகுதியில் சிறீலங்கா படைகளின் ஆழஊடுருவும் படைப்பிரிவு நடாத்திய கிளைமோர்த் தாக்குதலில், படைய புலனாய்வுப் பிரிவு பொறுப்பாளர் கேணல் சாள்ஸ் லெப்டினன்ட் சுகந்தன் லெப்டினன்ட் காவலன் லெப்டினன்ட் வீரமாறன் ஆகிய போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.**



# 39ஆம் ஆண்டு வீரவணக்கம்



கப்டன் பண்டிதர்
சின்னத்துரை ரவீந்திரன்
கம்பர்மலை, வல்வெட்டித்துறை
(25.12.1959-09.01.1985)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதியான கப்டன் பண்டிதர் 1985ஆம் ஆண்டு தை 09ஆம் திகதி அச்சுவேலியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்றை சிங்களப்படைகள் முற்றுகையிட்ட போது இடம்பெற்ற மோதலில் வீரச்சாவடைந்தார்.

பண்டிதர் அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மத்திய குழு உறுப்பினராக இருந்தார். அதுமாத்திரமன்றி தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் ஆயுதப் பராமரிப்புக்கும் நிதிவளங்களுக்கும் பொறுப்பாளராக இருந்தார். வல்வெட்டித்துறைக்கு அருகேயுள்ள கம்பர்மலையை பிறப்பிடமாக கொண்டவர். அவர் வீரச்சாவடைகின்றபோது வயது இருபத்தி நான்கேயாகும்.

1977ஆம் ஆண்டு அமைப்பில் இணைந்து விடுதலைப் புலிகளின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தார். கடமையுணர்வு, கடும் உழைப்பு, இலட்சியப் பற்று ஆகிய சீரிய பண்புகள் நிறைந்த கப்டன் பண்டிதர் சகபோராளிகளின் அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமாக விளங்கினார். தமிழீழத் தேசியத் தலைவரின் நேசம்மிக்க தளபதியாக விளங்கிய பண்டிதர் விடுதலைப் புலிகள் அமைப்பின் நிர்வாகப் பொறுப்புக்களை சுமந்ததோடு மட்டுமல்லாது பல வெற்றிகரமான தாக்குதல்களிலும் கலந்துகொண்டார்.

தமிழீழ விடுதலைக்காய் இன்னுயிரை நீத்த இவ் வீரவேங்கையுடன் வீரச்சாவு அடைந்த எனைய போராளிகளின் நினைவோடு எம் பணி தொடர்வோம்.



# இமாலயப் பிரகடனம்: தமிழ் மக்களுக்கு யார் பொறுப்பு?

16.12.2023

நோர்வீஜிய மத குருவாகிய அருட் தந்தை. ஸ்டிக் உட்னெம் - Fr.Stig Utnem- இலங்கைத் தீவின் நல்லிணக்க முயற்சிகளில் மதத்தலைவர்கள் பங்களிப்புச் செய்யலாம் என்று சிந்திப்பவர். அதற்காக உழைப்பவர். 2014இல் நான் நோர்வேக்குச் சென்ற பொழுது அவரைச் சந்தித்தேன். இலங்கையில் திருச்சபை களின் பங்களிப்போடு இன நல்லிணக்க முயற்சி ஒன்றினை முன்னெடுக்கவிருப்பதாக அவர் என்னிடம் சொன்னார். அதற்கு நான் சொன்னேன், நல்ல விஷயம். ஆனால் நல்லிணக்க முயற் சிகளை திருச்சபைகளில் இருந்து தொடங்குவதற்கு பதிலாக விகாரைகளில் இருந்து தொடங்குவதுதான் பொருத்தமாக இருக்கும் என்று. ஏனென்றால் யுத்தம் அங்கிருந்துதான் தொடங்குகின்றது. எனவே அங்கிருந்துதான் சமாதானமும் தொடங்க வேண்டும். மாறாக திருச்சபைகளில் இருந்து அதைத் தொடங்க முற்பட்டால் புலம்பெயர்ந்த தமிழர்களும் அவர்களுக் குச் சார்பான வெள்ளைக்கார நாடுகளும் கிறிஸ்தவ அமைப்புக் களுக்கூடாக தமது யுத்த வெற்றியைத் தட்டிப்பறிக்க பார்க்கின் றனர் என்று சிங்கள பௌத்த அரசியல்வாதிகள் வியாக்கி யானம் செய்வார்கள் என்று.



கடந்த மாதம் 23-29ஆம் திகதி வரையும் இலங்கையிலிருந்து மதத் தலைவர்களின் குழு ஒன்று நோர்வேக்கு விஜயம் செய்தது. ஒஸ்லோ முருகன் ஆலயத்தில் கடந்த 24 ஆம் திகதி ஒரு மத நல்லிணக்க ஒன்றுகூடல் ஒழுங்கு செய்யப்பட்டது. அதில் உரையாற்றிய திருகோணமலை கத்தோலிக்க மறை மாவட்டத்தின் ஆயர் தன்னுடைய மறை மாவட்டத்தில், சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இரு வேறு சட்டங்கள் நடை முறையில் உள்ளன என்ற தொனிப்பட கருத்து தெரிவித் துள்ளார். அதாவது திருக்கோணமலையில் சிங்கள பௌத்த மயமாக்கல் தொடர்பில் சட்டம் அப்படித்தான் பிரயோகிக்கப் படுகிறது என்று பொருள்.

மேற்படி மதத் தலைவர்கள் குழுவின் நோர்வேப் பயணத்திற் குரிய ஏற்பாடுகளின் பின்னணியிலும் அருட்தந்தை. ஸ்டிக் உட்னெம் இருந்திருக்கிறார். இலங்கைத்தீவில் இனங்களுக் கிடையிலான நல்லிணக்க முயற்சிகள் தொடர்பில் அவர் இப் பொழுது ஏறக்குறைய களைத்துப் போய்விட்டார் என்று அவ ரைத் தெரிந்தவர்கள் கூறுகிறார்கள்.

கடந்த ஒரு நூற்றாண்டு காலத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் கண்டுபிடிக்கும் நோக்கத்தோடு பௌத்த குருமாரோடு இணைந்து ஒரு தமிழ்த் தரப்பு இவ்வாறு பிரகடனம் ஒன்றை வெளியிட்டிருப்பது இதுதான் முதல் தடவை.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தனி நாட்டைத் தவிர வேறு எந்த ஒரு தீர்வைப் பெறுவதாக இருந்தாலும், பௌத்த மகா சங்கத்தோடு உரையாடத்தான் வேண்டும். சமாதானம் ஆகட் டும், நல்லிணக்கமாகட்டும் எதுவும் பௌத்த விகாரைகளில் இருந்துதான் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

கடந்த ஒரு நூற்றாண்டு காலம் முழுவதிலும் இனப்பிரச்சினைக் கான தீர்வு முயற்சிகளின் போது, அவற்றைத் தடுத்ததில் அல் லது குழப்பியதில் மகா சங்கத்துக்கு முக்கிய பங்கு உண்டு. இலங்கைத் தீவின் பௌத்தம், ஓர் அரச மதம், அரசியலில் தீர்மானிக்கும் சக்திகளாக காணப்படும் அரசியல்வாதிகள் படைத் தரப்புகள் பௌத்த ஊடகங்கள் என்பவற்றோடு பௌத்த மகாசங்கமும் ஒன்று. எனவே மகாசங்கத்தின் ஆசீர் வாதங்களின்றி இலங்கைத்தீவில் சமாதானத்தைக் கொண்டு வர முடியாது.

ஆனால் கடந்த ஒரு நூற்றாண்டு காலப் பகுதிக்குள் தமிழ்த் தரப் பிலிருந்து மகா சங்கங்களை நோக்கிச் சென்றவர்கள் மிகக் குறைவு. விக்னேஸ்வரன் முதலமைச்சராகப் பதவியேற்றதும் மகாநாயக்கர்களைச் சந்திக்கச் சென்றார். அதில் ஒரு பீடம் அவரை மதித்து நடத்தியதாகவும் மற்றொரு பீடம் அவரை மதிக்கவில்லை என்றும் கூறப்பட்டது. அதன்பின் தமிழ் அரசியற் சமூகத்தில் இருந்து யாரும் மகாநாயக்கர்களோடு உரையாட வில்லை. அரசாங்கம் தமிழ்ப் பகுதிகளுக்குத் திட்டமிட்டு நிய மிக்கும் தமிழ் ஆளுநர்கள் மகாநாயக்கர்களிடம் சென்று ஆசீர் வாதங்களைப் பெற்றார்கள். அதுபோல அண்மையில் கொழும் பில் பெரிய அளவில் முதலீடு செய்வதற்கு வந்த புலம் பெயர்ந்த தமிழ் முதலாளி ஒருவரும் தன் மனைவியோடு சென்று மகா சங்கத்தினரிடம் ஆசீர்வாதங்களைப் பெற்றிருந்தார். மேலும் இந்தியாவில் இருந்து வரும் அமைச்சர்களும் தூதுவர்களும் மகா சங்கத்தினரிடம் சென்று ஆசீர்வாதங்களைப் பெறு கிறார்கள். இப்படிப்பட்டதோர் பின்னணியில், மகா சங்கத்தின் ஆசீர்வாதத்தோடு ஒரு தீர்வு முயற்சியை ஜி.ரி.எஃப் தொடங்கி யிருக்கிறது. மகாசங்கத்தின் ஆசீர்வாதம் கிடைத்திருப்பதால் அம்முயற்சிக்கு அதிக கவனிப்புக் கிடைத்திருக்கிறது.

ஹிமாலய பிரகடனம், இனப்பிரச்சினைக்கான தீர்வுக்குரிய மென்மையான வரையறைகளை கொண்டிருப்பதாக ஜி.ரி. எஃப்பின் தலைவர் சுரேன் சுரேந்திரன் கூறுகிறார். ஆம். அவை மென்மையான வரையறைகள்தான். ஆனால், அதை மிகச்சரியான வார்த்தைகளிற் சொன்னால், மகா சங்கத்தின் ஆசிர்வாதங்களைப் பெறுவதற்காகத் தமிழ் மக்களின் கோரிக் கைகள் அங்கே மென்மையாக்கப்பட்டிருக்கின்றன என்பதே உண்மை.

மகாநாயக்கர்களை வணங்க வேண்டும்; மதிக்க வேண்டும். எப்பொழுது என்றால் புத்தபகவான் கூறியதுபோல அவர்கள் சகலவற்றையும் துறந்த சன்னியாசிகளாக இருக்கும் பொழுது





இப்படிப்பட்டதோர் மத அரசியல் பின்னணியில்தான் கடந்த வாரம் ஹிமாலய பிரகடனம் என்ற ஒரு பிரகடனம் வெளியிடப் பட்டிருக்கிறது. ஜி.ரி.எஃப் என்று அழைக்கப்படும் உலகத் தமிழர் பேரவையும், "சிறந்த இலங்கைக்கான பௌத்த சங் கமும்" இணைந்து உருவாக்கியதே மேற்படி இமாலய பிர கடனம் ஆகும். கடந்த ஏப்ரல் மாதம் நேபாளத்துக்கு ஒரு தொகுதி பிக்குகளை அழைத்துச் சென்ற ஜி.ரி.எஃப்., அங்கு வைத்து அப்பிரகடனத்தைத் தயாரித்திருக்கின்றது. கிட்டத்தட்ட 9 மாதங்களின் பின் அதை இப்பொழுது வெளியிட்டிருக் கிறார்கள்.

அவர்களை வணங்கலாம். அது ஆன்மீகம். ஆனால் புத்த பகவான் வாழ்ந்து காட்டியதற்கு மாறாக மகாசங்கம் அதிகாரத்தின் ஒரு பகுதியாக இருக்கும் பொழுது, அந்தக் கட்டமைப்புடன் பேசப் போகும் தமிழர்கள் மண்டியிட முடியாது. ஏனெனில் அது அரசியல். தமிழ் மக்கள் தமது கோரிக்கைகளை நீர்த்துப் போகச்செய்து மகாசங்கத்தின் ஆசிர்வாதங்களைப் பெறத் தேவையில்லை. பதிலாக தமிழ்மக்கள் தங்களுடைய பேர பலத்தை அதிகப்படுத்திக் கொண்டு மகா சங்கத்தோடு பேசப் போகலாம்.

ஜி.ரி.எஃப் உடனான சந்திப்பின்போது அஸ்கிரிய பீடாதிபதி கூறியதாக ஒரு தகவலை சுரேன் சுரேந்திரன் தெரிவித்திருந் தார். யுத்த காலத்தில் தான் வன்னிக்கு வர விரும்பியதாக மகாநாயக்கர் கூறியுள்ளார். இருக்கலாம். அப்பொழுது தமிழ் மக்களிடம் பேர பலம் இருந்தது. அதனால் மகாநாயக்கர் வன்னிக்கு வர விரும்பியிருக்கலாம். இப்பொழுது தமிழ் மக் களின் பேர பலம் குறைந்து போய்விட்டது. அதனால்தான் தாயகத்துக்கு வெளியில் இருந்து தாயகத்தின் தலைவிதியைத் தீர்மானிக்கும் பிரகடனங்களை உருவாக்கும் ஒரு நிலை.

ஜி.ரி.எஃப் புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தை முழுமையாகப் பிரதிநிதித்துவ படுத்தவில்லை. முதலில் அவர்கள் புலம் பெயர்ந்த தமிழ் அமைப்புகள் மத்தியிலும் இது தொடர்பாக விவாதித்திருக்க வேண்டும். அதன்பின் தாயகத்தில் உள்ள தமிழ்க் கட்சிகள், செயற்பாட்டாளர்கள், குடிமக்கள் சமூகங்க ளோடு உரையாடியிருந்திருக்க வேண்டும். ஆனால் அப்படி எதுவும் வெளிப்படையாக நடக்கவில்லை.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த இமாலய பிரகடனக் குழுவின ரோடு வடமராட்சியைச் சேர்ந்த ஒரு முன்னாள் மாநகர சபை உறுப்பினர் காணப்பட்டார். இவர் சுமந்திரனுக்கு நெருக்க மானவர். ஆனால் யாழ்ப்பாணத்துக்கு வந்த பிரகடனக்குழு வெளிப்படையாக எந்த அரசியல்வாதியோடும் தன்னை நெருக் கமாகக் காட்டிக் கொள்ளவில்லை.

ஜி.ரி.எஃப் பிரதிநிதிகளும் பிக்குகளும் நல்லை ஆதீனத்தில் சைவ சமயத் தலைவர்களைச் சந்தித்தபொழுது, அதில் பங்கு பற்றிய சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் ஆறு.திருமுருகன் ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டினார். உங்களை எனக்குத் தெரியாது என்பதே அது. அதுதான் உண்மை. அதாவது தாயகத்தில் உள்ள தரப்புகளோடு ஜி.ரி.எஃப் உரையாடியிருக் கவில்லை. இதுபோன்ற முயற்சிகளை தாயகத்தை மையமாகக் கொண்டுதான் முன்னெடுக்க வேண்டும். தாயகத்துக்கு வெளி யில் இருந்து அல்ல. அந்த அடிப்படையில் பார்த்தால், இது ஒரு தலைகீழ் முயற்சி.

இது புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் ஒரு திரட்சியாக இல்லை என்பதைக் காட்டுகின்றது. அங்கேயும் தனி ஓட்டங்கள் பலமாக உள்ளதைக் காட்டுகின்றது. அதுமட்டுமல்ல, மேற்கு நாடு களிடம் கடனுக்காகத் தங்கியிருக்கும் ஒரு ஜனாதிபதியை; ஐநாவிற்கு வீட்டு வேலைகள் செய்ய வேண்டிய ஒரு ஜனாதி பதியை; அந்த வீட்டு வேலைகளில் ஒன்று ஆகிய உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவை உருவாக்க முயற் சிக்கும் ஒரு ஜனாதிபதியை; அடுத்த ஆண்டு நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடக் கூடிய ஒரு ஜனாதிபதியை; பாதுகாப்பதுதான் இந்த நகர்வின் உள்நோக்கமா என்ற சந் தேகங்களை அதிகப்படுத்துகின்றது.

இந்த இடத்தில் தாயகத்தில் உள்ள கட்சிகளும் செயற்பாட் டாளர்களும் குடிமக்கள் சமூகங்களும் ஒரு விடயத்தை ஒப்புக் கொள்ள வேண்டும். தாயகத்தில் பலமான ஒரு அரசியல் இயக்கம் அல்லது கட்சிகளின் கூட்டு இல்லாத வெற்றிடந்தான் இதற்கெல்லாம் காரணம். தாயகத்தில் பலமான ஒரு மக்கள் இயக்கம் அல்லது மக்கள் அதிகாரம் இருந்திருந்தால் புலம் பெயர்ந்த தமிழ் அமைப்புகள் தாயகத்தை நீக்கிவிட்டு இது போன்ற செயற்பாடுகளில் ஈடுபட முடியாது. அல்லது தாயகத்தில் உள்ள சில அரசியல்வாதிகளின் மறைமுக அனுசரணையோடு இதை முன்னெடுத்திருக்க முடியாது. தாயகத்தில் தமிழ்மக்கள் ஒரு பலமான பேரம் பேசும் சக்தியாக இல்லை. அதனால்தான் தமிழ்மக்களின் தலைவிதியை பெருமளவுக்கு வெளிச் சக் திகளே தீர்மானிக்க முயற்சிக்கின்றன. ஜெனிவாவில் தீர் மானங்களை நிறைவேற்றுகிறார்கள். அல்லது, துவாரகா வருகிறார் என்று படங்(?) காட்டுகிறார்கள். அல்லது தமிழ் மக்களுக்குத் தெரியாமல் ஒரு பிரகடனத்தைத் தயாரித்துவிட்டு, அதைக் கொழும்பில் வைத்து வெளியிடுகிறார்கள். தமிழ் மக்களுக்கு யார் பொறுப்பு?

நன்றி: நிலாந்தன்

# தமிழ் மரபுத் திங்கள்
## Tamil Heritage Month
ஜனவரி 2024



தாய் தேசத்தின் நினைவு சுமந்து நடப்போம்!
மண்மீட்பினை தம் இரத்தத்தோடும் கனவோடும் சுமந்து
சரித்திரமாகிய எம் வீரர் பணி தொடருவோம்!
இடரிலும் தளரிலும் சிக்கும் எம் வாழ்வை மீட்டு
நிலவு பொழியும் எம் முற்றத்தில் திளைப்போம்!
இந்தப் புத்தாண்டில், வரும் பொங்கல் திருநாளில்
புது வாழ்வுக்குள் காலடி எடுத்து வைக்க
வாழ்த்துகின்றோம்!




# தாய்க்கு நிகரானவன்

சிறுகதை

சூரியக் கதிர்கள் வானில் சுடராயின. உயிர்ப்புற்று எழுந்தது காடு. குளிர்காற்று வீசிக் கொண்டிருந்தது. ஆற்றுநீர் கற்களை ஊடுருவிப் பாயும் ஓசையும், பறவைகளின் கீதமும் மனதுக்கு ரம்மியமாக இருந்தன.

விடுதலைப் புலிகளின் புனித இலட்சியமாம் சுதந்திர, சமதர்மத் தமிழீழம் காண எனது உடல், உயிர், ஆன்மா அனைத்தையும் அர்ப்பணித்துப் போராடுவேன்...

எனச் சத்தியப்பிரமாணம் செய்துவிட்டு புதிய தோழர்கள் தமது பயிற்சியை ஆரம்பித்துக் கொண்டிருந்தார்கள்.

சூரியப் பிரகாசமான முகம், வெண்ணிற ஒளிரும் பற்கள், கூர்விழிப் பார்வை, படை அணித் தலைவனின் கம்பீரம் திகழ்கின்ற நடையோடு பயிற்சிக் களத்தில் தோழர்களின் பயிற்சியை உன்னிப்பாக அவதானித்துக் கொண்டு வருகிறான் கஜன். தற்காப்பு யுத்த முறைப் பயிற்சிகளையும் அவர்கள் பெற்றுக் கொண்டிருந்தார்கள்.

பயிற்சி முடிந்து இரவு வேளைகளில் எல்லோரும் அவனைச் சுற்றி உட்கார்ந்து கொண்டு மண்ணில் வீரம் விளைந்த கதையை கேட்டுக் கொண்டிருப்பார்கள். அவன் உணர்ச்சிக் கலவையுடன் கதை சொல்லிக் கொண்டிருப்பான்.

ஆயிரம் கேள்விக் கணைகளோடு தோழர்களின் விழிகள்; முறை வைத்துக் கொண்டு கேள்விகளைத் தொடுப்பார்கள். அவன் அலுக்காது சொல்லிக் கொண்டிருப்பான்.

அவனோடு தோழர்கள் பயிற்சி எடுத்துக் கொண்டிருந்த நாளில் ஒரு இளைய தோழன் கடுமையான சுரத்தால் பாதிக்கப்பட்டு விட்டான்.

நெருப்புத் தணலை ஒத்த வெப்ப அனல் அவனது உடலிலிருந்து வீசியது. அப்பு, ஆச்சி ஏலாமக் கிடந்து அனுங்கிறது மாதிரி அவன் நோயால் அனுங்கினான்.

பெய்த மழையில் முகாமின் தரைப்பகுதி வேறு ஊற்றுக் கண்டு விட்டது. குளிரைச் சுமந்த காற்று சீலைக் கூடாரத்தை விலக்கி, விலக்கி பெயர்த்து விடுவது போல் ஊதியது. குறண்டி இழுத்துப் போர்த்துக் கொண்டு தோழர்கள் படுத்துக் கிடந்தார்கள்.

முகாம் அமைந்திருந்த சூழலைச் சுற்றி எதிரியின் நடமாட்டமோ, உளவாளிகள் நடமாட்டமோ இருக்கிறதா என்பதை அவதானித்துவிட்டு சற்று முந்தி வந்து படுத்திருந்த கஜனுக்கு அந்தத் தோழனின் அவலமான நிலையை உணர்த்தும் ஒலி காதுகளில் அறைந்து கொள்கிறது.

பதட்டமின்றி பொறுப்போடு அந்த தோழனிடத்து சென்றான். மலேரியாக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருக்கிறான் என்பதை அறிந்து நோய்க்குரிய மருத்துவம் செய்தான். ஆற்றங்கரையை நோக்கி நடந்து ஈரலிப்பற்ற வெண்மணலை அள்ளிவந்து பரப்பி அந்தத் தோழனது படுக்கையை ஈரலிப்பற்றதாகவும் மிருதுவாகவும் ஆக்கினான். அவனது உள்ளங்கால்களை நன்றாக அழுந்தத் தேய்த்து சூடாக்கினான்.

அந்தச் சின்னத் தோழன் காய்ச்சல் வெக்கையில் ஏதேதோ புலம்பினான். இடையிடையே "அம்மா, அம்மா" என்ற வார்த்தைகள் தெளிவாகக் கேட்டன. அவனது முனகல் சத்தம் மெல்ல மெல்ல குறைந்து போயிற்று. அமைதியானதொரு தூக்கம் அவனை பற்றிக்கொண்டது. கஜனது இமைகள் தூக்கத்திற்காக கெஞ்சின.

சிறிது கண்ணயர்ந்த கஜன், திடுக்கிட்டு விழித்து, நேரத்தைப் பார்த்தான். சாமம் 2 மணி, முகாமைச் சுற்றி காவலில் நிற்கும் தோழர்களை சந்தித்துக் கொண்டு வரப் புறப்பட்டான். அவன் சுற்றிப் பார்வையிட்டுக் கொண்டு ஒவ்வொரு காவல் நிலைகளிலும் நிற்கும் தோழர்களிடம் சென்று கொண்டிருக்கையில் ஆற்றங்கரைக்கு முன்பாக இருந்த நிலையில் வெண்மணற் பரப்பில் மருத மரத்துக் கீழே நின்றுகொண்டிருந்த தோழன் கண்ணயர்ந்து விட்டான். கஜன் அவனருகில் சென்று அவனது பெயரைச் சொல்லிக் கூப்பிட்டான். காட்டில் அவன் பெயர் மீண்டும் ஒருகணம் எதிரொலித்தது.

திடுக்கிட்டு எழுந்தான் அந்தத் தோழன்.

"என்னம்மான இது?"

அவன் பதிலேதும் பேசாது நின்றான்.

காற்று மர உச்சிகளை கிழித்துக் கொண்டு சீழ்க்கை ஒலியால் கூவியது. ஆற்று நீரின் வேகம் அதிகரித்திருந்தது. நிலவை முகில்கள் மறைத்திருந்தன. இருட்டாயிருந்தது.

"மீண்டும் என்னம்மான்?"

"இல்லை..." அவன் ஏதோ சொல்ல வாயெடுத்தான்.

"நீ இல்லை இப்ப, செத்திட்ட அம்மான். உன்னை நம்பி அங்க தூங்கிக் கொண்டிருக்கிற தோழர்களும் செத்துப் போட்டினம்."

"என்னம்மான் சுகமில்லையா? களைப்பாயிருக்கிறியா? அப்படி ஏதுமெண்டா ஏனம்மான் என்னட்டை சொல்லக்கூடாதே?"

"அம்மான் உங்களுக்கு இதைப் பற்றி நான் பிரசங்கம் செய்யத் தேவையில்லை. தூங்கிப் போனோமோ போக வேண்டியது தான் எல்லோரும்."

தேசத்தின் விடிவிற்காக எரியும் தீபமாயிருந்தாலும் கடும் குளிர்காற்று ஊத, காட்டிடையே நுளம்பு குத்த, அலுப்பும் சோர்வும் அவனையும் அறியாது கண்ணைச் சொருக, வீட்டார் நிலையெண்ணிக் கலங்கிவிட, இருப்பை மறந்து தூங்கிப் போய்விட்டான்.

எப்படியாயினும் இது பெரிய குற்றம். அவனை நம்பி எத்தனை



# தாய்க்கு நிகரானவன்

உயிர்கள் முகாமில்.

கஜனது முகம் சீற்றத்தில் கொப்பளிக்கவில்லை. ஆயினும் கடுமையாக இருந்தான். பிரம்பைப் கையாளாதவன்தன் பிள்ளையைக் கெடுக்கிறான்.

ஆயிரம் தோப்புக்கரணங்கள் அவனுக்குத் தண்டனையாகக் கொடுக்கவேண்டும்.

என்ன செய்வது ஆற்றின் கரையில் குறுக்கும் நெடுக்கும் நடந்தான்.

பயிற்சி முகாம், பயிற்சி எடுத்துக் கெணர்டிருக்கிறார்கள் என்று விட்டுவிடுவதா? அல்லது தண்டிப்பதா? ஏதோ யோசித்தவன், பின்னர், “நான் உனக்காக காவலில் நிக்கிறன. நீ போய்ப் படுத்துக்கொள்” என்று கூறி ஆயுதத்தை வாங்கப்போனான்.

அந்தத் தோழன் தனது பிழையை உணர்ந்துகொண்டு மனம் கலங்கினான்.

சிலவேளைகளில் கஜன் தோழர்களோடு சேர்ந்து விளையாடு வான். முகாமில் சமைத்த உணவுகளை அவர்களுக்கப் பரி மாறுவான். அவர்கள் ஒழுங்காக உடற்பயிற்சிகளை மேற் கொள்ளுகிறார்களா என அவதானிப்பான். அவர்களின் ஆயு தங்களை வாங்கிப் பரிசோதிப்பான். இப்படி முகாமைச் சுற்றி வந்துகொண்டிருக்கையில், ஒரு தோழன் மரத்தில் முதுகைச் சாய்த்தவாறு கவலை தோய்ந்த முகத்தோடு உட்கார்ந்திருப் பதை அவதானித்தான்.
அவனைத் தனியே அழைத்துச் சென்று ஆற்றங்கரை மேட் டில் இருந்து பேசினான்.

“என்னம்மான் சொல்லு.”

“எனக்கு இங்க இருக்கப் பிடிக்கவில்லை. நான் வீட்டை போகப் போறன்.”

கடினமான உடற்பயிற்சி, புதிய சூழல், புதியதோர் வாழ்க்கை இவற்றை எல்லோரும் மனம் ஒருமித்து வாழ்ந்துவிட முடியாது தான் என உணர்ந்துகொண்ட கஜன்.

“என்னம்மான் உனக்கு என்னைப் பிடிக்கலையோ?”

“இல்லை எனக்கு இங்க இருக்கப் பிடிக்கவில்லை.”

“அப்ப எனக்குப் பிடிக்குதே?

எனக்கு வீட்டுப் பாசம் இல்லை என்றா நினைக்கிறாய்?”

“நாங்களெல்லாம் பயிற்சி எடுத்து ஆமியை அடிச்சுக் கலைப்பது தானே முக்கியம். இல்லாட்டி இப்படி காடு மேடெல்லாம் நம்மிட சனம் தான் அலையும்.”

அந்தத் தோழன் எதையோ புரிந்துகொண்டவனாக பிரகாசம் முகத்தில் பொருத சிரித்து நெடுநேரமாக கஜனோடிருந்து பேசிக் கொண்டிருந்தான்.

துணிவு மிக்க கெரில்லாப் படை அணியொன்று உருவாகி விட்டிருந்தது.

செங்கதிர் வீச்சில் பசிய காடு நிமிர்ந்தது. வெண்ணிறக் கொக் குகள் மருத மரத்திலிருந்து ஆகாயத்தில் சிறகடித்துப் பறந்தன. வானரங்கள் குதித்து விளையாடின. பூக்கள் மலர்ந்து சிரித்தன்.

இராணுவக் கெடுபிடி மிகுந்த எல்லைப் பகுதிக்கு படையணி யினர் நகர ஆயத்தமாகிக் கெண்டிருந்தார்கள்.

கஜன் படையணிகளின் முன் நின்றுகொண்டிருந்தான். ஒரு படை அணியை உருவாக்கி விட்டு உயர்ந்து நின்றான். அவன் ஒரு பொறுப்பாளன், அவன் அந்தத் தோழர்களுக்கு அன்னை யாய், தந்தையாய், அத்தனை பெரும் உறவாய் நின்றவன். அவர்களோடு அவன் காட்டு எல்லையைக் கடந்து சென்றான்.

காற்று வெளி...

தூரத்தே உள்ள கிராம வயல்களில் உள்ள நெல் நாற்றின் பசிய மணம் சுமந்த காற்று அவன் நாசியில் புகுந்தது. ஒவ்வொருவ ராக கட்டி அணைத்து வழியனுப்பிக் கொண்டிருந்தான்.

அவன் வளர்த்தவர்கள். அவன் உருவாக்கியவர்கள். தாய்க் குரிய அத்தனை துன்பமும், இன்பமும் அவர்களோடு அவன் பட்டிருக்கிறான்.

பயிற்சிக் காலத்தில் அவர்களின் குறும்புகள், அவர்களின் அன்பான சண்டைகள் அவன் கண்களில் நிழலாடின. அவர்கள் கையசைத்தவாறு நடந்து கொண்டிருந்தார்கள்.

வானம் நிர்மலமாக இருந்தது.

கஜன் அந்த மருத மரத்தில் முதுகைச் சாய்த்தவாறு நின்றான். அந்த அணி வானின் எல்லைவரை சென்று துளியாய் மறையு மட்டும் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனின் கண்கள் பனித்தன.

அப்போது வீசியகாற்று ஆற்றொழுக்கைக் காயவைக்க எடுத்த முயற்சி தோல்லி கண்டது.

கண்களை மூடி கனவு காண்பவனைப் போலிருந்தான்.

முகத்தில் சிரிப்பும் வேதனையும் மாறி மாறிப் படிந்தன.

- எரிமலை தை 1992


31ஆம் ஆண்டு
வீரவணக்கம்
மேஜர் வேலன் (மலரவன்)
(சுந்தரலிங்கம் சுந்தரவேல்)
வியாபாரிமூலை, பருத்தித்துறை
கேணல் கிட்டு
(சதாசிவம் கிருஷ்ணகுமார்)
வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்
கடற்புலி கப்டன் நாயகன்
(சிவலிங்கம் கேசவன்)
பொலிகண்டி, வல்வெட்டித்துறை
கடற்புலி கப்டன் ஜீவா
(நடராசா மார்க்ஜெயராஜ்)
கொய்யாத்தோட்ட ஒழுங்கை,
பாசையூர், யாழ்ப்பாணம்
கடற்புலி லெப். தூயவன்
(மகாலிங்கம் ஜெயலிங்கம்)
கண்டிவீதி, யாழ்ப்பாணம்
கடற்புலி குணசீலன்
(சேகரன்குருஸ் மைக்கல்ஜீவா)
2ம் குறுக்குத்தொரு,
உதயபுரம், மணியம்தோட்டம்
கடற்புலி லெப். நல்லவன்
(சிவஞானசுந்தரம் ரமேஸ்)
மணியந்தோட்டம், கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்
லெப். கேணல் குட்டிசிறி
(இராசையா சிறிகணேசன்)
சுதமலை வடக்கு, யாழ்ப்பாணம்
கடற்புலி கப்டன் றொசான்
(அரத்தினசிங்கம் அருணராசா)
அரசடி வீதி,
நலலூர், யாழ்ப்பாணம்
இந்திய ஆக்கிரமிப்புச் சதிக்கு உள்ளாகி
தமிழர் கடலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட
வேங்கைகளின் முப்பத்தி ஓராம் ஆண்டு
நினைவு வணக்க நாள் - 16.01.2024
கடற்புலி லெப். அமுதன்
(அலோசியஸ் ஜான்சன்)
2ம் குறுக்குத்தெரு, நாவாந்துறை
வடக்கு, யாழ்ப்பாணம்
சங்கத்தமிழ்